https://telegram.me/tamilbooksworld

பிரேமா பிரசுரம்

If you want more free e-Books (Pdf)?

# அசோகன் காதலி

சரித்திர நாவல்



அரு. ராமநாதன்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?




‘அரு. ராமநாதன்’

எழுதிய சரித்திர நாவல்

பிரேமா™

பிரசுரம்
59, ஆற்காடு சாலை,
கோடம்பாக்கம்,
சென்னை – 600 024.

044-24800325, 24833180. : 9486000325
e-mail : aruram@premapirasuram.com
website: www.premapirasuram.com

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

**பிரேமா பிரசுரம் - 75**
ஐந்தாம் பதிப்பு : மே 2016


© சகல உரிமைகளும் பெற்றது.

## இந்நூலாசிரியரின் இதர நூல்கள்

வீரபாண்டியன் மனைவி 3 பாகங்கள்
வெற்றிவேல் வீரத்தேவன்
இராஜராஜ சோழன் (நாடகம்)
குண்டுமல்லிகை – சமூக நாவல்
கிளியோபெத்ரா
பழையனூர் நீலி
சுந்தரரின் பக்தியும் காதலும்
அரு. ராமநாதன் சிறுகதைகள்
காலத்தால் அழியாத காதல்
நாயனம் சௌந்தர வடிவு

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?



முன்னுரை

நம் சுதந்திரக் கொடியில் இருப்பது அசோகச் சக்கரம்! அது நம் புராதனக் கலாசாரத்தைக் குறிக்கும் ஓர் அற்புதச் சின்னம். அன்பையும் அஹிம்சையையும் சமதர்மத்தையும் குறிக்கும் அந்தத் தர்மச் சக்கரம், அசோகன் ஸ்தூபி யொன்றில் காணப்படுகிறது.

கி.மு. 273—232க்கு இடையில், மகதப்பேரரசை அரசாண்ட அசோகன், அதாவது சுமார் 2200 வருஷங்களுக்கு முன் வாழ்ந்த மூன்றாம் மௌரிய மன்னனான அசோகச் சக்கரவர்த்தி, இந்திய சரித்திரத்திலேயே ஈடும் எடுப்புமற்ற தலை சிறந்த அரசனாக விளங்குகிறான்!

அவன்தான் முதன்முதலில் முடியரசின் ஏதேச்சாதிகாரத் தன்மைகளைத் தவிர்த்து, மக்களுக்காக மக்களால் ஆளப்படும் குடியரசு தத்துவத்தை (State Socialism) அரசியலில் கையாண்டு வெற்றி கண்டவன். அவன்தான் முதன்முதலில், அன்பையும் அஹிம்சா சமதர்மத்தையும் அடிப்படையாகக் கொண்ட, எல்லோரும் ஓர் குலம் என்ற சாதிமதச் சார்பற்ற ஒரு புது அரசியல் திட்டத்தை, உலகிற்குக் காட்டியவன். அவன் தன் அதிகாரிகளை ஒரு வரம்புக்கு உட்படுத்தி ஒரு சிறு அதிகாரியின் மூலமாவது நிர்வாக ஊழலும் கொடுங்கோன்மையும் தலை காட்டாதவாறு மக்கள் குழுக்களையும் பரிசோதகர்களையும் ஏற்படுத்தி எல்லோருக்கும் பாரபட்சமின்றி நீதியும் கருணையும் கிடைக்குமாறு செய்தான். அவன் தன் கல்வெட்டு ஒன்றில் தேச மக்களுக்கு அரசன் தந்தையைப் போன்றவன் என்றும், அதிகாரிகள் குழந்தைகளை அன்புடன் வளர்க்கும் செவிலித்தாய் போன்றவர்கள் என்றும் குறிப்பிடுகிறான். அவன் காலத்தில், ஆரியர், ஆரியர் அல்லாதார் என்ற பேதங்களும், ஜாதி உயர்வு தாழ்வு என்ற பிணக்குகளும், மக்களைப் பிரிக்கும் பல சனாதன தர்மக் கொள்கைகளும் உடைத்தெறியப்பட்டு எல்லோரும் ஓரினம், எல்லோரும் ஓர் நிறை, எல்லோரும் இந்நாட்டு மன்னர், எம்மதமும் சம்மதம் என்ற சமதர்மக் கொள்கை அரசியல் மூலம் மக்கள் மனதில் வலியுறுத்தப்பட்டது. புத்தர் போதித்த ஜீவகாருண்ய கொள்கைகளையும், மக்கள் அதிகாரிகள் கடைப் பிடிக்க வேண்டிய ஒழுக்கங்களையும் நாடெங்கும் அசோகன் பரப்பினான.

தன்னாட்டிலுமின்றி பிற நாட்டினரும் அந்த அன்புக் கொள்கையின் இன்பத்தைப் பெற வேண்டுமென்று, இலங்கை, யவனம், தமிழ்நாடு, சிரியா போன்ற பல திசைகட்கும் தூதர்களை அனுப்பினான். அவன் பேரரசு, செந்தமிழ் நாடுகளைத் தவிர, இந்தியா முழுவதும் பரவியிருந்தது. அன்பினாலன்றி வாளோடு வருபவர் எவரையும் தென்னாட்டில் நுழைய விடாத தமிழ் வேந்தர்கள், அசோகன் அனுப்பிய தூதர்களை அன்போடு வரவேற்று உபசரித்தார்கள். அசோகன் கொள்கைகளை அறிந்து உள்ளம் மகிழ்ந்தார்கள். இத்தகைய கொள்கைகள் தன் காலத்தோடு மறந்து விடாமல் என்றென்றும் காலத்தால் அழியாமல் நிலைத்திருக்க வேண்டுமென்று அசோகன், பிரம்மாண்டமான தர்ம ஸ்தூபிகளையும் கல்வெட்டுகளையும் நாடெங்கும் எழுப்பினான், சரித்திரத்தில் என்றும் மறையாத புகழ் கொண்டான்.

ஒரு சமயம் அசோகனின் தந்தையான பிந்துசார மன்னன், தனக்கு யவனர் மதுவும் அத்திப் பழமும் ஒரு கிரேக்க தத்துவஞானியும் வேண்டுமென்று சிரியா மன்னனுக்கு எழுதிக் கேட்டானாம், அதற்குச் சிரியா மன்னன், யவனர் மதுவும் அத்திப் பழமும் அனுப்பி, தத்துவ ஞானியை விலை கொடுத்து வாங்கும் வழக்கம் தன்னாட்டில் இல்லை என்று பதில் எழுதினானாம். தந்தையைப் போலவே அசோகனும் பல நாட்டு தத்துவங்களையும் ஆராய்ந்தான். அவற்றிலுள்ள நன்மைகளை எல்லாம் திரட்டி, புத்தரின் அறவழியைப் பின்பற்றி ஒரு அன்பு சமுதாயத்தை உருவாக்கினான். அவனுக்கு ஆதிக்க வெறி இல்லை. கலிங்கப்போர் வெற்றிக்குப் பின், தன்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

முன்னோர்கள் எவரும் கைப்பற்ற முடியாத தமிழ் நாட்டின் மீதும் படையெடுத்துப் பார்க்க வேண்டுமென்ற எண்ணத்தையும் கை விட்டான். அன்பால் உலகம் முழுவதையும் ஆளலாம் என்ற உண்மையைத் தெரிந்து கொண்டான். இத்தகைய உயர்ந்த பண்புகள் வாய்ந்த உத்தம மன்னன், புத்த மதத்தைப் பின்பற்றுவதற்கு முன்னால் மிகவும் கொடியவனாய் இருந்தான் என்றும், தன் 99 சகோதரர்களைக் கொன்ற குருதி வெள்ளத்தில் நீந்தித்தான் சிம்மாசனம் ஏறினான் என்றும், கலிங்கப் போரின் வெற்றியால் ஏற்பட்ட எண்ணற்ற உயிர் கொலைகளைக் கண்ட பிறகுதான் மனம் மாறி புத்தரின் அறவழிகளைப் பின்பற்றினான் என்றும் சில சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள். அவனுடைய கல்வெட்டுகளின் வாசகப் போக்கைப் பார்க்கும்போது அவன் ஓரளவு கொடியவனாகத்தான் இருந்தான் என்றும் கருத முடிகிறது. அசோகனே தன் கல்வெட்டு ஒன்றில், தான் தன்ம யாத்திரை புரிவதற்கு முன்னால் விகார யாத்திரை புரிந்ததாகச் சொல்லுகிறான்.

அவனுக்கு ஐந்து பத்தினிகள் உண்டென்றும், அவர்களில் காரூவகி என்பவள் அசோகனின் பிரீதிக்கு மிகவும் பாத்திரமானவள் என்றும் சரித்திராசிரியர்கள் சொல்லுகிறார்கள். அவள் அசோகனின் காதலியாக இருந்தாள் என்றும், அவள் அசோகனின் தர்ம காரியங்களில் பெரிதும் பங்கெடுத்துக் கொண்டவள் என்பதும் அசோகன் கல்வெட்டு ஒன்றில் பொறிக்கப்பட்டுள்ளது என்றும் இ.பி.ஹாவெல் என்ற சரித்திராசிரியர் தம் நூலில் குறிப்பிடுகிறார்.


இக் குறிப்புகளைக் கொண்டு, அசோகன் ஹிம்சை வழியில் இருந்து அஹிம்சை வழி திரும்பியதற்குக் கலிங்கப்போர் மட்டும் காரணமல்ல, காரூவகியின் காதலும் ஒன்றாகும் என்ற அடிப்படையான கருத்தை வைத்துக் கொண்டு, இந்தக் கற்பனைக் கதையை உருவாக்கினேன்.

இக் கதையைப் பின்னுவதற்கும், சரித்திர ஆராய்ச்சி செய்வதற்கும் உதவிய முக்கிய நூல்கள்:

1 A Political and Cultural History Of India Vol.1 by R. Sathianatha Iyer M.A.L.T.
2 The History Of Aryan rule in INDIA by E.B.Howel
3 இந்தியர் வரலாறு, முதல் பாகம் by S.K. கோவிந்தசாமி பிள்ளை அவர்கள், எம். ஏ.
4 The Historical Inscriptions Of Southern India By Robert Sewell and S.K. Aiyangar.
5 ASOKA, an article by David Bury.
6 Collected works of R.G. Bhandarker Vol.III

அ

ராமநாதன்




அசோகச் சக்கரம் சுழல்வதற்கு முன்னால்...

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

2214 வருஷங்களுக்கு முன், அசோகச் சக்கர வர்த்தி அஹிம்சையின் சமதர்மச் சக்கரத்தை நாடெங்கும் சுழற்றுவதற்கு முன்னால், ஹிம்சையும் கொடூரச் செயல்களும் புரியும் சாம்ராஜ்ய வெறி படைத்த இராஜ குமாரனாய் இருந்த காலத்தில்...

அதாவது, அசோகன் தன்ம யாத்திரை புரிவதற்கு முன்னால், விவஹார யாத்திரை புரிந்து கொண்டு இருந்த சமயம்...



அத்தியாயம் 1

## போர்க்கொடியும் பூங்கொடியும்

**"ஆசை, துவேஷம், பிரமை, அச்சம்— இந்நான்கின் மூலமாகத் தவறான வழியில் சென்று மனிதன் தீச்செயல்கள் புரிகிறான்."**

—தீர்க்க நிகாயம்

ஒரு நாள்.

பள்ளியறையில் நுழையும் குமரியின் உதடுகள் போல் அந்தி வானம் சிவக்கத் தொடங்கும் நேரம்.

எங்கும் இருள் கவிந்தது. தக்ஷசீலத்திலுள்ள சந்தைப் பொட்டலில், கண்ணுக் கெட்டிய தூரம் வரை, வரிசை வரிசையாகத் தீப்பந்தங்கள் தெரிந்தன. அந்தச் சிவந்த வெளிச்சத்தில் இருளோடு இருளாய் நெருப்புக் கோளங்கள் போல் நூற்றுக் கணக்கான போர் வீரர்களின் கூடாரங்களும், பட்டொளி வீசிப் பறக்கும்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

மகத சாம்ராஜ்யத்தின் கொடிகளும் தென்பட்டன. கூடாரங்களில் ஓரளவு போர் வீரர்களின் ஆரவாரங்கள் அடங்கி இருந்தன.

பயங்கரமான பாராக்காரர்கள், கையில் தீப்பந்தங்களைக் கொளுத்திப் பிடித்துக் கொண்டு கூடாரங்களைச் சுற்றிச் சுற்றி வந்தார்கள். ஹிந்து மத சந்நியாசிகள், தக்ஷசீலத்தின் கலகம் அடங்கி மகத சாம்ராஜ்யத்தின் அதிகாரம் ஓங்குவதற்காக மந்திரங்களை உச்சரித்துக் கொண்டிருந்தார்கள்.

காவித் துணிகளைப் போர்த்திக்கொண்டு அழகான யுவதிகள் இருளோடு இருளாய்ப் போர்வீரர்களின் கூடாரங்களில் நுழைந்து கொண்டிருந்தார்கள்.

கூடையில் புறா இறைச்சிகளையும், கூடை கொள்ளாமல் நழுவி விழும் சுட்ட கடல் மீன்களையும் சில வீரர்கள் சுமந்து சென்றார்கள்.

தூக்குமேடை, வெட்டுப் பாறை முதலானவைகளில் கிடக்கும் அழுகிய பிணங்களின் நாற்றமும், அதைச் சுற்றி எரியும் எண்ணெய்க் கொப்பரைகளில் தக்ஷசீலப் புரட்சிக்காரர்களின் சாவோலங்களும், அதிகாரிகளின் கூடாரங்களில் இளம் பெண்களின் மெல்லிய சிரிப்பொலிகளும், சந்நியாசிகளின் மந்திர முனகல்களும் காற்றில் கலந்து வந்தன.

அந்தப் பிராந்தியம் முழுவதும் ஒருவிதப் பயங்கரமான சந்தடி நிலவியிருந்தது. கிரேக்க வீரர்கள் காவல் புரியும் இரத்தினப் படுதா விரித்துள்ள இரண்டாவது கூடாரத்தில், மகத சாம்ராஜ்யபதி பிந்துசார மன்னரின் இளைய குமாரனான அசோகன், மது ஜாடிக்கு முன்னால் அமைதியற்று உட்கார்ந்திருந்தான். தக்ஷசீலத்தின் கட்டுக்கடங்காத கலகத்தை அடக்கி வந்தால் மூத்த இராஜகுமாரனான சுசீமனுக்குரிய மகத சாம்ராஜ்யத்தின் யுவராஜப் பட்டத்தை அசோகனுக்கு அளிப்பதாக பிந்துசார மன்னர் வாக்குறுதி அளித்திருந்தார். காட்டுத் தீப்போல் பெருகும் தக்ஷசீலக் கலகத்தை எப்படிச் சாமர்த்தியமாக அடக்குவது, தன் மூத்த சகோதரனான நயவஞ்சகச் சுசீமனை எப்படி ஒழிப்பது, காவியுடை தரித்த ஹிந்து சந்நியாசியும் மகா தந்திரியுமான சாணக்கியரின் பிரீதியை எப்படி சம்பாதித்து, எவ்வாறு மகத அரசர் பதவியை அடைவது, அரசனான பிறகு எப்படி சாணக்கியரின் சூத்திரக் கயிற்றிலிருந்து தன்னை அறுத்துக் கொள்வது என்றெல்லாம் அசோகன் பல திட்டங்களை உருவாக்கிக் கொண்டிருந்தான்.



இருபத்தி ஏழாவது கூடாரத்தில், அசோகனின் மாற்றாந்தாய் மகனும் மூத்த சகோதரனுமான சுசீமன் இரத்தப் பசி கொண்ட சிங்கம் போல் உறுமிக் கொண்டு இருந்தான். தனக்குரிய யுவராஜப் பட்டத்திற்கு போட்டியிடும் அசோகனை எப்படித் தந்திரமாக ஒழிப்பது, இராஜதந்திரி சாணக்கியரின் சாகஸமும் உதவியும் கிடைத்தால், அசோகன் மீது பிந்துசார மன்னருக்கு வெறுப்பு ஏற்படும்படி செய்து அசோகனை இரகசியமாகத் தொலைத்து விடலாமே, சாணக்கியரின் பிரீதி தன் மீது அதிகமாக இருந்தும், சாணக்கியர் அசோகனை அடியோடு வெறுக்கும்படிச் செய்ய ஒரு சந்தர்ப்பமும் கிடைக்க வில்லையே என்றெல்லாம் சுசீமன் யோசித்துக் கொண்டு ருந்தான்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?




Click Here to join our Telegram Group

For free eBooks, join us on Telegram

https://t.me/tamilbooksworld

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

அதோடு முதல் நாள் நடு நிசியில் கடைசிக் கூடாரத்தில் இருந்து தக்ஷசீலத்தின் அதிகாரி தேவசேனன் கொலை செய்யப்பட்டுக் கிடந்த காட்சி சுசீமனின் கண் முன் வந்து நின்று, அவனை இரத்தவெறி பிடித்த மிருகமாக்கி யிருந்தது. கொலையுண்ட தக்ஷசீல அதிகாரியான தேவசேனன், சுசீமனின் சூழ்ச்சித் திட்டங்களுக்கு முக்கியஸ்தனாகவும் வலதுகரமாகவும் இருந்தவன். தக்ஷசீலத்தில் பெருகி வரும் பௌத்த மதத்தின் சமதர்மக் கொள்கைகளைப் பரவவிடாமல் தடுக்கப் பல பயங்கரமான வழிகளையும் கடைப்பிடித்து, ஹிந்து மதத்தின் ஜாதிப் பிரிவினைகளை வலியுறுத்தி சாணக்கியரின் அபிமானத்தையும் பெற்ற அதிகாரி. அந்த தேவசேனன் மூலமாகத்தான் சாணக்கியரின் சூழ்ச்சி அனுசரணையைப் பெற வேண்டுமென்று சுசீமன் நம்பியிருந்தான்.

அந்த தேவசேனனை நேற்று நடு நிசியில் கூடாரத்தில் ஒரு புரட்சிக் காரனும் ஒரு வேவுகாரியும் சேர்ந்து கொலை செய்து போட்டு விட்டு, வீரர்களின் கையில் அகப்படாமல் தப்பி ஓடி விட்டார்கள். சுசீமனின் வலது கரம் ஒன்று ஒடிந்துவிட்டது. அந்தக் கொலைகாரனும் வேவுகாரியும் அகப்பட்டால், அவர்கள் இருவரையும் உயிரோடு வைத்துத் தோலை உரித்துத் தன் வேட்டை நாய்களுக்குப் போடவேண்டுமென்றும், அந்தக் கொலைக் குற்றம் எப்படியாவது அசோகன் மீது விழும்படி தந்திரம் செய்து, அசோகன் மீது சாணக்கியருக்குத் தீராப்பகையை மூளச்செய்ய வேண்டும் என்றும் உறுமிக் கொண்டிருந்தான், சுசீமன் தன் கூடாரத்தில்.

காவித் துணியால் புனைந்த முப்பத்திரண்டாவது கூடாரத்திலோ, மகத சாம்ராஜ்யத்தின் இணையற்ற இராஜதந்திரி சாணக்கியர் இரண்டு இராஜ குமாரர்களையும் ஒதுக்கிவிட்டு, தம் சூத்திரக் கயிற்றில் ஆடக்கூடிய ஒரு புதுப் பொம்மை ராஜாவை எங்கிருந்து கொண்டு வரலாமென்று தாம் எழுதிய கௌடில்ய சாஸ்திரத்தின் ஒவ்வொரு ஏட்டையும் புரட்டிக் கொண்டிருந்தார்.

மீதியுள்ள இருநூற்றி இருபத்திரண்டு கூடாரங்களிலுள்ள அரசியல் அதிகாரிகள், சேனாதிபதிகள் ஒவ்வொருவரும், பிந்துசார மன்னருக்குப் பிறகு சாணக்கியர் உருட்டப்போகும், இராஜதந்திரப் பகடைகளில் அசோகன் கட்சியில் நிற்பதா, சுசீமன் கட்சியில் நிற்பதா, எதில் அதிக ஆதாயமுண்டு என்று இப்போதே சிந்திக்க ஆரம்பித்து விட்டார்கள்.

அங்கே கூடாரங்களிலுள்ள ஒவ்வொரு வீரனும், அதிகாரியும் பலவிதப் பேய்த்தனமான ஆசைகளுக்கும் மனப் பிராந்திகளுக்கும் தங்கள் உள்ளத்தைப் பலிகொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஒருவருக்கும் மனதில் நிம்மதியில்லை. உறக்கமும் இல்லை. கண் இமைகளைத் திறக்கவும் முடியவில்லை. திறந்தால் ஒவ்வொரு அதிகாரியின் கண்ணெதிரிலும் கொலையுண்ட தேவசேனனின் ஆவியும் புரட்சிவாதிகளின் குத்து வாள்களும் தென்படத் தொடங்கின. இருட்டில் அசோகனின் கூடாரத்திற்கருகில் ஏதோ சந்தடிகளும் சற்றுத் தொலைவில் சில போர்வீரர்கள் மெல்லப் பேசும் குரல்களும் கேட்டன. அசோகன் தன் காதுகளைக் கூர்மையாக வைத்துக்கொண்டான்.

"அதோ கிரேக்க முரடன் காஸியஸ் இழுத்துக் கொண்டு போகிறானே அந்த அழகான பெண்... pp அவளை உயிரோடு தீயில் வைத்துக் கொளுத்தப் போகிறார்களாம்."

"இல்லை. அவளுடைய அழகான மேனியில் கரும்புள்ளி செம்புள்ளி குத்திக் கோவேறு கழுதைமேல் வைத்து இந்த தக்ஷசீல வீதிகளெங்கும் ஊர்வலம் விடப்போகிறார்களாம்."

"ஏன்?"

"அவள் கள்ளங்கபடு தெரியாத அழகான பௌத்த மதப் பெண்ணாயிருக்கிறாளே. அது ஒன்று போதாதா?"

"இதென்ன அநியாயம்? பௌத்த மதத்தைச் சேர்ந்த பெண் என்பதற்காகவா இந்த அக்கிரமம்? அப்படியானால் இந்த தக்ஷசீலத்தில் இன்னும் புரட்சி கட்டுக்கடங்காமல் அதிகமாகும். நாம் கூட மகத சாம்ராஜ்யத்தின் போர்ப் படைகளை விட்டுத் தக்ஷசீல புரட்சிவாதிகளோடு சேர்ந்து விடுதலைப் போர் துவக்க வேண்டியதுதான்!"

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

"உஷ்! மெல்லப் பேசு. நம் மேலதிகாரிகளின் காதுக்கு எட்டினால் உன்னையும் என்னையும் உயிரோடு தீயில் வைத்துக் கொளுத்தி விடுவார்கள்!"

"அவள் என்ன குற்றம் செய்தாள்?"

"ஒருவேளை அந்த அழகான பெண் நம் ராஜகுமாரர்களின் கூடாரங்களுக்குப் போக மறுத்து விட்டாளோ?"

"ஒருவேளை நம் குரு மந்திரி சாணக்கியரோடு ஹிந்து மதத்தின் ஜாதிப் பிரிவினைகளை எதிர்த்து வாக்குவாதம் புரிந்திருப்பாள்!"

"அதெல்லாமில்லை! அவள் நம் மகத சாம்ராஜ்யத்துக்கு அடங்காமல் கலகம் செய்யும் புரட்சிக் கூட்டத்தைச் சேர்ந்தவளாம்!"

"நேற்று ராத்திரி நடு சாமத்தில் நம் தக்ஷசீல அதிகாரி தேவசேனர் கொலையுண்ட சமயம் கடைசியாகக் கூடாரத்தில் இருந்தவள் அவள் ஒருத்திதானாம்!"

"யாரோ காவியுடை தரித்த ஒரு பக்கிரி நடு சாமத்தில், பின்னால் இருந்த கூடாரத்தின் துணியைக் கிழித்துக் கொண்டு உள்ளே குதித்துக் கையிலிருந்த விஷக் கத்தியால் தேவசேனரின் முதுகில் குத்திக் கொன்றுவிட்டு ஓடிவிட்டானாம். அந்தக் கொலை காரனோடு இந்தச் சதிகாரியும் ஓடி விட்டாளாம்!"

"அப்படியானால் அவளை எண்ணெய்க் கொப்பரையில் தூக்கிப் போட்டு விடுவார்கள்!"

அந்த இரண்டு பேரும் நம் வீரர்களின் கைகளுக்குப் பிடிபடாமல் தப்பி ஓடிவிட்டார்களாம். இவள் மட்டும் கொஞ்ச நாழிகைக்கு முன்னால் புஷ்பச் சந்தையில் பிடிபட்டாளாம், அந்தக் கொலைகாரன் இன்னும் அகப்படவில்லை.

"நாளை நகக்கண்ணியில் ஊசியேற்றி விசாரித்தால் அந்தக் கொலைகாரன் யாரென்று சொல்லிவிடுவாள்!"

"உஷ்! மெள்ளப் பேசு. அவள் காதில் விழுந்தால் நாளை விசாரணையில் அந்தக் கொலைகாரன் நீ தான் என்று சொல்லி விடப்போகிறாள். அப்புறம் உன்னையும் சேர்த்து எண்ணெய்க் கொப்பரையில் தூக்கிப் போட்டு விடுவார்கள்."

மறுகணம் எண்ணெய்க் கொப்பரையின் பயம் எல்லோருக்கும் பிடித்துவிடவே, அந்தப் போர்வீரர்கள் இருந்த இடம் தெரியாமல் ஓடி மறைந்தார்கள். அருகே சந்தடி பெருகியதைக் கேட்டு அசோகன், கூடாரத்தை விட்டு வெளியே வந்து நின்றான். எதிரே பிரும்மராக்ஷஸ் போல் பிருமாண்டமான தோற்றமுள்ள கிரேக்க நாட்டு அடிமை அலி ஒருவன், பூவைவிட மிருதுவான பதுமை போன்ற ஒரு பாவையை இழுத்துக்கொண்டு போனான்.

அவன், மூத்த இராஜகுமாரன் சுசீமனின் அடிமையாவான். சுசீமன் அவனை இருநூறு பொன் கொடுத்து கிரேக்க நாட்டில் இருந்து விலைக்கு வாங்கியிருந்தான். அந்த முரடன் சுருள் சுருளாக இறுகிய தலைமயிர் கற்றைகளைச் சுற்றி ஒரு சிகப்பு நாடாவும், இடுப்பில் ஒரு நீலப்பட்டுப் பாவாடையும் அணிந்திருந்தான். காதுகளிலும் திரண்ட புஜங்களிலும் ஈய வளையங்கள், பரட்டைத் தலை, பயங்கரமான விழிகள், கோரப் பற்கள், கத்தி போல் கூர்மையான விரல்நகங்கள். அவனுடைய கிரேக்கப் பெயர் காஸியஸ். சாணக்கியன் அவனுக்கு இட்டப் பெயர் பிரும்மராக்ஷஸ்!

அந்தப் பிரும்மராக்ஷஸின் பிடியில், காண்டா மிருகத்தின் கொம்புகளில் சிக்கிய பூமாலை போல், அந்த அழகான பெண் துவண்டு கொண்டிருந்தாள்.

"ஏ காஸியஸ்! ஏ பிரும்மராக்ஷஸ் ஏ அடிமை வேட்டை நாயே! நில்!" என்றான் அசோகன் அதிகாரத்தோடு.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

அந்த அடிமை அலி, "ஹி ஹி!" என்று சிரித்தான். அசோகன் கைகளைத் தட்டினான்.

ஒரு மெய்க்காப்பாளன் தீப் பந்தத்தை எடுத்துக் கொண்டு வந்து, அந்தப் பெண்ணின் மீது வெளிச்சம் விழும்படி தூக்கிப் பிடித்தான்.

"இவளா அந்த வேவுகாரி? இவளா நம் தேவசேனனைக் கொன்ற கொலைகாரனோடு தப்பி ஓடியவள்? என்னால் நம்ப முடிய வில்லையே?" என்று அசோகன் ஆச்சரியத்தோடு அவளைப் பாதாதி கேசம் வரை உற்றுப் பார்த்தான்.

அவள் கூந்தல் கலைந்திருந்தது. காதுகளிலுள்ள பொற்குஞ்சங்கள் அவளது கன்னக் கதுப்புகளில் கொஞ்சி விளையாடின. இடுப்பில் இருந்த ஒரு மெல்லிய சிகப்புப்பாவாடை காற்றில் அங்குமிங்கும் பறந்தது. ஒரு மெல்லிய பச்சை மார்புக் கச்சு மேனியோடுமேனியாய் இறுக்கமாய் ஒட்டிக்கிடந்தது. தோளிலிருந்த மெல்லிய உத்தரீயம் நழுவிக் கிடந்தது. இளமையின் புது வனப்புகளோடு மிளிர்ந்தாள் அந்த மங்கை.

அசோகனின் கண்கள் பாயும் திசைகளைப் பார்த்து, அவள் கூச்சத்தோடு முரடன் பிடியில் நெளிந்தாள். வெட்கத்தோடு வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அவளையறியாமல் அவளுடைய சின்ன உதடுகளில் புன்னகை தவழ்ந்து சென்றது. சாய்ந்த கோணத்தில் அவள் கோணிக்கொண்டு நின்ற சாயல் சுற்றிலும் கவர்ச்சி வலைகளைப் பின்னின.

அந்த ஒரு கணப் பார்வைக்குள் அவள் வஸந்தருதுவின் புது மொட்டு என்பதை அசோகன் கண்டுகொண்டான்.

அவள் யௌவனத்தின் புது மதுக்கிண்ணம்! அசோகன் கண்களில் ஆசையின் ஒருவித உத்வேகம் எழுந்தது.

அவளோ அங்குமிங்கும் நெளிந்தவண்ணம், உதடு எனும் பவளத் தட்டிலிருந்து புன்னகை அரும்புகளைத் தொடுத்துக் கொண்டிருந்தாள்.

"ஏ காஸியஸ்! இவள்தானே கொஞ்ச நாழிகைக்கு முன்னால் புஷ்பச் சந்தையில் பிடிபட்டவள்? இவளைக் கொட்டடியில் அடைத்து இருந்தார்களே? இந்த இருட்டு நேரத்தில் இவளை எங்கே இழுத்துக் கொண்டு போகிறாய்? சுசீமன் கூடாரத்துக்கா?" என்றான் அசோகன்.

"ஆமாம்" என்பதுபோல் அந்த அடிமை "ஹி! ஹி" என்று சிரித்தான்.

"நாளை காலையில்தானே விசாரணை? இவளை இப்போது என் கூடாரத்தில் விட்டு விட்டுப்போ. நாளை அதிகாலையில் வந்து அழைத்துக் கொண்டு போகலாம், உனக்கு நூறு பொன் தருகிறேன்!" என்றான் அசோகன்.

முடியாது என்பது போல் அடிமை தலையை ஆட்டினான். தன் எஜமானன் சுசீமன் தன் தலையை வெட்டி விடுவான் என்பது போல் கைகளால் சைகை காட்டினான்.

"ஏ அடிமை நாயே! இப்போதே உன் தலையைச் சீவிவிடச் சொல்வேன். பேசாமல் அவளை என் கூடாரத்தில் விட்டுவிட்டுப் போ. உன் எஜமானன் கேட்டால் அவளை நான் இரகசியமாகக் கொலைகாரன் யார் என்று விசாரிக்க விரும்பினதாகச் சொல்" என்றான் அசோகன்.

அடிமையின் பிடி தளர்ந்தது. அவளை விட்டுவிட்டு "ஹிஹி!" என்று சிரித்துக் கொண்டே போய்விட்டான்.

அசோகன் அந்த அழகிய பெண்ணைப் பரபர வென்று இழுத்துக்கொண்டு கூடாரத்திற்குள் சென்றான்.

கூடாரத்து வாசலில் தொங்கும் திரைச் சீலையை இழுத்து மூடி விட்டு இரண்டு மெய்க்காப்பாளர்கள் கூடாரத்துக்கு வெளியே காவல் புரிந்தார்கள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?



அத்தியாயம் 2

## சிலந்தி வலை

**"சிலந்தி, தான் பின்னிய வலைக்குள்ளேயே சுற்றிக் கொண்டு இருப்பதைக் காண்கிறோம். அது போல ஆசைகளுக்கு இணங்கியவர்கள் ஆசைகளின் வெள்ளப் போக்கிலே நீந்திக் கொண்டு இருக்கிறார்கள். அறிவாளிகளோ இந்த ஆசை வலையை அறுத்துக் கொண்டு கவலைகளில் இருந்தும், துக்கங்களில் இருந்தும் விடுபட்டுச் செல்கிறார்கள்."**

**—தம்மபதம் 347**

கூடாரத்தினுள்ளே மௌனப் பதுமை போல் அந்த மங்கை நின்று கொண்டிருந்தாள்.

அசோகன் தந்தக் கட்டிலில் உட்கார்ந்திருந்தான்.

மங்கையின் மெல்லிய தேகம் நடுநடுங்கியது. முகம் வியர்த்தது. இந்த நீண்ட இரவைக் கூடாரத்துக்குள் எப்படி தனியாக அசோகனோடு கழிப்பது என்று தயங்கியவாறு மௌனமாக நின்று கொண்டிருந்தாள்.

அவளை எப்படி விசாரிப்பது என்று தெரியாமல் மௌனமாக அசோகன் மஞ்சத்தில் உட்கார்ந்திருந்தான்.

அசோகன் மெல்ல அவளை ஆசையோடு ஏறிட்டுப் பார்த்து, "நீ யார்?" என்று கேட்டான்.

அவள் பேசாமல் நாணத்தால் நெளிந்து கொண்டு நின்றாள்.

"நீ தேவசேனனின் அபிமான ஸ்திரீயா?"

அவள் புருவத்தை நெறித்தாள். முகம் சிணுங்கினாள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

"நீ ஊர் பேரில்லாத நாடோடிப் பெண்ணா?"

அவள் கலகலவென்று சிரித்தாள்.

அசோகன் ஒன்றும் புரியாமல் குனிந்து கொண்டான். அவள் வேண்டுமென்றே கை வளையல்களைக் குலுக்கினாள்.

அசோகன் நிமிர்ந்து பார்த்தான். அவள் மாய விழிகளால் அவனையே பார்த்துக்கொண்டு நின்றாள். அவள் உதடுகளும் மெல்லிய உடலும் பல கோணங்களில் நெளிந்தன. எதையோ எண்ணி எண்ணி இடையே அவள் மனத்திற்குள் சிரித்துக் கொண்டாள். சுற்றிலும் மனதை மயக்கும் மந்திரப் பொடிகளைத் தூவும் அப்சரஸைப் போன்று அவள் தோன்றினாள். அசோகனின் கடுமையான இருதயம் தாமரை இலையைப்போல மிருதுவாகி, அவன் மனதிலிருந்த மதயானை தளர்ந்து, அவளது அன்பின் முன் தன் துதிக்கையை நீட்டி வணங்கியது.

"நீ கிரேக்கக் கப்பலிலிருந்து வந்து இறங்கிய யவன அடிமைப் பெண்ணா?"

அவள் கலகலவென்று சிரித்துவிட்டுப் பேசாமல் நின்றாள்.

அசோகன் அருகிலிருந்த மது ஜாடியிலிருந்து யவனர் தேறலை மதுக்கிண்ணத்தில் ஊற்றிக்குடித்தான். அவன் முகத்தில் குழைவு நீங்கிக் கடுமை உண்டாயிற்று.

அவள் நடுங்கினாள்.

"உன் பெயரென்ன?" என்றான் அசோகன் கடுமையாக.

அவள் பதில் சொல்லவில்லை, பேசாமல் நின்றாள்.

"நீ ஊமையா?"

"ஆமாம்" என்பதுபோல் அவள் தலை ஆட்டினாள்.

"பொய்! நீ ஊமையல்ல!" என்றான். அதற்கும், "ஆமாம்" என்பதுபோல் அவள் தலையை ஆட்டினாள். அசோகனுக்குக் கோபம் வந்துவிட்டது. அருகில் கிடந்த சாட்டையை எடுத்தான்.

அவள் சாட்டையைப் பார்த்து அசோகனைக் கடைக் கண்ணால் ஒருமுறை பார்த்துவிட்டுக் கலகலவென்று சிரித்தாள்.

அசோகன் சாட்டையைக் கீழே போட்டுவிட்டான்.

சற்றுக் கழித்து, "உன் பெயரைச் சொல்லமாட்டாயா?" என்று கேட்டான் அசோகன்.

அவள் "மாட்டேன்" என்பதுபோல் தலையை ஆட்டினாள்.

"நீ மகா நீலியாயிருப்பாய் போலிருக்கிறதே! உன் பெயரென்ன?" என்று கேட்டான் சற்றுக் குழைவாக.

"நீலி!" என்றாள் மெல்ல முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு, அவள் உதட்டில் இலேசான புன்னகை விளையாடியது.

அவ்வளவு இயற்கையான உள்ளம் தோய்ந்த புன்னகையை அசோகன் முன்னர் கண்டதில்லை. அவளைப்போல் ஒரு குறும்புக்காரியை அவன் பார்த்ததும் இல்லை. அவன் அந்தப்புரங்களுக்கும் கூடாரங்களுக்கும் அவளைவிட அழகான எத்தனையோ யுவதிகள் வந்திருக்கிறார்கள். ஆனால் ஒருத்தியாவது அவளைப்போல் இப்படிக் குறும்பாகப் பதில் சொன்னதில்லை. கொடூரமான இராஜகுமாரன் என்று பயந்து அவன் கண் முன் மனம் விட்டுச் சிரிக்கக்கூடப் பயப்படுவார்கள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

அவள் பேச்சு, புன்னகைப் போக்கு, செய்கைகள் ஒவ்வொன்றும் அசோகனுக்குப் புதுமையாகத் தோன்றின. அவனுக்கு அது ஒரு புது அனுபவம். ஆனால் அதில்தான் ஏதோ ஒரு வசீகரம் இருப்பதுபோல் பட்டது.

"நிஜமாகவா உன் பெயர் நீலி?"

அவள் கருவிழிகளை மேலே சுழற்றிக்கொண்டே குறும்பாய் உதட்டைப் பிதுக்கினாள்.

அந்த உதட்டின் தேக்கத்தில், அவன் உள்ளத்தை அவள் தூண்டில் முள்போட்டு இழுப்பது போலிருந்தது. அந்த உதடுகளையே அசோகன் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் தேகம் கதகதவென்று பற்றி எரிந்தது.

கூடாரத்தின் படுதாத் துணிகள் படபடவென்று காற்றில் அடித்துக் கொண்டன.

மேலே கூடாரத்துக்குள் தொங்கும் கண்ணாடிக் குப்பிகளில் திரி விளக்குகள் பொறிந்தன. அசோகனால் மஞ்சத்தில் சும்மா உட்கார்ந்திருக்க முடியவில்லை. மதுக்கிண்ணத்தில் யவனர் தேறலை ஊற்றி எடுத்துக் குடித்தான்.

அவள் நடுங்கினாள்.

"கிட்ட வா!" என்றான் அசோகன் கடுமையாக.

அவள் பேசாமல் நின்றாள்.

"கிட்ட வா! திரைச்சீலைக்கருகில் ஏன் நிற்கிறாய்? என் மெய்க் காப்பாளர்கள் ஒட்டுக் கேட்பார்கள். அருகில் வா!"

அவள் இருந்த இடத்தை விட்டு நகராமல் நின்றாள்.

அசோகன் மறுபடியும் சாட்டையை எடுத்தான்: "இது என்ன சாட்டை தெரியுமா? மான்தோல் சாட்டை! கிட்ட வர மாட்டாயா?" என்றான். அவள் "மாட்டேன்" என்பதுபோல் தலையை ஆட்டினாள்.

அசோகன் சாட்டையைக் கழற்றி, சாட்டையின் நுனி அவள் இடுப்பைச் சுற்றிவிழும்படிஅடித்து இழுத்தான். அவள் சரசர வென்று அசோகன் காலடியில் வந்து விழுந்தாள்.

அப்படியே அவள், தன் பாதங்களை முத்தமிட்டுக் கண்களில் ஒற்றிக்கொள்வாள் என்று அசோகன் எதிர்பார்த்தான். ஆனால் அவள் அப்படிச் செய்ய வில்லை. பிரிந்திருந்த சாட்டையின் நுனியை முத்தமிட்டு அதைத் தடவிக் கொடுத்தாள்.

அசோகன் ஆச்சரியத்தால் ஸ்தம்பித்துப் போனான்.

"நீ என்ன பைத்தியமா? சாட்டையை ஏன் முத்தமிடுகிறாய்?"

"இது மான்தோல் சாட்டை, மானிலிருந்து உரிக்கும்போது இந்தத் தோலில் உள்ள ஜீவன் எப்படித் துடித்ததோ?" என்றாள், அவள் மெல்ல உதட்டுக்குள்ளேயே.

அசோகனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்தான். அவள் கண்களில் நீர் ததும்பியிருந்தது. அந்தக் கண்களில் அன்பு, வாஞ்சை, கருணை, மென்மை, சாந்தம் எல்லாம் நிலவியிருந்தன. வேறு எந்தப் பெண்களின் கண்களிலும் காணமுடியாத அபூர்வமான ஓர் ஆகர்ஷண சக்தியும் அவளுடைய கண்களில் இருப்பது போல் அசோகனுக்குத் தோன்றியது.

"ஏ பயப்படாதே! சாட்டையைக் கீழே போட்டு விட்டேன். ஏ, என்னவோ உன்னைச் சாட்டையால் அடிக்க எனக்கு மனசு வரவில்லை, இங்கே பார். நான் கேட்கும் கேள்விகளுக்கு உண்மையாகப் பதில் சொல், உன்னை விட்டுவிடுகிறேன்" என்றான் அசோகன் குரலில் குழைவு ததும்ப.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

அசோகன் முகத்திலும் குரலிலும் கடுமை நீங்கி குழைவு உண்டாகியிருப்பதை அறிந்து அவள் வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக்கொண்டு மெல்ல புன்னகை செய்தாள்.

"உன் பெயரென்ன?" என்று கேட்டான் அசோகன்.

"காரூவகி!" என்றாள் அவள் மெல்ல.

அசோகன் அவள் கைகளைப் பிடித்தான். அவள் கைகள் நடுங்கின. "காரூவகி! என்னைக் கண்டு உனக்குப் பயமா, இல்லையா?" என்றான் மெல்ல அசோகன்.

"இல்லை, யுவராஜா! உங்களைக் கண்டு நான் ஏன் பயப்பட வேண்டும்? நீங்களென்ன அந்தக் கருணையற்ற கிரேக்க முரடனா?" என்று சிரித்தாள். அசோகன் மனதில் யாரோ சுரீர் என்று சாட்டையால் அடிப்பது போலிருந்தது.

அவளின் மெல்லிய கைகளைப் பார்த்தான். அதில் நகங்கள் பதிந்த இரண்டு இரத்தக் குறிகள் இருந்தன. அந்த முரடன் காஸியஸ் அவ்வளவு மிருதுவாக அவள் கைகளைப் பிடித்து இருக்கிறான்! அசோகனுக்கு என்னவோ போலிருந்தது.

சிறிது நேரம் பேசாமலிருந்தான். பிறகு "உன் தந்தை யார்?" என்று கேட்டான்.

"புத்தர்!"

"உன் தாய் யார்?"

"புத்தர்!"

"நீ புத்தமத சங்கத்தைச் சேர்ந்தவளா?"

"இல்லை!"

"பின் புத்தரை ஏன் போற்றுகிறாய்?"

"அவர் ஜாதி, உயர்வு தாழ்வு பாராமல் எல்லோருக்கும் சமமாக கருணை காட்டினார். ஹிம்சை செய்பவர்களுக்கும் அன்பு செய்பவர்களுக்கும் அன்பு செய்யச் சொல்கிறார்!"

அசோகன் தலை குனிந்தான்.

"எங்கள் தக்ஷசீல அதிகாரி தேவசேனன் கொலையுண்ட சமயம், நீ கூடாரத்துக்குள் இருந்தாயா?"

"ஆமாம்" என்று அவள் தலையை ஆட்டினாள்.

"தேவசேனனின் முதுகில் குத்திவிட்டுக் கொலைகாரன் கூடாரத்தை விட்டுத் தப்பித்து ஓடும் போது, நீயும் அவன் கூட தப்பித்து ஓடினாயா?"

அதற்கும் "ஆமாம்" என்று அவள் தலையை ஆட்டினாள்.

"கொலையுண்ட தேவசேனன் உனக்கு என்ன கொடுத்தான்?"

காரூவகி தன் அழகிய வலது கையைக் காட்டினாள். அதில் இரண்டு கத்தி வெட்டுகள் இருந்தன. அது அவள் தக்ஷசீல அதிகாரியின் பஞ்சணையில் இரவைக் கழிக்க மறுத்ததற்காக அவளுக்குக் கிடைத்த பரிசுகள்! முத்துச் சிப்பி போன்ற அழகான அந்தக் கையில் அக் கத்தி வெட்டுகளைப் பார்த்ததும் அசோகனுக்கு என்னவோ போலிருந்தது.

"உம், கொலைகாரன் என்ன கொடுத்தான்?"

காரூவகி தன் கச்சைக்குள்ளிருந்து ஒரு காட்டுப் பூவை எடுத்து முத்தமிட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டு அதைக் காண்பித்தாள். பிறகு அதைப் பத்திரமாகத் தன் கச்சைக்குள்ளே வைத்துக் கொண்டாள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

"கொலைகாரன் கொடுத்த அந்த வெறும் காட்டுப் பூவை ஏன் இவ்வளவு பத்திரமாக வைத்துக்கொள்கிறாய்?"

"நெஞ்சில் வைத்துப் பூஜிப்பதற்கு! யுவராஜா, அது வெறும் காட்டுப் பூ அல்ல! அதில் கொலைகாரனின் அன்புமயமான இருதயம் இருக்கிறது!"

"கொலைகாரன் கொடுத்த பூ அவ்வளவு உயர்ந்ததா?"

"ஆம், மகாராஜா! உங்கள் தக்ஷசீல அதிகாரி ஹிம்சையின் மூலம் என் மானத்தைப் பறிக்க முயன்றான். அந்தக் கொலைகாரன் என் மானத்தைக் காப்பாற்றி, அன்பு காட்டினான்!"

"பின் எதற்காக நீ நேற்றிரவு தேவசேனன் கூடாரத்துக்குப் போனாய்?"

"நானாகப் போகவில்லை. இரண்டு மகத சாம்ராஜ்ய வீரர்கள் பலவந்தமாக என்னை தேவசேனன் கூடாரத்துக்குத் தூக்கிக் கொண்டு போனார்கள்."

அசோகன் மனதில் சுரீர் என்று ஒரு சவுக்கடி.

"அந்தக் கொலைகாரன் யார்?" என்றான் அசோகன் ஆத்திரத்தோடு.

"தெரியாது!"

"சொல்லப் போகிறாயா இல்லையா? சாட்டையால் அடித்துக் கேட்க வேண்டுமா?"

அவள் கலகலவென்று சிரித்தாள். "யுவராஜா சாட்டையால் பெறுவதைவிட அன்பால் அதிகம் பெற முடியும். சாட்டையால் எவர் இதயத்தையும் பேச வைக்க முடியாது. அன்பு ஒன்றுக்குத்தான் அந்தச் சக்தி உண்டு!"

"சாதுரியமாகப் பேசுகிறாய்! அன்பாகவே கேட்கிறேன்: அந்தக் கொலைகாரன் யார்?"

"நிஜமாகவே தெரியாது!"

"காரூவகி! உன்னைக் காப்பாற்றினான் என்பதற்காக அந்தக் கொலைகாரன் பெயரைச் சொல்லாமல் மறைக்கிறாய்! காரூவகி, அந்த தேவசேனன் குத்துண்டு மாய்ந்ததில் உண்மையில் நான் குதூகலம் அடைகிறேன். அவன் நயவஞ்சகன். என்னோடு ராஜ்யத்திற்குப் போட்டியிடும் என் மூத்த சகோதரனான சுசீமனின் வலது கை அவன். அவனைக் குத்திக் கொன்ற கொலைகாரன் பெயரைச் சொல். கொலை செய்த கைகளுக்குப் பொன் வளையல்கள் பரிசு கொடுக்கிறேன்!"

"நிஜமாகவே அந்தக் கொலைகாரன் யாரென்று தெரியாது!"

"அவன் பெயர் தெரியாவிட்டாலும், அவன் அடையாளமாவது உனக்குத் தெரியுமே?"

"அதுவும் தெரியாது! அவன் முகத்தை நான் பார்த்ததேயில்லை!"

"அவனோடு தப்பித்து ஓடும் போது அவனைப் பார்த்திருப்பாயே?"

"அப்போது கூடாரமெங்கும் ஒரே இருட்டாக இருந்தது."

"காரூவகி! நடந்தது ஒன்றையும் விடாமல் சொல்லு."

"யுவராஜா, நீங்கள் நினைப்பதுபோல் நான் யவனப் பெண்ணோ, நாடோடியோ அல்ல. சகல தத்துவங்களையும் கற்றுத் தேர்ந்த ஓர் உயர்குலப் பண்டிதைதான் நான். இங்கே தக்ஷசீல நகர வணிகர் வீதியில் உள்ள குபேர மாளிகையில்தான் நான் இருந்தேன். ஒரு நாள் இப்போது மாய்ந்த தக்ஷசீல அதிகாரி தேவசேனன் நகர்வலம் வரும் போது நான் உப்பரிகையில் நிற்பதைப் பார்த்தான். அன்று முதல் அவன் நெஞ்சில் நப்பாசை நாகப் பாம்பாய் வளரத் தொடங்கியது. நான் ஓர் ஏழைப் பெண்ணாயிருந்திருந்தால் அன்றே கசக்கி

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

முகர்ந்திருப்பான். ஆனால் குபேர சம்பத்துள்ள ஒரு சீமானின் புதல்வியாய் இருந்துவிட்டேன்! அதனால் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தான். அதற்கேற்றாற்போல இங்கே தக்ஷசீலமெங்கும் உங்கள் மகத சாம்ராஜ்யத்திற்கு எதிராகப் புரட்சி கிளம்பியது. ஏன் புரட்சி உண்டாயிற்று தெரியுமா?"

"ஏன்?"

"இந்த தேவசேனனைப்போல இங்கேயுள்ள ஒவ்வொரு அதிகாரியும் மகத மன்னர் பெயரைச் சொல்லிக் கொடுமைகள் புரிந்ததால்தான்! ஹிந்து மதத்தின் சாதிப் பிரிவினைகளை எதிர்த்து எல்லோரும் ஓர் குலம் என்ற புதுமையான சமதர்மக் கொள்கைகளைப் பரப்பி வந்த பிக்ஷுக்களையும் அஹிம்சை வாதிகளையும் பயங்கரமான தண்டனைகளுக்கு உள்ளாக்கியதால் தான்! யுவராஜா! சுயநலமிகள் அதிகாரத்தின் போர்வையில் தக்ஷசீல மக்களை வேட்டையாடினார்கள். செல்வந்தர்களின் மாளிகைகள் சூறையாடப்பட்டன. ஏழை ஜனங்கள் அடிமைகளாக விற்கப்பட்டனர். கன்னிப் பெண்களின் வாழ்வில் அவமானச் சின்னங்கள் பொறிக்கப்பட்டன. சீல புருஷர்கள் சிறையில் வாடினார்கள்; சத்தியவான்கள் சமாதி வைக்கப்பட்டார்கள்; அஹிம்சையைப் போதித் தவர்கள் சொல்லொணா இம்சைகளுக்கு ஆளானார்கள். மகத சாம்ராஜ்ய அதிகாரி ஒவ்வொருவனும் ஒவ்வொரு மகத போர்வீரனும் தக்ஷசீல மக்களின் கண்களில் வேட்டை நாயாகத் தென்பட்டான்.

புரட்சி உண்டாகி விட்டது. இங்குள்ள உங்களுடைய கொடூரமான அதிகாரிகளை நீக்கிவிட்டு மனித இருதயங்களை உணரக் கூடியவர்களை அதிகாரத்தில் வையுங்கள். அடக்குமுறையாலும் அடக்க முடியாத புரட்சி அன்பாட்சியால் ஒரு நொடியில் அடங்கிவிடும். அபிப்பிராய சுதந்திரமும் அன்பாட்சியும் நிலவும் சமதர்மக் குடியரசு தத்துவ அரசியலாய் இருந்தால் அந்த ஆட்சி என்றும் அழியாது. என்றும் புரட்சி ஏற்படாது; மக்கள் குழந்தைகள், அரசன் அவர்களின் தந்தை. அவற்றை வளர்க்கும் பொறுப்பை அதிகாரிகளிடம் கொடுத்தால் செவிலித்தாய்போல் அன்பாய்ப் பாதுகாக்கிறார்களா என்று கவனிப்பது அரசனின் கவலையாய் இருக்க வேண்டும்!"

அசோகன் கண்களில் ஆலோசனையின் ஜ்வாலை வீசியது. சற்று கழித்து, "காரூவகி! உன் ஞான உபதேசம் போதும்! உன் கதையைச் சொல்" என்றான்.

"யுவராஜா! இந்தப் புரட்சி சமயத்தில் மகத அதிகாரிகள் மனம் போனபடியெல்லாம் நகரமெங்கும் தீவைத்துக் கொளுத்தினார்கள். வேண்டாதவர்களை எல்லாம் கொன்று குவித்தார்கள். இந்த அருமையான சந்தர்ப்பத்தை தேவசேனன் உபயோகித்துக் கொண்டான். எங்கள் மாளிகைக்குத் தீ வைக்கப்பட்டது. என் தந்தை கொலை செய்யப்பட்டார். என் தாய் தீயில் மாண்டு போனாள். என்னைப் பலாத்காரமாகத் தூக்கி வந்து தேவசேனனின் கூடாரத்தில் போட்டார்கள்!" என்று கம்மிய குரலில் கூறினாள் காரூவகி.

அவளுடைய கரு விழிகளில் நீர் சுரந்தது. அசோகன் கண்களும் கலங்கின. "பிறகு தேவசேனன் கூடாரத்தில் என்ன நடந்தது?" என்று கேட்டான்.

"அது கூடாரமா? புலி உறையும் குகை! என் இருதயக் கவசத்தைப் பறிக்க எவ்வளவோ முயன்றான். என்னென்னவோ பேசினான். நான் இணங்கவில்லை. அந்த ஆத்திரத்தில் என் கையில் கத்தியால் கீறி மிரட்டினான். அப்போதும் நான் இணங்க வில்லை. அவன் துன்மார்க்கச் செயல் அவன் மனதையே கூசச் செய்திருக்க வேண்டும். வெளிச்சமிருந்தால் மனம் கூசுமென்று எரிந்து கொண்டிருந்த விளக்கை ஊதி அணைத்துவிட்டான். கூடாரமெங்கும் ஒரே இருட்டாக இருந்தது. இருட்டில் அவன் என்னை நெருங்கி என் கைகளைப் பற்றினான். நான் தப்பித்து ஓட வழியின்றி தவித்துக் கொண்டிருந்தேன். அப்போது யாரோ கூடாரத்தின் படுதாவைக் கிழித்துக்கொண்டு உள்ளே குதித்து தேவசேனன் முதுகில் விஷக் கத்தியால் குத்திக் கொல்லும் சப்தம் கேட்டது.

"பிறகு அந்தக் கொலைகாரன், "என் பின்னால் வா" என்று கூறி என் கைகளைப் பிடித்து இழுத்த வண்ணம் கூடாரத்தை விட்டு வெளியே ஓடினான். எங்களை விரட்டிக்கொண்டு சில பாராக்காரர்கள் ஓடி வந்தார்கள். அவர்கள் கைகளில் சிக்காமல் நாங்கள் தப்பித்து ஓடி அருகிலிருந்த ஒரு பற்றைக் காட்டுக்குள்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

நுழைந்து ஒரு முட்புதருக்குப் பின்னால் மறைந்து கொண்டோம். எங்களை வீரர்கள் தேடியலையும் கூக்குரல்களும் ஆரவாரங்களும் கேட்டுக்கொண்டே இருந்தன; இரவு முழுவதும் சிறிதுகூட அசையாமல் நாங்கள் இருவரும் அந்த முட்புதருக்குள்ளேயே படுத்திருந்தோம்..." என்று நிறுத்தினாள். அவள் தேகம் நடுநடுங்கியது. அசோகனின் முகமும் வாட்டமுற்றது, வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக்கொண்டான். காரூவகி சற்று கழித்துத் தன் கதையைத் தொடர்ந்தாள்:

"அந்தப் பயங்கர இரவை நினைத்துக் கொண்டால் இப்போதும் என் மனம் நடுங்குகிறது; சுற்றிலும் இனந் தெரியாத இருட்டு! நானா திசைகளிலும் போர்வீரர்கள் எங்களைத் தேடி அலைந்தார்கள். எங்களைச் சுற்றிலும் தூர தொலைவுகளில் எல்லாம் தீவட்டிகளும் தீப் பந்தங்களும் ஓடுவது தெரிந்தன. எந்தச் சமயத்தில் எங்களைப் பிடித்து விடுவார்களோ என்ற பீதியால் நாங்கள் உணர்ச்சியற்று முட்புதரில் கிடந்தோம். நாங்கள் ஒளிந்திருந்த முட்புதருக்கு அருகில் ஈட்டி ஏந்திய போர்வீரர்கள் ஓயாமல் போய் வந்து கொண்டிருந்தார்கள். எங்கள் காலடியில் உலர்ந்த சருகுகள் கிடந்தன. எங்கள் கால்கள் சிறிது அசைந்தாலும் சருகுகளின் ஓசை ஏற்பட்டு பாராக்காரர்களின் கவனத்தை இழுத்துவிடும். அந்த முட்புதரை விட்டால் நாங்கள் ஒளிந்துக் கொள்வதற்குத் தோதான வேறு இடம் சுற்றிலும் தென்படவில்லை. நாங்கள் படுத்திருந்த அந்த முட்புதரோ, ஒருவர் மட்டும் மறைவாகப் படுத்திருக்கக்கூடிய ஒரு சிறிய முட்புதர்.

அதில் இருவர் எப்படிப் படுத்திருப்பது? அது எனக்கு வெட்கமாகவும் இருந்தது. அவன் கொலைகாரன் என்பதினால் அது அருவருப்பாகவும் இருந்தது. இருட்டில் என் கைகள் தவறிப் படும்போது அவன் கைகளிலிருந்து ஒழுகும் ரத்தம் என்னை நடுங்க வைத்தது. நான் அவனோடு முட்புதருக்குள் பதுங்கியவாறு அவன் தோள்களைப் பிடித்துக்கொண்டு, குனிந்து இருட்டை பீதியோடு பார்த்துக்கொண்டிருந்தேன். அவன் விடும் பெரு மூச்சுக்கள் என் முகத்தில் வந்து மோதின; எனக்கு பீதியோடு கூச்சமும் எழுந்தது, ஆனால் அதை விட்டால் வேறு வழியில்லை. இருட்டில் அவன் தன் கைகளை நீட்டிப் பக்கத்தில் தடவிப் பார்ப்பது தெரிந்தது. மறு கணம் சடக்கென்று தன் கைகளை எடுத்துக் கொண்டான். நானும் அவன் கை தடவிய இடத்தில் கை வைத்துப் பார்த்தேன் அது ஒரு பாம்புப் புற்று. புற்றுக்குள் பாம்புகள் புஸ் என்று சீறுவதையும் நெளிவதையும் உணர முடிந்தது. நான் கைகளை இழுத்துக் கொண்டு பயத்தால் கூச்சலிட வாயெடுத்தேன்,

அப்போது அவன் சடக்கென்று ஒரு கையால் என் வாயைப் பொத்தி, மற்றொரு கையால் என்னை அணைத்துக்கொண்டு என் கூந்தலை பரிவோடு தடவிக் கொடுத்தான். அப்போதுதான் அந்தக் கொலைகாரனின் இருதயத்தில் ஓடும் கருணையின் சலனங்கள் என் காதில் விழுந்தன. கொஞ்ச நேரங் கழித்து என் கன்னங்களில் தாரைதாரையாக நீர் விழுந்து ஊறுவது போல் உணர்ச்சி ஏற்பட்டது. நான் அவன் முகத்தைத் தடவிப் பார்த்தேன். அந்தக் கொலை காரன்தான் கண்ணீர் சொரிகிறான்! அவன் தான் செய்த கொலை பாதகத்திற்காக உள்ளம் நைந்து உருகுகிறான் என்று நினைத்து அவன்மீது எனக்குப் பச்சாதாபம் ஏற்பட்டது.

அப்போதுதான் அவனுடைய தியாகமயமான செய்கை ஒன்றும் எனக்குப் புலப்பட்டது. நெருஞ்சி முட்களும், கருவேலம் முட் செடிகளும், சிதறிக் கிடக்கும் அந்த முட் புதருக்குள் என் மேனியில் ஒரு முள் கூட குத்தக்கூடாது என்று அவன் கீழே முள்மீது படுத்து என்னை அணைத்துக் கொண்டிருந்தான். முதுகில் முள் குத்தும் வேதனைகளைக் காட்டாமல் என் கூந்தலை, தாயையும் மிஞ்சும் பரிவோடு தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தான். அவனுடைய அந்த அன்பின் செய்கையைக் கண்டு நான் திகைத்தேன; என் கண்களில் நீர் பெருகிற்று. என் பாரம் அவன்மீது விழுந்து அவனை அழுத்தி முட்கள் அவன்மீது அழுத்தக் கூடாது என்பதற்காக நான் அவனுடைய தோள்களைப் பிடித்திருந்த என் கைகளை எடுத்துப் பக்கத்தில் தரையில் ஊன்றிக் கொண்டேன். என் கைகளில் நெருஞ்சிமுள் குத்தி வேதனைப் படுத்துவதையும் பொருட் படுத்தாமல் இரவு முழுவதும் அப்படியே இருந்தேன்.

அப்போதுதான் அந்தக் கொலைகாரனின் இருதயம் எனக்குத் தெரிந்தது. அது இயற்கையில் கொடூரமானதல்ல. புத்தர்பிரானின் அருளையும் அஹிம்சையும் போதிக்க எவரும் இல்லாத காரணத்தால் அவன் ஏதோ மன உன்மத்த நிலையில் அந்தக் கொலை பாதகத்தைச் செய்திருக்கிறான். அந்தத் தனித்த இரவில்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

நான் வாய்விட்டுப் பேசச் சந்தர்ப்பம் கிடைத்திருந்தால் அவனை இம்சை முறைகளை வெறுத்து ஒரு சிறு ஜீவனுக்கும் கருணை காட்டும் உத்தம பௌத்த பிக்ஷுவாக்கியிருப்பேன்" என்று முடித்தாள் காரூவகி. அவள் கண்களில் ஓர் அமானுஷ்யமான சக்தி நிலவியது.

"பிறகு என்ன நடந்தது?" என்று கேட்டான் அசோகன்.

"இருட்டு பீதியிலும் அன்பில் தன்னை மறந்த லயத்திலும் மாறி மாறி ஊர்ந்து சென்று கொண்டிருந்தது. விடியற்சாமம் நெருங்கியது. இருட்டு விலகுவதற்குள் நாங்கள் படுத்திருந்த அந்த முட்புதரை விட்டு வெளியேற வேண்டும். அப்போது எங்களைத் தேடியலையும் வீரர்களின் ஆரவாரங்களும் சந்தடிகளும் அடங்கி இருந்தன. அவன் மெல்ல எழுந்து என் நெற்றியில் முத்தமிட்டு என்னைப் போகும்படி சைகை காட்டினான். அவன் என்னைவிட்டுப் பிரிந்து செல்லும்போது கைக்கெட்டிய காட்டுப் பூ ஒன்றைப் பறித்து என் கைகளிலே வைத்து மூடிவிட்டுப் போனான். அந்தப் பூ அவன் அளித்த அன்பின் காணிக்கை. நான் அவனுக்குப் பிரதியாக என் கை விரலில் அணிந்திருந்த தமிழ் நாட்டு விலையுயர்ந்த முத்து மோதிரத்தைக் கழற்றி, அவன் விரலில் அணிவித்தேன். பிறகு நான் இருளோடு இருளாய் மறைந்து அந்த வட்டாரத்தைவிட்டுத் தப்பிச் சென்றேன். ஆனால் இன்று மாலை புஷ்பச் சந்தையில் உங்கள் வீரர் கையில் பிடிபட்டேன்!" என்றாள் காரூவகி.

"காரூவகி! உன் அன்புக்குப் பாத்திரமான அந்தக் கொலைகாரனை நான் தண்டிக்க மாட்டேன். அவன் யாரென்று வேறு யாருக்கும் சொல்லவும் மாட்டேன். என்னிடம் உண்மையைச் சொல். அந்தக் கொலைகாரன் யார்?"

"தெரியாது, யுவராஜா!"

"ஓர் இரவு முழுவதும் அவனோடு முட்புதரில் இருந்து இருக்கிறாய். அவனை நீ அடையாளம் கண்டு கொள்ளவில்லையா?"

"நானும் ஆவலோடு அவன் முகத்தைத் தடவித்தான் பார்த்தேன். ஆனால் நான் சிறிதுகூட அடையாளம் கண்டு பிடிக்க முடியவில்லை. இருட்டில் அவன் இருதயம்தான் எனக்குத் தெரிந்ததே தவிர, அவன் முகம் எனக்குத் தெரியவேயில்லை!"

"நாளைக் காலையில் பழிவாங்கத் துடிக்கும் போர்வீரர்கள் முன்னிலையில், உன்னைப் பொது மேடையில் ஏற்றி சுசீமனும் சாணக்கியரும் விசாரிப்பார்களே? நீ என்ன பதில் சொல்லுவாய்?"

"அந்தக் கொலைகாரனைத் தெரியாது என்று சொல்வேன்!"

"உன்னை முட்கம்பத்தில் கட்டி சுறாமீன் சாட்டையால் உன் மூச்சு நிற்கும்வரை அடித்துக் கேட்பார்கள்?"

"என் மூச்சு நிற்கும்வரை தெரியாது என்றே

சொல்லிக் கொண்டிருப்பேன்.

"நீ சொல்லாவிட்டால் உன்னை நிச்சயம் உயிரோடு தீயில் வைத்து எரித்துவிடுவார்கள்!"

"எனக்கு உயிரின்மேல் ஆசையில்லை. புத்தரின் நாமத்தை உச்சரித்துக்கொண்டே ஆனந்தமாக உயிர்விடுவேன்!"

"காரூவகி! உன்னை நாளை விசாரணை நடப்பதற்கு முன்னால் இன்றிரவு ஏன் தன் கூடாரத்திற்கு என் சகோதரன் சுசீமன் அழைத்து வரச் சொன்னான், தெரியுமா?"

"என்னிடம் இளமை இருக்கிறது என்பதனால்! ஊன் சதை பொதிந்த இந்த உடலின் விகாரங்கள் தெரியாமல் மிகவும் அழகான யௌவன சௌந்தர்யம் என்ற மாயப் போர்வை என்னை மறைத்துக் கொண்டிருப்பதினால்தான்!"

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

"காரூவகி! என் சகோதரன் உன் இளமையைவிட, மகத சிம்மாசனத்திற்கு என்னால் ஏற்படும் போட்டியை நீக்குவதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறான். அதனால் உன்னிடம் நயமாகவும் பயமாகவும் கூறி நாளை விசாரணையில் நான்தான் கொலைகாரன் என்று கூறச் செய்வான். அதன் மூலம் என் மீது, சாணக்கியரின் ஆத்திரத்தையும் அரசரின் அருவருப்பையும் ராஜப் பிரதானிகளிடையே அபகீர்த்தியையும் உண்டாக்கி, என்னை வரப்போகும் மகத சிம்மாசனத்திலிருந்து எளிதில் நீக்கிவிட முயல்வான்."

"இந்த ராஜ பரம்பரையில் உதித்தவர்களுக்கே நீதியுள்ளமும் நேர்மையான போக்கும் இராதா? பிரஜைகளின் கண் முன்னால் நீதியின் திரையைத் தொங்கவிட்டுக்கொண்டு திரைக்குப் பின்னால் பொய்யும் சூழ்ச்சியும் அநீதிகளும் தாண்டவமாடச் செய்யும் பலிபீடந்தான் அரசியலா? அதனால்தான் புத்தர்பிரான் அரண்மனையை விட்டு அரசியல் சின்னங்களைக் களைந்து போதி நிழலைச் சார்ந்தார் போலும்!"

"காரூவகி! உனக்கும் என் மீது அளவற்ற ஆத்திரம் ஏற்பட்டிருக்கிறது. உன் பக்திக்குப் பாத்திரமான பௌத்த பிக்ஷு உபகுப்தருக்கு நான் ஜென்ம விரோதி என்பதினால் நான்தான் அந்தக் கொலைகாரன் என்று நாக்கில் நரம்பு இல்லாமல் பொய் சொல்லுவாய். நான் சாணக்கியரின் ஆத்திரத்தின் முன் என்னைப் பெற்ற தந்தையாலேயே நாடு கடத்தப்படுவேன்."

"யுவராஜா! என்னை நம்பாவிட்டாலும் புத்தர் நாமத்தை ஜபிக்கும் என் நாவை நம்புங்கள்! ஒருக்காலும் நீங்கள்தான் அந்தக் கொலைகாரன் என்று சொல்ல மாட்டேன். நான் வஞ்சனை தெரியாதவள். எவரையும் வஞ்சிக்க விரும்பாதவள். சுசீமன் என்னை வதைத்தாலும், உங்கள் மீது எவ்வளவு ஆத்திரம் ஏற்பட்டாலும், உங்கள் மீது பழி சுமற்றமாட்டேன்! என்னை நம்புங்கள்."

"காரூவகி, அந்தக் கெலைகாரன் யார் என்று எனக்குத் தெரியும்; அதையும் மறந்துவிடாதே!"

"யார் அந்தக் கொலைகாரன்? சொல்லுங்கள்."

"உன் பௌத்த பிக்ஷு உபகுப்தர்தான்! தக்ஷசீல அதிகாரி பௌத்தர்களைக் கலகக்காரர்கள் என்று காட்டிப் பயங்கரமான தண்டனைகளுக்கு உள்ளாக்கினான் என்று உபகுப்தர் அந்த அக்கிரமக் காரனைக் குத்திக் கொன்று விட்டார், கொலைகாரன் தப்பித்து ஒடும்போது பௌத்த பிக்ஷுவைப்போலக் காவியுடை தரித்திருந்தான் என்று வீரர்கள் சொல்வது ஒன்றே போதுமே!"

"யுவராஜா! வாயில்லா ஜீவன்கள் வாடுவதையும் பொறுக்காத பௌத்த பிக்ஷு எவரும், அதுவும் ஜீவகாருண்ய போதனைகள் புரிந்துவரும் உபகுப்தர் கொலை செய்யவே மாட்டார்."

"காரூவகி! உண்மையை திரையிட்டு மறைக்காதே! நாளை விசாரணையில் உன்னைச் சித்திரவதை செய்து கேட்கும்போது அந்தக் கொலைகாரன் உபகுப்தர் என்று சொல்லிவிடு. அதுவும் நான் கேட்கும் போது சொல்லு. சாணக்கியர் உள்ளம் மகிழ்ந்து போவார். என் தந்தைக்குப் பிறகு மகத சாம்ராஜ்யம் எனக்கு நிச்சயமாகிவிடும், உன்னை என் பட்டத்து இளவரசி ஆக்குகிறேன்."

சிறிது நாழிகை அந்தக் கூடாரத்தில் பல விதமான உணர்ச்சிப் போராட்டங்கள் எழுந்து தணிந்து கொண்டிருந்தன. வெகு நேரம் அந்தக் கூடாரத்தில் நிசப்தம் நிலவியது. பிறகு அசோகன் பரிவோடு காரூவகியின் முகத்தைக் கூர்ந்து பார்த்தான். அவள் கண்களில் இப்போது தாரை தாரையாக நீர் சொரிந்துகொண்டிருந்தது.

"காரூவகி, ஏன் அழுகிறாய்? அந்தக் கொலைகாரனை நினைத்தா?" என்று கேட்டான் அசோகன்.

"இல்லை. அந்தக் கொலைகாரனை அந்தப் பயங்கர இரவோடு மறந்துவிட்டேன். அவன் தான் செய்த பாவத்தை தன் கண்ணீரால் கழுவிப் பிராயச்சித்தம் செய்துவிட்டான். என்றாவது ஒரு நாள் அவன் பௌத்த குரு உபகுப்தரின் அருளுக்குப் பாத்திரமாவான். அன்று அவன் மனம் ஹிம்சை வழிகளிலிருந்து திரும்பிப் பரிசுத்தமான அன்பையும் அஹிம்சை வழிகளையும் நாடும். என்றாவது ஒரு நாள் அவன் பௌத்த பிக்ஷுவாக மாறி உன்னத நிலையை அடைவான் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது!"

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

"பின் எதற்காக அழுகிறாய்?"

"ஒன்றுமில்லை, நான் அருமையாக வளர்த்த கிளியின் ஞாபகம் வந்தது. என் மாளிகை தீப்பற்றி எரியும்போது நான் தப்பி ஓட முயலுவதற்கு முன்னால் அந்தக் கிளிக்கூண்டைத்தான் திறந்துவிட்டேன். அங்கு ஏற்பட்ட கலவரத்தில் அது எங்கோ பறந்து போய்விட்டது" என்று காரூவகி விம்மி விம்மி அழுதாள்.

அசோகன் சிரித்தான். "உணவு சமைப்பதற்கும் உல்லாசமாக வைத்து விளையாடுவதற்கும் உபயோகப்படக்கூடிய ஒரு சிறு கிளிக்காகவா கண்ணீர் சிந்துகிறாய்?" என்றான் அசோகன் அலட்சியமாய்ச் சிரித்துக் கொண்டே.

"அற்ப ஜீவன் என்று சிரிக்கிறீர்கள். ஆனால் அதற்குள்ள விசாலமான இருதயம் உங்கள் மகத வீரன் எவனுக்கும் கிடையாது, அதை ஓயாமல் என் நெஞ்சோடு வைத்துக் கொஞ்சுவேன். விரட்டினாலும் என் மாளிகையை விட்டுப் போக அதற்கு மனம் வராது. பிறந்தது முதல் என் வாஞ்சையிலே வளர்ந்து வந்த கிளி அது. பாலன்னம் அருந்தும் பொழுதுதான் அது அக்கக்கா என்று கூவிக்கொண்டே பழங்களைத் தன் சிவந்த அலகால் கொத்திப் புசிக்கும். ஒரு நாள் நான் நோயாகப்படுத்திருந்தால் அது பழங்கள் இருக்கும் பக்கம் திரும்பிக்கூடப் பாராது!" என்று கண்ணீர் வடித்தாள் காரூவகி.

அசோகனுக்கும் கண்கள் கலங்கின. ஆனால் அதை அவன் வெளிக்காட்டிக்கொள்ளவில்லை. மனம் இளகுவது அரச குமாரர்களுக்கு ஒவ்வாத பலஹீனத்தையும் கோழைத்தனத்தையும் குறிக்கும் என்று நினைத்தான்.

முகத்தைத் திருப்பிக்கொண்டு வெகு நேரம் யோசித்தான். அந்த காரூவகி அவனிடமிருந்து தப்புவதற்காகத் தன் சாகஸத்தால் அவனுள்ளத்தில் விநோதமான பச்சாதாப உணர்ச்சிகளை எழுப்பி அவனைப் பலஹீனமாக்க முயலுகிறாளோ என்று நினைத்தான் அசோகன். அதற்கு இடங் கொடுக்கக் கூடாது என்று தன் இருதயத்தைக் கடினமாக்கிக் கொள்ள அருகிலுள்ள மதுஜாடியை எடுத்து ஐந்து மதுக் கிண்ணங்களில் மதுவை ஊற்றினான்.

காரூவகியின் முகம் இரத்தம் குன்றி வெளுத்தது. அசோகன் முதல் மதுக் கிண்ணத்தை எடுத்துக் குடித்தான்.

அவன் முகத்தில் குழைவு நீங்கிக் கடுமை உண்டாயிற்று.

அவன் இரண்டாவது கிண்ணத்தை எடுத்தான். அவள் வேண்டாம் என்பது போல் அவன் கைகளைப் பிடித்துத் தடுக்க முயன்றாள்.

"ஏன் தடுக்கிறாய்?" என்று எரிச்சலோடு கேட்டான் அசோகன்.

"யுவராஜா! நீங்கள் மதுவின் போதைக்கு ஆளாகாமல் சுய உணர்ச்சியோடு இருக்கும்போது அன்பாய் பேசுகிறீர்கள். என் இதயத்தின் குரல் உங்கள் இதயத்தில் ஒலிக்கிறது, ஒரு வாய் மது அருந்திவிட்டால் உங்கள் போக்கு கடுமையாக மாறிவிடுகிறது. எனக்குப் பீதி உண்டாகிறது. வேண்டாம். மது வேண்டாம். மது மனிதனை மிருகமாக்குகிறது; மனச்சாட்சியைக் கொன்று மனிதனை வெறி நாயாக்குகிறது என்று எங்கள் பௌத்த பிக்ஷு உபகுப்தர் சொல்லுகிறார்!" என்றாள் பரிதாபமாக காரூவகி.

"இந்தத் தனிமையான இரவில் உன் உபகுப்தரின் போதனைகளும் புத்தரின் நினைவும் எதற்கு?" என்றான் அசோகன் கடுமையாக. இரண்டாவது மதுக் கிண்ணத்தைக் குடித்துவிட்டுக் கீழே எறிந்தான்.

அவள் நடுங்கினாள். கூடாரத்தில் தனிமையும் இருட்டும் வெறுமனே கழிந்து கொண்டிருந்தது.

அசோகன் மூன்றாவது மதுக் கிண்ணத்தை எடுத்துக் குடித்தான். பிறகு அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்தான்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

மதமத வென்ற அவளது கவர்ச்சிகரமான கருவிழிகளும், தேனில் நனைத்த அத்திப்பழம் போன்ற அவளது உதடுகளும், அவள் உடலெங்கும் சொரிந்து கொண்டிருக்கும் புது வசந்தமும், சலவைக் கல்லின்மீது விரித்த மெல்லிய பட்டுப் போன்ற கன்னக் கதுப்புகளும், அவளது உடலின் வனப்பை மறைக்கச் சக்தியற்றுக் கிடக்கும் மெல்லிய அராபிய தேசத்துத் துணிகளும் கலையாத புது அழகும் அசோகனை வெறி கொள்ளச் செய்தன. அசோகன் நான்காவது மதுக் கிண்ணத்தைப் பருகிவிட்டுத் தூக்கி எறிந்தான். அவன் உணர்ச்சிகள் எல்லாம் விஸ்வரூபம் எடுத்து அவள் இளமை ஒன்றிலேயே குவிந்து நின்றது.

அந்தத் தனியான கூடாரம் முழுவதும் ரீங்காரமிடும் உணர்ச்சி அலைகளில் காரூவகி செயலற்றுச் சிலை போல உட்கார்ந்திருந்தாள்.

அசோகன் அவளுடைய மிருதுவான கைகளைப் பற்றினான். அவள் நெஞ்சு படபடவென்று அடித்துக்கொண்டது.

காற்றிலே படபடவென்று அடித்துக் கொள்ளும் கூடாரத்துத் துணிகள் கூட ஒரு கணம் செயலற்றுப் போய்விட்டன.

ஒருகணம் அந்தக் கரங்களின் ஸ்பரிசத்தில் உணர்வெல்லாம் பொங்கித் தாவ, மெய்மறந்திருந்துவிட்டு மெல்ல அசோகன் பிடியில் இருந்து காரூவகி தன் கைகளை விடுவித்துக் கொள்ள முயன்றாள். ஆனால் அசோகன் விடவில்லை. மற்றொரு கையால் அவள் கூந்தலையும் பிடித்திழுத்தவண்ணம் அவள் முகத்தை நோக்கிக் குனிந்தான். அவள் விடும் கண்ணீர்த் துளிகளுக்கு இடையே இன்னதென்று விவரிக்க முடியாத ஓர் ஆனந்தப் பரவச நிலையின் துடிப்பு அவள் கண்களில் நடமாடியது.

தடுக்க வேண்டுமென்ற ஆத்திரமும் தடுக்க முடியாமல் செயலற்றுப் போகும் உணர்வும் ஒன்றையொன்று போட்டியிட்டன.

அவள் முகத்தை அங்கும் இங்கும் எவ்வளவு திருப்பியுங்கூட, அசோகன் விடாமல் தன் பலம் பொருந்திய கைகளால் அவள் முகத்தை அசைய விடாமல் வைத்துக்கொண்டு, குனிந்து அவள் உதடுகளில் இதயத்து உணர்வு அலைகளைத் தேக்கினான். வண்டு ஊதாத அந்த வர்ணப்பூ இதழ்களில் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத உணர்ச்சிகளின் பனி நீரை நனைத்து விட்டான்.

அந்த ஒரு கணத்தில் அசோகன் கண் முன்னால் நின்ற மகத சிம்மாசனங்கூட மறைந்து போயிற்று. அவன் உள்ளத்தில் இளமை மூட்டிவிட்ட நெருப்பு நெய்ப் பந்தம்போல் தீ நாக்குகள் விட்டுக் கொழுந்துவிட்டு எரிந்தது. ஆனால் அவளோ ஐம் புலன்களின் பாய்மரம் ஒடிந்து உணர்ச்சிக் கடலில் விழுந்து மூழ்கும் தறுவாயிலும் உயிருக்காகத் தத்தளிப்பது போல், அசோகனின் மனப்போதையில் இருந்து தப்பத் தத்தளித்தாள்.

அசோகன் அவள் கூந்தலையும் கைகளையும் பற்றி இழுத்த வண்ணம் தந்தக் கட்டிலை நோக்கினான்.

அவள் தன் பலம் முழுவதையும் திரட்டி அவன் கைகளிலிருந்து தன் மெல்லிய கைகளைப் பறித்துக் கொண்டாள். அவனுடைய உள்ளப் போக்கிற்கு இசையமாட்டேன் என்பது போல் தலையை ஆட்டினாள்.

"ஏன்?" என்று கேட்டான் அசோகன் ஆத்திரத்தோடு.

"யுவராஜா! நான் உபகுப்தருக்கு வாக்குறுதி கொடுத்திருக்கிறேன். அந்த ஆதர்ஸ புருஷர் அநுமதியின்றி உள்ளம் இசைந்து என் இளமையை எவரும் தீண்ட விடமாட்டேன்."

"காரூவகி! அதோ அந்த மதுக் கிண்ணத்திலிருக்கும் மதுவை எடுத்துக் குடி. அர்த்தமற்ற உன் வாக்குறுதி, மனச்சாட்சி, உன் கோழைத்தனம் எல்லாம் பறந்து போகும். உனக்கு எஞ்சியுள்ள ஒரே இரவில் நாம் இருவரும் ஆனந்தமாகக் கழிப்போம்!"

"யுவராஜா! இருதயத்தின் இயக்கமின்றி மதுவின் போதையில் அநுபவிக்கும் ஆனந்தத்தில் உண்மையான சுவை இருக்குமென்றா நினைக்கிறீர்கள்? இல்லவே இல்லை. உணர்ச்சிகள் வெறிகளாகவும் கண நேர

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

சூறாவளியாகவும் மாறாமல், மென்மையான நீரோடை போல் சலசலத்துக் கொண்டிருக்கும் இதயங் கலந்த உறவில்தான் உண்மையான ஆனந்தமும், அழகின் ரச அனுபவமும் இருக்கும்."

அசோகன் பேசாமல் சிரித்தான்.

"யுவராஜா! உங்களை ஒன்று கேட்கிறேன். உண்மையாகப் பதில் சொல்கிறீர்களா? உங்கள் அந்தப்புரத்திற்கு எத்தனையோ அழகான பெண்கள் வந்து இரவைக் கழித்திருப்பார்கள். அவர்களில் ஒருத்தியின் பெயராவது உங்களுக்கு நினைவு இருக்கிறதா? அவளோடு கழித்த இன்ப இரவின் ஓர் அன்பு நிகழ்ச்சியாவது இப்போது நினைத்துப் பார்த்தால், பல மடங்காக இன்பக் கற்பனை பெருகச் செய்யுமா?" என்று கேட்டாள் காரூவகி.

அசோகன் "இல்லை" என்பதுபோல் மவுனமாகத் தலை குனிந்து நின்றான்.

"பின்னால் நினைத்துப் பார்க்குந்தோறும் பன்மடங்காக இன்பத்தைப் பெருக்கிக் காட்டாத ஆனந்த இரவுகளில் உண்மையான ரச அநுபவமும் சுவையும் எப்படி இருக்க முடியும்? அது உண்மையான ஆனந்த அநுபவமல்ல. அது க்ஷண நேரத்து உணர்ச்சிகளின் புயலுக்கு இலக்கான உள்ளத்தின் விவகாரங்களின் பொய்த் தோற்றந்தான் அது! நினைக்க நினைக்க இன்பம் ஊறும் இரண்டு இதயங்களின் பாசவலையல்ல அது."

"காரூவகி நாளைக் காலையில் உன்னை எப்படியும் உயிரோடு வைத்துக் கொளுத்தி விடுவார்கள், உனக்கு எஞ்சியிருப்பது இவ்விரவு ஒன்றுதான். இது உன் கடைசி இரவு. இந்த இரவுக்குள்ளாவது, இதுவரை நீ காணாத இளமையின் ஆனந்தம் என்ன என்பதை அநுபவித்துவிடு. சாவதற்கு முன்னாலாவது வாழ்வின் நீரோட்டம் போன்ற ஓர் இன்பத்தைத் தெரிந்து கொள்ள வேண்டாமா?"

"யுவராஜா! இன்பம் என்பது சரீரத்தில் இல்லை; இதயத்தில் தான் இருக்கிறது! இதயங்களின் கூட்டுறவில்தான் உண்மையான இன்பம் மலர்கிறது. போதுமான மனப் பண்பும் கலை உள்ளமும் இல்லாதவர்கள்தான் சரீரத்தின்மூலம் இதயத்திற்கு இன்பத்தைத் தேடிக் கொள்கிறார்கள், அநுபவிக்கத் தெரிந்தவர்கள் சரீரத்தின் உதவியும் ஐம்புலன் உதவியும் இல்லாமலேயே இதயம் ஒன்றாலேயே ஆனந்தத்தை அநுபவித்து விடுகிறார்கள்!"

"காரூவகி! உன் தத்துவமும், தர்க்க சாஸ்திரமும் இப்போது எனக்குத் தேவையில்லை. உன் அழகு ஒன்றுதான் எனக்குத் தேவை!"

"யுவராஜா! நிந்திக்கப்பட்ட புலன் வெறியால் நீங்கள் அநுபவிக்க விரும்புவது என் அழகையல்ல; என் இளமையை! அவ்வளவுதான்! அதில் உண்மையான சுவையும் இராது. பலாத்காரமாக மலரைக் கசக்கி முகர்பவர்கள், மலரின் அழகையும் மணத்தையும் அநுபவிப்பது இல்லை; க்ஷணத்தில் அடங்கிவிடும் அர்த்தமற்ற ஓர் உணர்ச்சியின் ஸ்தாயியைத்தான் அநுபவிக்கிறார்கள்! யுவராஜா! புயலுக்கு நடுவே நின்று, விருக்ஷங்களைச் சாய்த்து வண் மாரியை எழுப்பிக்கொண்டு வரும் புயலைப் பார்த்து அநுபவிப்பவன் வெகு சீக்கிரத்தில் மனம் சோர்ந்துபோய் விடுகிறான். அவன் உள்ளத்தில் இன்ப ஜ்வாலை வெகு சீக்கிரத்தில் தணிந்து விடுகிறது. ஆனால் மெல்லிய தென்றல் காற்றை அநுபவிப்பவன் இரவு முழுவதும் அநுபவித்துக் கொண்டிருப்பான். பின்னதை கலைஞர்களும் கவிஞர்களும் அறிவாளிகளும் அஹிம்சாவாதிகளும் விரும்புகிறார்கள். பலாத்காரச் செயல்களில் ஈடுபடுபவர்கள்தான் முன்னதை விரும்புகிறார்கள்" என்றாள் காரூவகி.

அசோகன் கண்களில் ஒரு புதிய ஒளி உண்டாயிற்று! அவன் கண் முன்னால் புதிய உலகங்கள் உதயமாவதுபோல் தோன்றியது. அவன் முகத்திலிருந்த கடுமையும் வேகமும் குறைந்தது. ஆனால் மறுகணம் ஐந்தாவது கிண்ணத்தில் இருந்த மதுவைக் குடித்துவிட்டு வெறிபிடித்து விட்டவன்போல அவள் கூந்தலைப் பிடித்திழுத்தான்.

"காரூவகி, வலையில் விழுந்த மீனை மறுபடி செம்படவன் கடலுக்குள் நழுவவிடுவதில்லை, உன் சாகஸப் பேச்சுக்களை நான் நம்பவில்லை. இது உனக்குக் கடைசி இரவு. நாளை எப்படியும் உன்னை

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

உயிருடன் வைத்துக் கொளுத்தி விடுவார்கள். அதற்குள் எஞ்சிய இந்த இரவில் வண்டுதாத புது மலரின் தேனைப் பருகி விடப் போகிறேன், அதோடு மட்டுமல்ல! நாளை உன்னைச் சுறாமீன் சாட்டையால் அடித்துச் சித்திரவதை செய்து விசாரிக்கும்போது உண்மையில் கொலைகாரன் யாரென்று உனக்குத் தெரியா விட்டாலும் எவனாவது ஒருவனைச் சுட்டிக் காட்ட நேரிடும், அப்போது வேதனைகளைப் பொறுக்க முடியாமல் என் மீது பழிதீர்த்துக் கொள்வாய். அதனால் இன்றிரவு உன் அழகை அநுபவித்த பிறகு உன்னைக் கொன்றுவிடப் போகிறேன்!" என்று வெறி பிடித்தவன் போல் கத்தினான் அசோகன்.

ஒரு கணம் காரூவகி செயலற்றுப் போனாள். மறுகணம் அவளும் உணர்ச்சி வசமானாள். அசோகனுடைய இடுப்பிலிருந்த உடைவாளை ஒரு கையால் உருவி மற்றொரு மெல்லிய கையை அசோகன் முன் நீட்டி, "யுவராஜா! சித்திரவதைகளின் வேதனையைப் பொறுக்காமல் உங்களைச் சுட்டிக் காட்டுவேன் என்றா நினைக்கிறீர்கள்? இதோ பாருங்கள்!" என்று அந்தக் கத்தியால் இரத்தம் சிதறும்படி தன் கையில் கீறிக் கொண்டாள். அவள் கையிலிருந்து சிதறிய இரண்டு இரத்தத் துளிகள் அசோகன் முகத்தில் வந்து அடித்தன. அந்த இரத்தம் பீறிடும் அழகிய கைகளைப் பார்க்கும்

போது அசோகன் மனதில் யாரோ இரத்தம் வடியக் கீறிக் கொண்டிருப்பதைப் போல் தோன்றியது.

காரூவகி உணர்ச்சிப் புயலில் சிக்கியவளாய், "இதோ பாருங்கள். இரத்தம் பீறிடும் இந்தக் கைகளின் வேதனை தெரியவில்லை. ஏன் தெரியுமா? உங்கள் சந்தேகத்தை நீக்கி உங்கள் இருதயத்தை அடைய உதவுகிறது என்ற அன்பின் வேகத்தால் தான்!" என்று கத்தினாள்.

பிறகு வெடவெட என்று நடுங்கும் அசோகன் முன்னால் அவள் அந்த இரத்தம் தோய்ந்த கத்தியை நீட்டி, "மகத சாம்ராஜ்யத்தை ஆளப்போகும் அசோக சக்கரவர்த்தியே! இதோ உங்கள் பிரஜை உங்கள் முன் அனாதரவாய் நிற்கின்றேன். உங்கள் கையால் மதுக் கிண்ணத்தில் மதுவை ஊற்றிப் பலாத்காரமாய் எனக்குப் புகட்டுங்கள். இன்னதென்று விவரிக்க முடியாத ஆகர்ஷணத்தால் உங்களை நாடித் தவிக்கும் இந்தப் பேதை உள்ளம் ஊமையாய், உணர்ச்சியற்ற மரமாய், உயிரில்லா வர்ணப் பூவாய், மர மரத்துப் போய்விடும், பிறகு போதையில் செயலற்றுப் பிரேதமாய் உங்கள் கையிலிருக்கும் இந்த அழகானவளின் இளமையை அள்ளிப் பருகுங்கள்.

புழுவின் இறைச்சியைவிட ருசியாய் இருக்கும்! செத்த கடல் மீனின் காட்சியைவிட அழகாயிருக்கும்! பிறகு உங்கள் சுகத்திற்கும் இதயத்தின் கனவுகளுக்கும் பாத்திரமாய் இருந்த என்னை இந்தக் கத்தியால் குத்திக் கொன்று விடுங்கள். இதோ நிற்கிறேன், செய்யுங்கள். உம், என்னைக் குத்திக் கொன்று விடுங்கள். ஆனால் அதற்குப் பிரதியாக கருணை வடிவமான புத்த பிரானின் நாமத்தை ஒரு முறை சொல்லுங்கள். நாளை நீங்கள் ஆளப்போகும் மகத சாம்ராஜ்யத்தை மதச் சார்பில்லாமல் ஜீவஹிம்ஸை புரியாமல் ஆளுவதாக வாக்குறுதி கொடுங்கள். போதும்! நான் உயிர்விடுவதற்கு முன்னால் உண்மையாகவே உங்களை விரும்பினேன் என்ற உண்மையை உணருங்கள். நான் அதற்குப் பிறகு ஆனந்தமாக உயிர் விடுவேன். உம், ஏன் தயங்குகிறீர்கள்? அதோ கத்தி! அதோ மதுக் கிண்ணம்! இதோ என் இளமை" என்றாள் காரூவகி.

அசோகன், செயலற்று ஸ்மரணையற்று பேசச் சக்தியற்று, செதுக்காத விகாரச் சிலைபோல் நின்றான்!

அப்போது திரைச் சீலையை நீக்கிக்கொண்டு முரடர்களும் கொலையாளிகளும் பின்தொடர மூத்த இராஜ குமாரனான சுசீமன் வெகு ஆத்திரத்துடன் அசோகனின் கூடாரத்திற்குள் நுழைந்தான்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?



அத்தியாயம் 3

## சோதனையும் வேதனையும்

**"தான் ஒரு குற்றமும் செய்யாது இருந்தும், தனக்குக் கிடைக்கும் நிந்தனையையும், அடிகளையும், சிறைத் தண்டனையையும் தாங்கிக்கொண்டு, சகிப்புத் தன்மையையே தன் சக்தியாகவும், பலன்களையே தன் சேனைகளாகவும் எவன் பெற்றிருக்கிறானோ, அவனையே அந்தணன் என்பேன்."**

—தம்மபதம் 399

கிழக்கு வானம் கிழவியின் தலையைப்போல், நரைக்கத் தொடங்கியது.

அசோகனின் முகம் வெளுத்தது. காரூவகி நடுங்கினாள்.

சுசீமன் புருவத்தை நெறித்தான்.

"அசோகா! இரவு முழுவதும் இந்த வேவுகாரியை ஏன் உன் கூடாரத்தில் வைத்திருந்தாய்? நம் தேவசேனனைக் கொலை செய்த காதகனோடு தப்பி ஓடினாளே, இவள் பாதங்களை இரவு முழுவதும் முத்தமிட்டுக் கொண்டிருந்தாயா? தக்ஷசீலத்தின் கலகத்தை அடக்க மகத மன்னர் உன்னை அனுப்பினாரே தவிர, அழகிய கொலைகாரிகளோடு சரசமாட அல்ல. அசோகா, இவள் உன் காதலி அல்ல; மகத சாம்ராஜ்யத்தின் கைதி. இதோ மாமந்திரி சாணக்கியரின் உத்தரவு, இவளை என்னிடம் ஒப்புவிக்கும் படி! உடனே அனுப்பு. இவளைக் குற்ற ஸ்தலத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும்!" என்றான் ஏளனமாக மூத்த இராஜகுமாரன் சுசீமன்.

அசோகன் காரூவகியைப் பரிதாபமாகப் பார்த்தான். எதிர்பாராமல் கிடைத்த யவன மது ஜாடிக் கப்பலை புயல் காற்றிற்குச் சூறை கொடுப்பதைப் போல் இருந்தது. ஆனால் அவன் முகத்தில் இருந்த கொடூரம் நீங்கிப் பச்சாதாப உணர்ச்சி ததும்பி நிற்பதைக் கண்டதும், காலை பனி நீரைப் போல காரூவகியின் முகத்திலிருந்த கவலை நீங்கி, அமானுஷ்யமான களிப்பு நிலவியது.

சுசீமன் பரபரவென்று காரூவகியின் கைகளைப் பிடித்திழுத்துக்கொண்டு அசோகனின் கூடாரத்தை விட்டு வெளியே வந்து, முரடர்களும் காவலாளிகளும் பின்தொடர குற்ற ஸ்தலத்தை நோக்கிச் சென்றான்.

அப்போது கிழக்கு வானத்தில் கிழவியின் புன்னகை ரேகைகள் படரத் தொடங்கின.

இன்னும் கொஞ்ச நேரத்தில் பொழுது நன்றாக விடிந்து விடும். மா மந்திரி சாணக்கியர் காலை சந்தியா வந்தனங்களை முடித்து வந்ததும், காரூவகியைக் குற்ற மேடையில் ஏற்றி விசாரிக்க ஆரம்பித்து விடுவார்கள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?




Click Here to join our Telegram Group

For free eBooks, join us on Telegram

https://t.me/tamilbooksworld

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

அசோகனுக்கு நிம்மதியில்லை. புழுப் போலத் துடித்தான். அதிகாரச் சின்னங்களையும், அரசாங்க முத்திரை மோதிரத்தையும், அரசகுமாரனுக்குரிய பொற் கிரீடத்தையும் அணிந்து கொண்டு அசோகன் குற்ற ஸ்தலத்தை நோக்கிப் புறப்பட்டான்.

குற்ற ஸ்தலமென்பது கொடுமை சம்ஹாரத் தாண்டவம் புரியும் ஒரு பயங்கரமான பிரேத பூமி! சமணர்கள் கண்டால் அன்புக் கண்ணீர் வடிக்கும் ஒரு சவக்காடு. திறந்த வெளியிலுள்ள ஒரு பொட்டலில் எதிர் எதிராக இரண்டு விசாலமான மேடைகள் இருந்தன. அவற்றுள் விகாரத் தோற்றமுள்ள உயரமான கருங்கல் மேடைதான் குற்றம் சாட்டப்பட்டவர்களை ஏற்றிச் சித்திரவதை செய்து விசாரிக்கும் விசாரணை மேடை. அதற்கு எதிரே உள்ள அழகான பளிங்குக்கல் மேடை இராஜப் பிரதானிகளும் இரஜ்ஜுகர்களும் பிற வேதியர்களும், அதிகாரிகளும், அரசப் பிரதானிகளும் அமர்ந்திருக்கும் நியாய மேடை.

விசாரணை மேடையின் நடுவே, முள் ஆணிகள் பதித்த உயரமான ஒரு ஸ்தம்பம் நடப்பட்டிருந்தது. அதைச் சுற்றிலும் செப்புக் கம்பியைப் பழுக்கக் காய்ச்சும் அடுப்பும் சூட்டுக் கோல்களும், குற்றவாளிகளின் அங்கங்களை வெட்டும் பல விதமான பட்டாக்கத்திகளும், மான் தோல் சவுக்கு, குதிரைச் சவுக்கு, யானைக் கண்ணி சாட்டை, சுறாமீன் முள் சவுக்குகளும், மற்றும் சித்திரவதை செய்ய உதவும் கோரமான பல கருவிகளும் அந்த மேடையில் சிதறிக் கிடந்தன. பட்டாக்கத்திகள் ஏந்திய கொடூரமான கிரேக்க நாட்டுக் கொலையாளிகளும் ஈட்டி ஏந்திய மகத வீரர்களும், அந்த மேடையில் உலாவிக்கொண்டு இருந்தார்கள்.

அந்த மேடையிலும், மேடையைச் சுற்றிக் கீழேயும் தலை, கால், கைகளற்ற பிணங்களும் குற்றுயிரும் கொலை உயிருமாகக் கிடக்கும் கலகக்காரர்களின் உடல் கூடுகளும் மண்டை ஓடுகளும், பிணங்களின் இரத்தத்தைக் குடித்துப் பறக்க முடியாமல் திணறிக் கிடக்கும் கழுகுகளும், கடைசி ஆயுஷ் ஹோமம் செய்வதற்காக குற்றுயிராகக் கிடக்கும் கலகக்காரர்களைப் புரட்டிக் கொண்டிருக்கும் புரோகிதர்களும் இருந்தார்கள். சுற்றிலும் ஆவி விட்டுக் கொண்டு இருக்கும் எண்ணற்ற எண்ணெய் கொப்பரைகளில் கணக்கற்ற கலகக்காரர்கள் உயிருக்காகத் துடித்துக் கொண்டிருந்தார்கள். பேய்த்தனமான கூச்சல்களும் கர்ப்பிணிகளின் புலம்பல்களும், குழந்தைகளின் அழுகையும், உயிர்விடும் குற்றவாளிகளின் ஈனஸ்வரத்தில் கூவும் அவல ஓசைகளும், வேதனைகளின் முனகல்களும் அந்தக் குற்ற ஸ்தலத்தைச் சுற்றி பயங்கரமான ஒரு நரகத்தைச் சித்தரித்துக் காட்டியது.

அந்த விசாரணையின் மேடையின் நாற்புறமும், ஏறும் படிகளிலும் ரம்மியமான சிற்ப ஜாலங்கள் இருந்தன. குடலை உருவி இரத்தம் குடிக்கும் நரஸிம்மமூர்த்தி, மகிஷாசுரமர்த்தினி, மண்டையோடுகளை மாலையாக அணிந்திருக்கும் கபால பைரவர் போன்ற ரம்மியமான உருவங்களை யாரோ பிரசித்திபெற்ற மகத சிற்பி ஒருவன் அக் கொலை மேடையில் அபூர்வமாகச் செதுக்கியிருந்தான்!

கீழே கிடக்கும் பிணங்களெல்லாம் பெரும்பாலாகத் தலையற்ற முண்டங்களாகவே கிடந்தன. அவற்றின் தலைகளையெல்லாம் பொறுக்கி யாரோ பிரசித்தி பெற்ற சமஸ்தான பூக்காரனொருவன் மாலைகளாகத் தொடுத்து, "மகத மன்னருக்கு ஜே!" என்ற எழுத்துக்களாக அடுக்கியிருந்தான்!

அதற்கு எதிரேயுள்ள அழகான பளிங்குக்கல் நியாய மேடை மீது சீனத்துப் பட்டும் தமிழ் நாட்டின் விலையுயர்ந்த இரத்தினக் கம்பளங்களும் விரிக்கப் பட்டிருந்தன. அவற்றின் மேல் நான்கு வரிசைகளாக ஆசனங்கள் போடப்பட்டிருந்தன. நான்கு வர்ணத்தைச் சேர்ந்த அதிகாரிகள் ஜாதி ஜாதியாகப் பிரிந்து உட்காருவதற்காக அவ்வளவு அற்புதமான புராதன தர்ம ஏற்பாடு!

நியாய மேடையில் நடுநாயகமாக முன் வரிசையில் மாமந்திரி சாணக்கியர் உட்கார்ந்திருந்தார். அவருக்கு இருபுறமும் மகதத்தின் ராஜ குமாரர்களான அசோகன், சுசீமன் இருவரும் ஆசனங்களில் அமர்ந்திருந்தார்கள்.

மேடையின் அருகே தொங்கும் நீதியின் சாவு மணியை பிரவேதிகன் ஒருவன் "டணார்" என்று அடித்தான்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

இரண்டு கொலையாளிகள் பின்தொடர இரு பயங்கரமான கிரேக்க அலிகள் காரூவகியை இழுத்துக் கொண்டு வந்து கீழே இரத்தம் சிந்திக் கிடக்கும் தரையில், நியாய மேடைக்கு முன் நிறுத்தினார்கள்.

அசோகனோ முள் முனையில் உட்காந்திருப்பது போல், தமிழ் நாட்டு இலவம் பஞ்சு பரப்பிய, பொன்னாசனத்தில் அமர்ந்திருந்தான். நரபலி கேட்கும் கபாலீஸ்வரர் போல சுசீமன் ஆசனத்தில் உட்கார்ந்திருந்தான். சாணக்கியரோ குற்றவாளியின் புரட்சிக் கண்களில் எதிர்கால சரித்திரத்தை ஊடுருவிப் பார்ப்பது போல் உட்கார்ந்திருந்தார்.

விசாரணை ஆரம்பமாயிற்று.

"நீ யார்? எந்த வர்ணத்தைச் சேர்ந்தவள்?" என்றார் சாணக்கியர்.

"முக்தி நிலை ஜீவகாருண்யத்தில்தான் இருக்கிறது என்று நம்பும் வர்ண பேதமற்ற ஒரு ஜீவன்!" என்றாள் காரூவகி.

"புரியச் சொல்."

"புறவாழ்வில் நான் மகத சாம்ராஜ்யத்தின் பிரஜை. அக வாழ்வில் நான் புத்த சாம்ராஜ்யத்தின் பிரஜை."

"நீ பௌத்தமதத்தை பின்பற்றுகிறவளா?"

"இல்லை, பௌத்தம் ஓர் மதமல்ல. எல்லோரும் ஓர் குலம் என்ற சமதர்மக் கொள்கைகளைப் பரப்பி அன்பையும் அஹிம்சையையும் வற்புறுத்தும் ஓர் சத்சங்கம்!"

"நீ ஏன் சனாதன ஜாதிகளை ஒப்புக்கொள்ளாத புத்தர் வழியைப் பின்பற்றினாய்?"

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற தமிழ் நாட்டில் சிறு வயதில் சிறிது காலம் இருந்திருக்கிறேன். அதன் பயன்தான் புத்தர் காட்டிய சமதர்ம ஞான தீபத்தை என்னால் பின்பற்ற முடிந்தது.

"உன் பெயரென்ன?"

"காரூவகி"

"நீ ஏன் தேவசேனன் கூடாரத்திற்குச் சென்றாய்? நீ இந்நகர் தாசியா?"

"இல்லை; குலமகள்; கொடுமையாய் என்னைக் கூடாரத்திற்குக் கொண்டு போனார்கள்."

"உன் குடிசை எங்கிருக்கிறது?"

"நகர வணிகர் வீதியிலுள்ள குபேரன் மாளிகையில்தான் இருந்தேன். தேவசேனனின் ஏவலினால் அதைப் போர் வீரர்கள் இப்போது தீ வைத்துக் கொளுத்தி விட்டார்கள்."

"உனக்கு தாய் தந்தையர்கள் இருக்கிறார்களா?"

"இருந்தார்கள்."

"உன் தந்தை என்ன ஆனான்?"

"மாளிகை எரியும்போது, தேவசேனனின் கையாட்கள் அவர் முதுகில் குத்திக் கொன்று விட்டார்கள்."

"உன் தாய் என்ன ஆனாள்?"

"அவள் தமிழ் நாட்டில் வளர்ந்த பெண். கணவன் குத்துண்டதும் குத்திய இரண்டு போர்வீரர்களின் மார்பிலும் கத்தியால் குத்திக் கொன்று தீயில் வெந்துபோனாள்!"

"எங்கள் தக்ஷசீல அதிகாரியைச் சதி செய்து கொன்றாயா?"

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

"இல்லை; அன்பு வழியைப் பின்பற்றுகிறவர்களுக்குச் சூழ்ச்சியும் சதியும் செய்யும் இருதயம் இருக்காது!"

"உன்னோடு தப்பித்து ஓடினானே, அந்தக் கொலைகாரன் பெயரென்ன?"

"தெரியாது."

"அவன் அடையாளங்கூடவா சொல்லத் தெரியாது?"

"தெரியாது! அவனோடு தப்பித்து ஓடும்போது கூடாரம் முழுவதும் இருட்டாயிருந்தது. அவன் முகத்தைக்கூட நான் பார்க்கவில்லை."

"பொய் சொல்லுகிறாய். நான் நம்பவில்லை. ஏ பெண்ணே! அந்தக் கொலைகாரன் மகத சாம்ராஜ்யத்தைக் கவிழ்க்க முயலும் கலகக்காரனின் தலைவனாய் இருக்கவேண்டும். அல்லது இந்தக் கொலையின் பின்புறத்தில் ஏதோ பெரிய அரசியல் சூழ்ச்சி இருக்க வேண்டும். அந்தக் கொலைகாரனைக் கண்டுபிடிக்காமல் நான்விடப் போவதில்லை. ஆகையால் பெண்ணே, வீண் அவஸ்தைகளுக்கு உள்ளாகாதே. அந்தக் கொலைகாரன் யாரென்று சொல்லி விடு" என்று கேட்டார் சாணக்கியர் மிகவும் தீர்மானமான குரலில்.

"நீங்கள் அடித்தாலும் உதைத்தாலும் உண்மை இதுதான். எனக்குத் தெரியாது!" என்றாள் காரூவகி மிகவும் உறுதியாக.

சுசீமன் கோரச் சிரிப்பு ஒன்று சிரித்துக் கைகளைத் தட்டினான்.

"குருஜீ! இவள் சாகஸக்காரி! இவளைச் சித்திரவதை செய்து தான் உண்மையைக் கக்க வைக்க வேண்டும்" என்று கூவினான் சுசீமன்.

சாணக்கியரோ, "சுசீமா! நான் மகதத்தின் அரசியல் ஞானியாயினும், தர்மத்தைப் போதிக்கும் சன்யாசி. அரசியல் தண்டனை முறைகளை, அர்த்த சாஸ்திரத்தில் எழுதுவேனே தவிர, சித்திரவதைகளை என் கண்ணால் பார்க்க மாட்டேன். சித்திரவதையின் எந்த உபாயத்தையாவது கையாண்டு, இவளிடமிருந்து உண்மையை விசாரி" என்று வேறு புறம் திரும்பி உட்கார்ந்து கொண்டார்.

சுசீமன் கைகளைத் தட்டினான். இரண்டு முரட்டுக் கிரேக்க அலிகள் காரூவகியைப் பயங்கரமான விசாரணை மேடைக்கு இழுத்துச் சென்றார்கள். அசோகன் முகம் வெளுத்தது. புழுப்போல் ஆசனத்தில் துடித்தான்.

"மகராஜ்! இவளுக்கு எந்தச் சித்திரவதையைக் கையாளலாம்?" என்று பிரவேதிகள் கேட்டான்.

"இவள் கைகளை வெட்டு!" என்று சுசீமன் எழுந்து கத்தினான்.

"அது வேண்டாம்!" என்று அசோகன் எழுந்து கத்தினான்.

"ஏன்? அந்த மெல்லிய கைகள் அணைப்பதற்கு உள்ளவை என்று நினைக்கிறாயா, அசோகா?" என்று உறுமினான் சுசீமன்.

அசோகன் பேசாமல் இருந்தான்.

"அப்படியானால் அவள் கை விரல்களை வெட்டிவிடுங்கள்" என்று சுசீமன் கத்தினான்.

"அதுவும் வேண்டாம்!" என்று அசோகன் கூவினான்.

"ஏன், அந்தப் பஞ்சு விரல்கள் கன்னங்களில் உணர்ச்சிப் பூக்கள் பறிக்கவேண்டியவையென்று நினைக்கிறாயா, அசோகா? அப்படியானால் அவள் நீண்ட கூந்தலைச் சிரைத்துவிடுங்கள்!"

"அதுவும் வேண்டாம்!"

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

"ஏன், அவள் கூந்தல் வீர கவசமணிந்த மார்பில் புரள வேண்டியவை என்று நினைக்கிறாயா, அசோகா?" என்றான் சுசீமன் மிகவும் ஏளனமாக, பிறகு அவன், "அப்படியானால், கொலை காரனைக் கண்ணால் பார்த்ததுகூட இல்லை என்று சாதிக்கும் அவளுடைய அழகிய கண்களைச் சூட்டுக் கோலால் பொசுக்கிக் குருடாக்கி விடுங்கள்!" என்றான்.

"அதுவும் வேண்டாம்!" என்று அசோகன் கத்தினான் குரல் விம்ம.

"ஏன், அந்த அழகிய கண்கள் கவிதை படிக்க வேண்டியவை யென்று நினைக்கிறாயா, அசோகா? அந்தச் சதிகாரியை உயிரோடு கொல்வதுதான் சரியான தண்டனை, அசோகா!"

"ஐயோ, அவளைக் கொல்லுவதா? வேண்டாம்!"

"ஏன், அந்த அழகிய குமரி அரச குமாரர்களின் பஞ்சணையில் புரள வேண்டியவள் என்றா அசோகா?" என்று சுசீமன் மிகவும் ஏளனமாக இரைந்து சிரித்தான்.

"குருஜீ! சுசீமனைப் பாருங்கள். உள்ளே ஓர் அர்த்தத்தை வைத்துக்கொண்டு அதிகாரிகளின் முன்னிலையில் என்னை அவமானப்படுத்துகிறான். வாளுக்கு வாளால் மட்டுமல்ல, வார்த்தைக்கு வார்த்தையாலும் பதில் சொல்லத் தெரியும். ஆனால் அது மகத சாம்ராஜ்யத்தின் பெருமைக்கு இழுக்கு; தன் தள்ளாத வயதினால் உயிர் நலிந்துகொண்டிருக்கும் என் தந்தை பிந்துசார மன்னரின் உயிருக்கு ஹானியென்று பேசாமல் இருக்கிறேன்" என்றான் அசோகன் ஆத்திரத்துடன்.

"பின் ஏன் அசோகா சுசீமன் இடும் ஒவ்வொரு கட்டளையையும் வேண்டாம் என்கிறாய்?" என்று கேட்டார் சாணக்கியர்.

"குருஜீ, உங்களுக்குத் தெரியாத நீதி சாஸ்திரமில்லை, அங்கங்களைக் குறைப்பதும், பழுதுபடுத்துவதும் தண்டனை வகைகளைச் சேர்ந்ததே தவிர, நீதி வழங்குவதற்கு முன்னால் குற்றவாளிகளை விசாரிக்க உபயோகப்படுத்தும் முறைகள் அல்ல அவை. மகதப் பேரரசின் நீதிக்கு சுசீமன் இடும் கட்டளைகள் புறம்பாக இருக்கக் கூடாது என்றுதான் விரும்புகிறேன்!"

"ஆம் சுசீமா, அசோகன் சொல்வது சரிதான். அதுதான் விசாரணை முறை. அங்கங்களை வெட்டாமலும் குறைக்காமலும் வேறு ஏதாவது சித்திரவதை முறையைக் கையாண்டு அவளிடம் உண்மையை விசாரி" என்றார் சாணக்கிய ஞானி.

"அப்படியானால், ஏ! கொலையாளியே! அவளுக்கு இருநூறு சாட்டையடி கொடு" என்று கத்தினான் சுசீமன்.

"இருநூறு சாட்டையடியா? குருஜீ, அவள் பெண். அவளுடைய மெல்லிய தேக அமைப்பு தாங்காது. உயிருக்கு ஹானி ஏற்படும்" என்றான் அசோகன் பரிதாபமாக.

"குருஜீ! நான் அவளுடைய மெல்லிய தேக அமைப்பை ஸ்பரிசித்ததில்லை. அதனால் அப்படிக் கட்டளையிட்டேன்: சாட்டையடிகளின் எண்ணிக்கை வேண்டாம். அவள் ஸ்மரணை தப்பும் வரை அவளைச் சாட்டையால் அடித்து விசாரிக்கட்டும். உயிர் நழுவிவிடும்போல் இருந்தால் சாட்டையடியை நிறுத்தி விடலாம், உம், ஏ, கிரேக்க மூடா! ஏன் பேசாமல் இருக்கிறாய்? அவளை முள் ஆணிக் கம்பத்தில் பிடித்துக் கட்டு!" என்று கத்தினான் சுசீமன்.

இரண்டு முரடர்கள் பயங்கரச் சிரிப்புடன் அவளைப் பிடித்து முள் ஆணி ஸ்தம்பத்தோடு சேர்த்துச் செப்புக் கம்பி கயிற்றால் அசைய முடியாமல் கட்டினார்கள். அவள் முதுகில் பாயும் முள் ஆணிகளின் வேதனையைத் தாங்காமல் "ஹா" வென்று ஈனஸ்வரத்தில் கூவி நெளிந்தாள் காருவகி.

"உம், சாட்டையால் அடி" என்று கத்தினான் சுசீமன்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

"எந்தச் சாட்டையால் அடிப்பது?" என்று கூவிக் கேட்டான் கொலையாளி.

"சுறாமீன் முள் சாட்டையால் அடி!" என்று கூவினான் சுசீமன்.

"சுறாமீன் சாட்டையா? அது வேண்டாம்; வெறும் மான்தோல் சாட்டையே போதும்" என்றான், அசோகன் ஈனஸ்வரத்தில்.

"அசோகா! மான் தோல் சாட்டை நம் நாட்டில் குழந்தைகளை அடிக்கத்தான் பயன்படும். வேண்டுமானால் நீ மான் தோல் சாட்டையை வாங்கி அவள் முதுகில் அடி, அதற்குப் பதில் அவள் தன் சடையால் உன் தோளில் அடிப்பாள்!" என்று ஏளனமாகச் சிரித்தான் சுசீமன்.

அசோகன் தலை குனிந்தான். ஆத்திரத்தால் அவனுதடுகள் துடித்தன.

"ஏ, கொலையாளியே! ஏன் சும்மா நிற்கிறாய்? முரடர்களையடித்து முள் முனை மழுங்காத சாட்டையால் உன் பலமெல்லாம் திரட்டி அடி!" என்று அகோரப் பசி பிடித்தவன்போல் கத்தினான் சுசீமன்.

ஒரு யவன அடிமை கட்டளைக் கொம்பை எடுத்து உயிரைக் குடிப்பதுபோல் பூம் பூம் என்று ஊதினான்.

அந்தக் கட்டளையைக் கேட்டதும் மூன்று மத யானைகளின் பலமுள்ள ஒரு கிரேக்க நாட்டுக் கொலையாளி ஒருவன், முள் முள்ளாய் செருகியிருக்கும் நீண்ட மீன் வால் சாட்டையை ஓங்கி காரூவகியை அடித்தான். அவள் அம்மா என்று அலறினாள்.

முதல் சாட்டையடி அவள் தோள்களைச் சுற்றி மார்பில் விழுந்தது, சாட்டையடியின் வேகத்தில் அவள் தோளின் இரு புறமும் மார்புத் துணி கிழிந்து விழுந்தது.

எதிரே நூற்றுக்கணக்கான யுவ புருஷர்கள் நிற்கிறார்கள். தன் இளமையின் புது வனப்பை புருஷர்களின் மத்தியில் சூரிய வெளிச்சத்தில் பார்த்து அவள் கண்கள் கூசின. அவள் வேதனைகள் நடுவே வெட்கம் தாங்க முடியாமல் கைகளை எடுத்து இருதோள் மருங்கும் கூச்சத்தால் மறைத்துக்கொள்ள முயன்றாள். ஆனால், ஸ்தம்பத்தோடு கட்டப்பட்டிருந்த கைகளை அசைக்கவும் முடியவில்லை. இறுக்கமாக கட்டப்பட்டிருந்த ஸ்தம்பத்திலிருந்து கூச்சத்தால் சிறிதுகூட நெளியவும் முடியவில்லை. தலையைக் குலுக்கி கூந்தல் முன்னால் தன் மேனியின் மேல் விழும்படி செய்து ஒருவாறு தன் நிலையைச் சமாளித்துக்கொண்டாள். பிறகு பரிதாபகரமாக அசோகனைப் பார்த்தாள்.

அசோகன் கண்கள் கலங்கின.

"உம், அந்தக் கொலையாளி யார்?" என்று சாட்டையைப் பயங்கரமாக ஓங்கினான் முரடன்.

"தெரியாது" என்றாள் காரூவகி திடமாக.

இரண்டாவது சாட்டையடி இன்னும் பலமாக அவள் மெல்லிய உடலில் விழுந்தது. சாட்டையின் சிறு முள் நுனிகள் கீறி, அவளது முத்துச் சிப்பி போன்ற வெண் உடலெங்கும் பொட்டுப் பொட்டாக இரத்தப் புள்ளிகள் விழுந்தன.

"உம்; அந்தக் கொலைகாரன் யார்?"

"தெரியாது!"

முரடன் தன் பலம் முழுவதும் திரட்டி சாட்டையை இன்னும் உயரத் தூக்கி ஓங்கினான்.

அசோகனால் பொறுக்க முடியவில்லை.

"ஏ, அடிமையே! மெல்ல அடி!" என்றான் அசோகன் எழுந்து.

"ஆம், மெல்ல அடி, ராஜகுமாரர்களின் பஞ்சணையில் புரள வேண்டிய மெல்லிய உடல் அது! பாவம், கன்றிப் போகும்!" என்று ஏளனமாகச் சிரித்தான் சுசீமன்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

அவள் நடுங்கினாள்.

இராஜகுமாரர்களிருவரும் அந்தப் பெண்ணை முன்னிலைப் படுத்தி, ஏளனமாகவும் குறும்பாகவும் வார்த்தைகளைக் கொட்டி மூர்க்கமாகத் தாக்கிக்கொள்வது, இரண்டு முரட்டு மாடுகள் மூர்க்கமாக ஒன்றையொன்று முட்டித் தாக்கிக்கொள்வது போல் இருந்தது.

அசோகனால் தன் சகோதரனின் ஏளனங்களைச் சகிக்க முடியவில்லை. ஆத்திரம் மடை திறந்து சென்றது.

"குருஜீ! சுசீமன் அநாவசியமாக என்னோடு வார்த்தைகளால் போர் தொடுக்கிறான். இனி என்னால் பொறுக்க முடியாது. நாளை என் தந்தை பிந்துசார மன்னருக்குப் பிறகு மகத சிம்மாசனத்திற்கு இருபெரும் படைகளாகப் பிரிந்து போரிடப் போகும் போட்டியை, இன்றே, உங்கள் முன்னிலையிலேயே, தனி இருவராக வாட்போர் புரிந்து தீர்த்துக் கொள்ளுகிறோம். உத்திரவு கொடுங்கள்!" என்று சீறினான் அசோகன் உடைவாளில் கை வைத்துக்கொண்டு.

சுசீமன் நயவஞ்சகமாகச் சிரித்தான். "குருஜீ! வாட்போர் எதற்கு? எங்கள் போட்டியைத் தீர்த்துக் கொள்ள அதைவிடச் சுலபமான ஒரு வழி இருக்கிறது. மூத்தவனான நான் இருக்க இளையவனான அசோகனுக்கு எங்கள் தந்தை பிந்துசார மன்னர் யுவராஜா பட்டத்தை ஏன் கொடுக்க நினைக்கிறார்? என்னைவிட இளையவனான அசோகன் புஜபல பராக்கிரமத்தில் மிகுந்தவன் என்ற எண்ணத்தினாலல்லவா? யாருக்கு புஜபலம் அதிகம் என்பதை இப்போதே பரீட்சித்துப் பார்த்து விடுங்கள்.

நானும் அசோகனும் ஆளுக்கு ஒரு சுறாமீன் சாட்டையை எடுத்து அவளை மாற்றி மாற்றி அடிக்கிறோம். எவன் பலமாக அடிக்கிறானோ, எவன் அடியில் அவள் உண்மையைச் சொல்லுகிறாளோ, அவன்தான் புஜபல பராக்கிரமத்தில் மிகுந்தவன் என்று தீர்மானியுங்கள். அவன் கட்சியில்தான் நாளை நடக்கப்போகும் சிம்மாசனப் போரில் உங்கள் அன்பும் ஆதரவும் இருக்கவேண்டும்" என்றான் சுசீமன் குயுக்தி நிறைந்த கண்களைச் சுழற்றிக்கொண்டே.

அசோகன் மனமிடிந்து போனான். பாதாதி கேச பரியந்தம் நடுக்கம் நிறைந்தது.

"குருஜீ, இதென்னக் கேலிக் கூத்து? இதென்ன பச்சைக் குழந்தைகளின் விளையாட்டுப் பரீட்சை? ஒரு கூலிக்காரக் கொலையாளி செய்கிற காரியத்தையா அரச குமாரன் செய்வது?" என்று அசோகன் இரைந்தான்.

"அசோகா!நீ நினைப்பது தவறு. கொல்லுப்பட்டறை எஜமானன் தன் கையாலேயே கருவிகளைச் செய்யும் வித்தையை பழகித் தெரிந்திருந்தால்தான் தொழிலாளிகளை நன்கு ஏவி வேலை வாங்க முடியும். தளகர்த்தன் தானே போர் வீரனோடு வாள் யுத்தம் செய்யத் தெரிந்திருந்தால்தான் போர்ப் படைகளை நடத்திச் செல்ல இயலும். அதுபோலத்தான் அரசனும்! ராஜ்யத்தில் உள்ள ஒவ்வொரு அற்பப் பிரஜை செய்யும் காரியத்தையும் அரசன் செய்யக் கூடியவனாய் இருந்தால்தான் பிரஜைகளை நன்கு கட்டியாள முடியும். அதனால் எந்தத் தொழிலையும் உனக்குப் புறம்பான கேவலமான தொழிலாகக் கருதாதே!" என்றார் சாணக்கியர் பின் பக்கம் திரும்பிப் பாராமலேயே.

"அப்படியானால் அந்தப் பெண்ணை என் கைகளாலேயே அடிக்கச் சொல்லுகிறீர்களா?" என்றான் அசோகன் நிதானமாக.

"அசோகா, அது உன் இஷ்டம். அவள் பாவம், பெண்ணயிருக்கிறாள்! அப்படி அவளைச் சித்திரவதை செய்வது பரிதாபகரமானதுதான். ஆனால், அவள் உண்மையைச் சொல்ல மறுக்கும் சதிகாரியாக இருக்கிறாளே, என்ன செய்வது? அசோகா, அந்தப் பேதைப் பெண்ணுக்காக நானும் உள்ளம் வருந்துகிறேன். ஆனால் வாள் முனையிலும், போர் முனையிலும், குற்றவாளிகளை விசாரிக்கும் முறைகளிலும், சம்பந்தப் பட்ட அதிகாரிகள் உணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது. கல்போல் இருதயத்தை வைத்துக் கொள்ள வேண்டும். இது

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

முக்கியமான அரசியல் சூத்திரம்" என்றார் சாணக்கியர்; அந்தப் பேதை காரூவகி இருந்த திசையைத் திரும்பிப் பார்க்க மனம் இல்லாதவராய்.

"அசோகா! ஏன் தயங்குகிறாய்? வா, சாட்டையை எடு! நம் புஜபலத்தைப் பரீட்சித்து விடுவோம்!" என்று நகைத்தான் சுசீமன். "படுகளத்தில் கத்தியை நழுவவிட்ட பகைவனையும் அவனை வெறுங் கையனாக்கி ஹிம்சிப்பது வீரத்திற்குப் புறம்பு என்று நம்புபவன் நான்! முட்கம்பத்தில் அசையவிடாமல் கட்டப்பட்டிருக்கும் அந்தப் பேதைப் பெண்ணை நானா அடிப்பது? முடியாது! என் கையால் அந்த அபலைப் பெண்ணைச் சாட்டையால் அடிக்க மாட்டேன்!" என்றான் அசோகன் குரலில் உணர்வு நலிந்து உருகியோட.

"அசோகா, அந்தச் சதிகாரியை நீ ஏன் சாட்டையால் அடிக்கத் தயங்குகிறாய்? பஞ்சணையில் சரசமாடியவளை பலரறிய எப்படிச் சாட்டையிலடிப்பது என்று யோசிக்கிறாயா? இரவில் இருதயத்தோடு இதயம் கலந்து இன்பச் சரசமாடிய பெண்ணை பகலில் பலரறிய இனம் தெரியாத பெண்போல் பாவித்துச் சாட்டையாலடிக்கும் ராஜதந்திரம் உனக்கு இல்லை யென்றால், நாளை எப்படி பிரம்மாண்டமான மகத சாம்ராஜ்யத்தைக் கட்டியாளப் போகிறாய்?" என்று இடி இடியெனச் சிரித்தான் சுசீமன்.

"குருஜீ, சுசீமனைப் பாருங்கள்! இரவில் நான் சரஸமாடினதாகக் கற்பித்து இவளுக்காகப் பரிதாபப்படுகிறேன் என்று ஏசுகிறான்; இதை என்னால் பொறுக்க முடியாது!" என்றான் அசோகன்.

"குருஜீ, பின் எதற்காக அந்தப் பெண்ணுக்கு இவன் கருணை காட்டவேண்டும்? அவளைச் சாட்டையால் அடிக்க ஏன் தயங்க வேண்டும்? இதன் மூலம் அசோகன் உங்களுக்கும் மகத சாம்ராஜ்யத்துக்கும் துரோகம் செய்கிறான். கொலையுண்ட தேவசேனன் உங்கள் அபிமானத்திற்கும் மகத சாம்ராஜ்யத்தின் பெருமைக்கும் பாத்திரமானவன். அந்தச் சிறந்த இராஜ விசுவாசியை, உங்கள் அபிமானியை, கொலை செய்த கொலைகாரனும், அவன் பெயரைக் கூற மறுக்கும் சதிகாரியும், அவளைச் சாட்டையால் அடிக்க மறுக்கும் கோழையும், மகா துரோகிகள்! உங்கள் அபிமானத்துக்குரிய நம் அதிகாரியைக் கொன்றவனைக் கூற மறுக்கிறாள். அவளைச் சின்னபின்னப் படுத்தினாலென்ன என்று தோன்ற வேண்டியிருக்க, அவள் பேரில் அசோகனுக்குக் கருணை ஏற்படுகிறதென்றால் அதற்கு ஏதேனும் உள் அர்த்தம் இருக்கவேண்டும். குருஜீ! நீங்கள் தீர்க்கமாய் யோசித்துப் பாருங்கள்!" என்று சுசீமன் விசையை முடுக்கினான்.

அசோகனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. பதினாறு மண்டலத் தலைவர்களை அழித்து மகத சாம்ராஜ்யத்தை விஸ்தரிக்கச் செய்தவர் சாணக்கியர்தான்.

இராஜாக்களின் கிரீடங்களெல்லாம் அவர் கையிலிருந்துதான் பறக்கின்றன. புவி மன்னர்கள் அனைவரின் முடிகளையும் பறித்து அகில பாரத பூமியையும் ஒரு குடைக் கீழ்க் கொண்டு வரப் பெருந் திட்டம் வகுத்திருக்கிறார்.

அவர் உதவியில்லாமல் எந்தத் திட்டமும் நிறைவேறாது; எவனும் முடி தரித்திருக்கவும் முடியாது. மக்களை ஒருங்கு கட்டியிருக்கும் ஹிந்து மதத்தின் தெய்வீகக் கயிறும், போர்வீரர்களை ஆட்டி வைக்கும் அரசியல் சூத்திரக் கயிறும் சாணக்கியர் கையில்தான் இருக்கின்றன. உண்மையில் அகன்ற மகத சாம்ராஜ்யத்தின் பொற்கிரீடம் அந்தச் சிறந்த ராஜ தந்திரியின் கையில்தான் இருக்கிறது. அத்தகைய சாணக்கிய ஞானியானவர் அசோகன் மீது துவேஷம் கொள்ளும்படி சுசீமன் இந்தச் சந்தர்ப்பத்தை உபயோகித்துத் தூண்டுகிறான். அதற்கு இடங் கொடுத்தால் தன் சாம்ராஜ்யக் கனவு, எதிர்கால மகத முடி கைநழுவிப் போய் விடும். அதற்கு இடம் கொடுக்கக் கூடாது. அந்தப் பேதைப் பெண்ணிடம் சுசீமன் காட்ட அழைக்கும் பலப் பரீட்சைக்குச் சம்மதிப்பது என்று அசோகன் தீர்மானித்துவிட்டான்.

பிறகு, "சுசீமா நிறுத்து. குருஜீ என் மீது வீண் துவேஷம் கொள்ளச் செய்யாதே. உன் அபிலாஷைதான் என்ன?" என்றான்.

"அசோகா, நான் சொல்லுவது தப்பு என்றால், உன் உள்ளத்தில் கபடு இல்லையென்றால், வா! முள் முனை மழுங்காத சுறா மீன் வால் சாட்டை ஆளுக்கு ஒன்று எடுத்துக் கொள்ளுவோம். அவள் ஸ்மரணை

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

தப்பும்வரை அவளை மாற்றி மாற்றியடித்துச் சதிகாரியின் வாயிலிருந்து கொலைகாரனின் பெயரைக் கக்கவைப்போம்."

அசோகன் படபடவென்று நியாய மேடையை விட்டு இறங்கி சுசீமன் பின் தொடர விசாரணை மேடையில் ஏறினான். ஆனால் சுறாமீன் சாட்டையை எடுக்கும் போது அவன் கைகள் நடுங்கின. தயங்கினான். தான் சாட்டையால் அடிக்கும்போது காரூவகி ஆத்திரம் மூண்டு அசோகன்தான் கொலைகாரன் என்று பொய் சொல்லிப் பழி வாங்குவாள் என்றுதான் சுசீமன் இவ்வாறு குயுக்தி செய்திருக்கிறான் என்று அசோகனுக்கும் நன்கு தெரியும். ஆனால் வேறு வழி இல்லை. சாட்டையை எடுத்துக் கொண்டு காரூவகியை நெருங்கி நின்றான்.

"கொலைகாரன் யார்?" என்று சுசீமன் சாட்டையை ஓங்கிக் கொண்டே உறுமினான்.

"தெரியாது!" என்றாள் காரூவகி ஹீனஸ்வரத்தில்.

சுசீமன் தன் பலத்தையெல்லாம் திரட்டிக் காரூவகியைச் சாட்டையால் அடித்தான். அவள் அப்படியே சுருண்டுவிழப் போனாள், ஆனால் கயிற்றால் கட்டப்பட்டிருந்ததால் கீழே விழ முடியவில்லை. ஸ்மரணையும் தப்பாமல் அவளைச் சித்திரவதை செய்தது.

"உம், அசோகா! இப்போது உன் முறை. கொலைகாரன் யார் என்று கேள். சொல்லாவிட்டால் பலமாகச் சாட்டையால் அடி!" என்று உறுமினான். சுசீமன்.

கைகள் நடுநடுங்கச் சாட்டையை ஓங்கிப் பிடித்தவாறே, "காரூவகி! கொலைகாரன் யார்?" என்று ஹீனஸ்வரத்தில் கேட்டான் அசோகன்.

"தெரியாது!" என்று காரூவகி மெல்லச் சொல்லி அவனைப் பரிதாபகரமாகப் பார்த்தாள். அந்தப் பார்வையிலும், சொல்லிலும் அன்பெல்லாம் பாகாய் உருகி ஓடுவதுபோல் அசோகனுக்குத் தோன்றியது. அவளைவிட நூறு மடங்கு நரகவேதனையை அசோகன் மனத்திற்குள் அனுபவித்தான்.

"உம், அசோகா! அந்தச் சதிகாரி சொல்லவில்லை, அடி! உம் அடி!" என்று கத்தினான் சுசீமன். அசோகன் சாட்டையைப் பலமாக ஓங்கி காரூவகியை அடித்தான். ஆனால் அடி மிக மிருதுவாகத்தான் விழுந்தது. வெறும் இரண்டு இரத்தச் சொட்டுகள்தான் அவள் மேனியிலிருந்து தெறித்தன!

"என்ன அசோகா, மெல்ல மிருதுவாக அடிக்கிறாய்? உன் கையிலிருப்பது சாட்டையா, பூமாலையா? உன் எதிரே நிற்பது பரவசக்கிளியா, பழிகாரியா? பலமாக மற்றொரு அடி, அடி!" என்று நகைத்தான் சுசீமன்.

அசோகன் இருதயத்தை ஊமையாக்கி, கண்ணிமைகளை மூடிக்கொண்டு சாட்டையை ஓங்கிப் பலமாகக் காரூவகி மீது அடித்தான். பலமான சாட்டை நுனி விழுந்து அவள் கன்னக் கதுப்பில் இருந்து நாலைந்து இரத்தத் துளிகள் பீறிட்டு அசோகன் உதட்டில் வந்து விழுந்தன.

அந்த அடியோடு அவள், "தெரியாது" என்று கூவிய குரல் சாட்டையடிபோல் அவன் இருதயத்தைச் சுண்டியது. அசோகன் மனம் கூசிப்போனான். அப்போதுதான் ஹிம்சை எவ்வளவு பயங்கரமானது, எவ்வளவு மிருகத் தனமானது என்பதை உணர்ந் தான் அசோகன். ஒரு கணம் அஹிம்சா மூர்த்தியான புத்தரின் முகங்கூட அவன் நினைவுகளில் தோய்ந்து சென்றது.

"என்ன அசோகா! அவள் மூர்ச்சிப்பதற்குள் நீ மூர்ச்சித்து விழுந்து விடுவாய் போலிருக்கிறதே, என் முறை முடிந்துவிட்டது. நீ அடித்துக்கேள்!" என்றான் சுசீமன்.

அசோகன் அவளைப் பலமாக அடித்துக் கேட்டான்.

அவள், "தெரியாது" என்றாள், குரல் தழு தழுக்கலிஆனால் மனம் தயங்காமல்.

சுசீமன் சாட்டையால் அடித்தான்.

"தெரி...யா...து!"

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

ஒன்றன் பின் ஒன்றாகச் சாட்டையடிகள் விழுந்துகொண்டே வந்தன. ஒவ்வொரு முறையும் "தெரியாது!" என்று சொல்லிக் கொண்டே வந்தாள் காரூவகி.

அப்போது. பச்சைக் கிளி யொன்று, "கீ...கீ..." என்று கத்திக்கொண்டு அவள் கூந்தலில் வந்து உட்கார்ந்தது.

அசோகன் திகைத்தான். அதுதான் அவள் ஆசையோடு உயிருக்கு உயிராய் வளர்த்த பச்சைக்கிளி.

அவள்மீது ஒவ்வொரு சவுக்கடி விழும்போதும் அது அவள் கூந்தலில் இருந்தவாறு இறக்கைகளைப் படபடவென்று அடித்துக் கொண்டு "கீ கீ" யென்று பரிதாபமாகக் கூவியது. அதன் குரலிலிருந்து உருகியோடும் உருக்கம் அசோகனின் உள்வெளியைத் தாண்டி ஊழிக் காலம் வரை உருகியோடும் அன்பின் சோக கீதமாய் எதிரொலித்தது.

அது கொடூரத்தின் கோட்டைக் கதவுகளால் மூடிக்கிடக்கும் அசோகனின் அன்பு மயமான இதயப் பொக்கிஷத்தைத் திறக்க முயலும் ஞானத் திறவுகோல் போலத் தோன்றியது. ஆனால் பதவி மோகம், ஆங்காரம், ஹிம்சையில் பழகிய பிடிவாதம் முதலியன அசோகனைவிட்டு அடியோடு நீங்கவில்லை.



காரூவகி தெரியாது என்று சொல்லச் சொல்ல, அசோகனும் சுசீமனும் மாறி மாறிச் சுறாமீன் சாட்டைகளால் அடித்தார்கள். வேதனைகளைத் தாங்கமுடியாத நிலையில், பிறருக்காக ஹிம்சை அநுபவிப்பதில் ஆனந்தம் தரும் பவித்திர நாமமான "புத்தம் சரணம் கச்சாமி", என்று காரூவகி அசோகனின் ஒவ்வொரு சாட்டையடி விழும்போதும், அசோகன் காதில் விழும்படி மெல்ல உச்சரித்தாள். அசோகனுக்குப் புல்லரித்தது. அவனை அறியாமலேயே புத்தரின் கருணை வெள்ளத்தை நோக்கி அவன் மனம் கைகூப்பியது.

காரூவகியின் கூந்தலினின்று "கீ கீ" வென்று கத்தும் பச்சைக் கிளியின் மீது சுசீமன் சாட்டை நுனியால் பளீரென்று அடித்தான். இருதயத்தின் அன்பைச் சொல்லச் சக்தியற்ற அந்த வாயற்ற ஜீவன் பறந்து போய் அருகிலிருந்த ஒரு மரத்தின் கிளையில் உட்கார்ந்து படபடவென்று இறக்கைளை அடித்துக்கொண்டு, இன்னும் பலமாக, இன்னும் பரிதாபமாகக் "கீ கீ" யென்று கத்தியது.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

மொத்தம் எழுபத்திரண்டு பலமான சாட்டையடிகள் விழுந்த பிறகு, காரூவகியின் அழகிய உடல் சாட்டையின் இரத்தக் குங்குமங்கள் படிந்து, இரத்த நிறப் புள்ளிகள் வைத்த துவைத்த வெண்பட்டுபோல் இருந்தது. அவள் தளர்ந்து போனாள். அநேகமாக, ஸ்மரணை தப்பும் நிலைக்கு வந்துவிட்டாள்.

கடைசியாகக் கண்ணிமைகள் சுழலும் காரூவகியை நோக்கி பயங்கரமாய்ச் சிரித்து, "ஏ சதிகாரி! உன் இருதயம் கல்! கடைசி வரை கொலை செய்தவன் பெயரைச் சொல்லாமல் சாதிக்கிறாய். இதோ என் கடைசி அடி! என் பலமெல்லாம் திரட்டி உன்னை அடிக்கப் போகிறேன். அப்போதும் சொல்லாவிட்டால் நாளை உன்னை உயிரோடு தீயில் வைத்துக் கொளுத்தி விடுவேன். அது தான் விசாரணையின் கடைசி எல்லை! உண்மையைச் சொல்ல மறுக்கும் குற்றவாளிகளின் கடைசி முடிவு!" என்று சுசீமன், அசோகனின் போர்ப் படைகள் எதிரே நிற்பதுபோலப் பாவித்துக் கொண்டு நூறாயிரம் போர்வீரர்களைக் கொல்லும் சக்தியை ஒன்றாகத் தன் கையில் திரட்டிச் சுறா மீன் சாட்டையை ஓங்கிக் காரூவகியை அடித்தான்.

அவள் மூர்ச்சித்து விட்டாள்.

"கொடுமை தீர்ந்தது!" என்று அசோகன் ஆத்திரத்தோடு சுறா மீன் சாட்டையை சுசீமன் மேல் படும்படி எறிந்துவிட்டு மேடையை விட்டுக் கீழே இறங்கினான். சுசீமனும் சாட்டையைக் கீழே விட்டெறிந்து விட்டுக் காவலாளிகளையும் கொலையாளிகளையும் நோக்கிக் கத்தினான்:

"இன்னும் சில நாழிகை கழிந்தால் இந்தச் சதிகாரிக்கு ஸ்மரணை வந்துவிடும். ஆனால், எவரும் இவள் அருகில் நெருங்காதீர்கள், ஓர் உணவும் கொடுக்காதீர்கள், பசியால் வாடட்டும், பழிகாரி பசியால் வாடட்டும். தாகமென்று கேட்டால் ஒரு குவளைத் தண்ணீர்கூடக் கொடுக்காதீர்கள். இரவு முழுவதும் பட்டினி போடுங்கள். நடு இரவில் குளிரென்று நடுங்கினால் பேர்த்திக்கொள்ள ஒரு சிறு கிழிந்த கம்பளிகூடக் கொடுக்காதீர்கள். பிறகு நாளைக் காலை சூரியோதயமாகிச் சரியாக முக்கால் நாழிகையில் இவளை உயிரோடு தீயில் வைத்துக் கொளுத்த வேண்டும். இப்போது நான் இடும் கட்டளைகளை எவன் மீறுகிறானோ அவன் மகத நாட்டின் பயங்கரமான ராஜத்துரோகிகட்கு இடும் கொடுந் தண்டனைகளை அநுபவிப்பான். அவன் எவனாயினும் சரி. எவனாவது இரவில் இவளைத் தப்புவிக்க முயன்றால், அவனை அந்த இடத்திலேயே கொன்று விடுங்கள். அது நானாக இருந்தாலும் சரி, என்னைப் போன்ற அதிகாரம் படைத்த எவ்வளவு பெரிய அதிகாரியாக இருந்தாலும் சரி. கொடுந் தண்டனைகளுக்கு ஆளாகி நாடு கடத்தப்படுவான். இது சாணக்கிய முனிவரின் முன்னிலையில் ஆண்டவன் பெயரால் மகத நீதியின் தீர்ப்பாக நான் கூறும் கட்டளை!" என்றான், சுசீமன் நாலுபுறமும் கம்பீரமாகத் திரும்பிப் பார்த்துக்கொண்டே.

அசோகன் குறுக்கிட்டு, "நீதித் தலைவர்களின் ஆலோசனையைக் கேட்காமல் இவ்வளவு சர்வாதிகாரத் தன்மை பொருந்திய கட்டளையைப் பிறப்பிக்கச் சுசீமனுக்கு என்ன அதிகாரமிருக்கிறது," என்று கேட்டான்.

"அரச பெருமான் இந்தத் தக்ஷசீலக் கலகத்தை அடக்க என்னையும் அசோகனையும் அனுப்பும் போது அவசியம் நேர்ந்தால் வேறு யாரும் ரத்து செய்ய முடியாத சர்வாதிகாரக் கட்டளை ஒன்று ஒரு முறை பிறப்பிக்கலாம் என்று ராஜமுத்திரை பதித்த சர்வாதிகார பத்திரம் ஆளுக்கு ஒன்று கொடுத்து அனுப்பினார். அதை இந்தச் சந்தர்ப்பத்தில் உபயோகிக்கிறேன், அதோடு மற்றுமொன்று. அசோகன் இந்தச் சதிகாரிக்கு மனம் இரங்குவது வழி வழி மௌரியப் பேரரசு கடமைப்பட்டிருக்கும் சாணக்கிய ஞானியை இவளுக்கு அடுத்த ஸ்தானத்தில் வைத்து அவமதிப்பது போன்ற ஒரு காரியமாகும். அதற்குப் பிராயசித்தமாக அசோகனே நாளைக் காலையில் இந்தச் சதிகாரியைச் சிறையில் ஏற்றி அவன் கையாலேயே இவளுக்கு நெருப்பு வைத்துத் தீயில் கொளுத்த வேண்டும்" என்று சுசீமன் தீர்மானமாகக் கூறிவிட்டு, இராஜ முத்திரை பதித்த சர்வாதிகாரப் பத்திரத்தில் அந்தக் கட்டளையை எழுதிப் பிரயோகித்துவிட்டு அந்தக் குற்ற ஸ்தலத்தை விட்டுப் போய்விட்டான்.

அங்கிருந்த அனைவரும் சிலைகளாகச் சமைந்திருந்தார்கள். அசோகன் சவம் போல் முகம் வெளுத்து நின்றுகொண்டிருந்தான்!

## அத்தியாயம் 4

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

## சோகச் சுழல்

**"காமத்திலிருந்து சோகம் பிறக்கிறது"**

—தம்ம பதம் 215

இளம் மனைவி, கணவனின் ஸ்பரிசம் பட்டுச் சிரிப்பது போல, கிழக்கு வானம் நிலாவின் ஸ்பரிசம் பட்டு மெல்லச் சிரித்தது. இரண்டாம் பிறைச் சந்திரனின் சிறு நிலா ஓடையில் அந்தக் குற்ற ஸ்தலம் சவங்களைச் சுமந்து செல்லும் இரத்தப் படகுபோல் காட்சியளித்தது.



நடுச்சாமம், குற்றுயிரும் கொலையுயிருமாகக் கிடக்கும் உடல்களின் மெல்லிய அவல ஓலங்களும், அங்கங்கள் வெட்டப்பட்டுச் சிதைந்து கிடக்கும் குற்றவாளிகளின் வேதனை முனகல்களும், ஈனஸ்வரங்களும் அந்த இருட்டில் மெல்ல ஒலித்துக் கொண்டிருந்தன. உலகம் முழுவதும் உறங்கும் அந்தச் சாம இருட்டில்—அந்தக் குற்ற ஸ்தலம் தூக்கத்தில் பேய்க் கனவுகள் கண்டு மெல்லப் பிதற்றும் குழந்தையின் பீதி முகம்போல் இருந்தது.

சுற்றிலும், காவலாளிகள் தீப்பந்தங்கள் பிடித்துக் கொண்டு, சுற்றிச் சுற்றி வந்தார்கள். மகா காளியின் பலிபீடம்போல், இரத்த குங்குமம் பூசிய விசாரணை மேடையின் நடுவே, முள் ஆணிக் கம்பத்தில் காரூவகி கட்டப்பட்டிருந்தாள். காலையில் சுறா மீன்முள் சாட்டையால் அடித்த இரத்தப் புள்ளிகள் அவள் மெல்லிய உடலில் உறைந்து போயிருந்தன. முதுகில் பாய்ந்திருக்கும் ஸ்தம்பத்தின் முள் ஆணிகள் எழுப்பும் வேதனைகளும், உடலெங்கும் ஓடும் சாட்டையடிகளின் எரிச்சலும் தாங்காமல், காரூவகி மெல்ல முனகியவாறு நெளிந்து கொண்டிருந்தாள். சுழன்று அடிக்கும் இருளின் வாடைக் காற்றின் குளிர் தாங்காமல் வேறு அவள் வெடவெட வென்று நடுங்கினாள். இரக்கப்பட்டு அவள் போர்த்திக் கொள்ளச் சிறிது கந்தல் கொடுக்கக்கூட அருகில் ஒருவரும் இல்லை. வெறும் வார்த்தைகளால் ஆறுதல் சொல்லக்கூட ஒருவரும் இல்லை. ஆனால் அதற்குப் பதில், சிறிது அதிகமாக அசைந்தாலும், ஈட்டியால் கீறுவதற்குத் தயாராய் இரண்டு கிரேக்க அலிகள் அவளைக் காவல் புரிந்து கொண்டிருந்தனர்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

அவள் சிறிதுகூடக் கண் இமைகளை மூடவில்லை; முட்புதருக்குள் காயம்பட்டுப் பதுங்கியிருக்கும் முயல் தூங்குவது இல்லை. அதைச் சுற்றிக் காவல் புரியும் வேட்டை நாய்களுக்கும் தூக்கம் வருவதில்லை. முரடர்கள் அவள் மீது வைத்த விழிகளை எடுக்காமல் மிகவும் கவனமாகக் காவல் புரிந்தார்கள். அந்த இரண்டு முரடர்களையும், பிணங்கொத்திக் கழுகுகளையும் தவிர மயான பூமி போன்ற அந்தக் குற்ற ஸ்தலத்தில் சிதையாத முழு உருவமுள்ள வேறு எந்த ஜீவனும் இல்லை. ஆனால் குற்ற ஸ்தலத்தைச் சுற்றியுள்ள பள்ளங்களிலும், புதர்களிலும் யாராவது அவளைக் காப்பாற்ற வருகிறார்களா என்று சுசீமனின் வீரர்களும் சாணக்கியரின் வேவுகாரர்களும் அசையாமல் பதுங்கி இருந்தார்கள்.

காரூவகி நடுநடுவே, "தண்ணீர்! தாகம்! தண்ணீர்!" என்று ஈனஸ்வரத்தில் பரிதாபமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். ஆனால் அருகில் காவல் புரியும் வீரர்கள் அதைப் பொருட்படுத்த வில்லை. அதே மேடையில் கிடக்கும் குற்றுயிரான ஒரு பிணத்தைப் பிணங் கொத்திக் கழுகுகள் கொத்தி இரத்தம் குடிப்பதைப் பார்த்து அதில் உள்ள பீபத்ஸரசத்தை அபூர்வமாக அனுபவித்துக் கொண்டு இருந்தார்கள் மகத காவலாளிகள்! அப்போது மரக்கிளையிலிருந்த பச்சைக்கிளி கீ, கீ, கீ, கீ என்று பரிதாபமாக உயிரை விட்டு விடுவதுபோல் கத்திக்கொண்டு இருந்தது. சில சமயங்களில் அது சோர்ந்துபோய் வானத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும். அப்போதெல்லாம் அந்த முரட்டுக் காவலர்களின் கூட்டுக்குள் பிரவேசிக்கும் வித்தையைத் தனக்குக் கற்பிக்கும்படி புத்த பகவானை நோக்கித் தியானிப்பது போலிருக்கும்.

உயிர்களின் முனகல்களிடையே கழுகுகளும் வௌவால்களும் பட படவென இறக்கைகளைக் கோரமாக அடித்துக் கொள்ளும் ஓசை கேட்டது.

சுற்றிலும் நல்ல இருட்டு. இருளின் ஆதிக்கத்தின் முன் நிலாத் துண்டு எண்ணையற்ற சிறு திரியைப்போல நடுநடுங்கிக் கொண்டிருந்தது. நடுச் சாமமாகிச் சிறிது நாழிகையாயிற்று. எங்கோ ஒரு புதர் அசையும் சப்தம். முன் புதர்களுக்குப் பின்னால் பதுங்கியிருக்கும் வீரர்கள் காரூவகி இருக்கும் மேடையின் பக்கம் ஒரு முகமாய் விழிகளைத் திருப்பினார்கள்.

சிறிது நேரங்கழித்து மேடைக்கருகே பிணக்கு

வியலில் விநோதமான ஒரு சப்தம் கேட்டது. காரூவகியைக் காக்கும் காவலர்கள் திரும்பிப் பார்த்தார்கள்.

"இந்த இருட்டு நேரத்தில் யாரோ பிணங்களைப் புரட்டும் சப்தமும் நடக்கும் சப்தமும் கேட்கிறதே? யாராவது அதிகாரி குற்றுயிராய்க் கிடக்கும் பிணங்களிடம் சுங்கவரி வசூலிக்க வந்திருப்பார், அல்லது யாராவது புரோகிதர்கள் கடைசிப் பிதுர் தர்ப்பணம் செய்விக்கப் பிணங்களைப் புரட்டிக் கொண்டிருப்பார்கள். அல்லது யாராவது போர் வீரர்கள் செத்த பிணங்களின் இடுப்பில் இருந்து பொற்காசுகள் திருட வந்திருப்பார்கள். அல்லது யாராவது பண்டிதர்கள் குற்றுயிராய்க் காய்பவர்களோடு இலக்கிய வாதம் புரிய வந்திருப்பார்கள். அல்லது யாராவது ஓவியர் அதைக் கண்டு மயானக் கண்காட்சியைத் தத்ரூபமாய்ச் சித்தரித்து எழுநூறு பவுனுக்கு விற்பதற்காக வந்திருப்பார்" என்ற எண்ணத்தோடு கிரேக்க அலிகள் இருந்த இடத்தை விட்டு அசையாமல் காரூவகியைக் கட்டியிருக்கும் முடிச்சுகளையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அப்போது தலைமுதல் கால்வரை கறுப்புச் சீனக் கம்பளம் போர்த்திய ஓர் உருவம் விறுவிறுவென்று மேடையின் படிகளில் ஏறிக் காரூவகியை நெருங்கியது. பயங்கரமான இரண்டு காவலாளிகளும் ஈட்டிமுனைகளை அந்த உருவத்தின் முன் நீட்டினார்கள். அந்தக் கரிய உருவம் கையிலுள்ள முத்திரை மோதிரத்தைக் காட்டி முகத்திலுள்ள போர்வையை நீக்கியது. அது சாணக்கியரின் முத்திரை மோதிரம். அங்கே கம்பளி போர்த்திக்கொண்டு நின்றது அசோகன்!

அவனுடைய மற்றொரு கையில் சிறு மான் தோல் சாட்டையும் இருந்தது, கிரேக்க வீரர்கள் அசோகனைப் பார்த்து. "ஹி ஹி"என்று சிரித்து "அரசாங்க முத்திரை பதித்த மாறு கட்டளை பிறப்பிக்கப் படும்வரை அவளைத் தப்புவிக்காது காவல் புரியவேண்டும்; என்ன செய்வது?" என்று கைகளைப் பிசைந்தார்கள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

"ஏ அடிமை! பயப்படாதே! இவளைத் தப்புவித்துவிட வரவில்லை, இவளை ரகசியமாக விசாரிக்கப் போகிறேன். அப்பால் போய் இருங்கள்!" என்று கையிலுள்ள சிறு சாட்டையைச் சுழற்றினான் அசோகன்.

அவ்விரண்டு வீரர்களும் தயங்கித் தயங்கி பின் சென்று காதுக்கு எட்டாத தொலைவில், ஆனால் கண்ணுக்கு எட்டும் தூரத்தில் போய் நின்றார்கள்.

தொலைவில் சுற்றிலுமுள்ள புதர்களில் பதுங்கியிருந்த சுசீமனுடைய வீரர்களின் விழிகள் மேடையிலுள்ள அசோகனையும் காரூவகியையும் பார்த்துக் கொண்டிருந்தன; ஆனால் அவர்களுடைய காதுகளுக்கு அவ்வளவு கூர்மை இல்லை!

காரூவகி அசோகனைப் பார்த்ததும் கண் கலங்கினாள். அந்த வேதனை வேளையில் யாராவது ஆறுதல் சொல்லக் கிடைக்க மாட்டார்களா என்று ஏங்கிக்கொண்டிருந்த அந்த நேரத்தில் அசோகனைப் பார்த்ததும் தன் மனதிலிருந்த துக்கத்தையெல்லாம் சொல்லி அழ வேண்டும் போலிருந்தது, ஆனால் அவன் கையில் மான் தோல் சாட்டையோடு வந்திருக்கிறான்! அவள் துக்கத்தோடு பல்லைக் கடித்துக் கொண்டிருந்தாள். கண்களில் நீர் வடிய அவனைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

"யுவராஜா! இனிமேல் நான் தாங்க முடியாது, என் உடம்பில் சாட்டையடிபட்டு வலி உண்டாகாத இடமே இல்லை, அடிக்க வேண்டுமானால் என் இதயத்தின் அருகிலுள்ள ஓர் இடம்தான் பாக்கியிருக்கிறது. நீங்கள் அடியுங்கள்" என்றாள் காரூவகி, கண்களில் நீர் தாரையாக வடிய. அசோகனின் கண்களில் அடை மழை போல் நீர் பெருகிற்று.

"காரூவகி" என்று தன் அன்பையெல்லாம் அந்த ஒரு சொல்லில் பெருக்கும்படி கூப்பிட வாயெடுத்தான். ஆனால் வாயில் இருந்து ஒரு வார்த்தைகூட வெளிவரவில்லை; குரல் அடைத்துக் கொண்டது.

"யுவராஜா! இந்த இருட்டு நேரத்தில் இங்கே ஏன் வந்தீர்கள்? இன்னும் பொழுது விடியவில்லையே? அதற்குள்ளாகவா உங்கள் கையால் என்னைத் தீயிலிட்டுக் கொளுத்த வந்தீர்கள்?" என்றாள் காரூவகி.

அப்போதும் அசோகன் எவ்வளவோ பேச வேண்டும் என்று வாயெடுத்தான். ஆனால் அப்போது ஒரு வார்த்தை கூட அவனால் பேச முடியவில்லை. போர் முனைகளில் நின்று நூற்றுக் கணக்கான மக்களுக்கு முன் இரத்தத்தைச் சிந்துமாறு உருக்கமாகப் பேசும் அவனுடைய குரல் அப்போது அடியோடு அடைத்து போயிற்று, அபலையின் அன்பின் முன்னால்! கொடுமை செய்த அவனிடம் அவள் குழைந்து அன்பாய்ப் பேசியதினால்! அப்போதுதான் ஹிம்சையை வெல்லும் அஹிம்சையின் அபூர்வ சக்தியைக் கண்டான் அசோகன்.

அவன் கண்களிலிருந்து மாலை மாலையாக வடியும் கண்ணீரானது காரூவகியின் உடம்பிலுள்ள இரத்தத் துளிகளில் விழுந்து உறைந்துபோன அந்தத் துவாரங்களை மறுபடி நனைத்து இரத்தம் பெருகச் செய்தது,

"யுவராஜா! யாரோ இனந்தெரியாதவர்கள் எனக்குத் தீ வைக்கப் போகிறார்கள் என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். உங்கள் கையினால் எனக்குத் தீ மூட்டப் போகிறீர்கள் என்று எவ்வளவு ஆனந்தப் படுகிறேன், தெரியுமா? சாகும் போது அன்புக்குரிய கைகளை ஸ்பரிசித்து மனமார விரும்பிய உருவத்தைப் பார்த்துக் கொண்டே உயிர் விடுவதிலுள்ள மனத் திருப்தி எவ்வளவு அற்புதமானது, தெரியுமா? சாகப் போகிறவர்களுக்குத் தெரியும்! சாவின் கரங்களில் ஒரு துளி அன்பிற்காக ஏங்கித் தவிக்கும் பெண்ணுக்குத்தான் தெரியும்!" என்றாள் காரூவகி உணர்ச்சி ததும்ப.

அசோகனால் தாங்க முடியவில்லை. "காரூவகி!" என்று அன்பெல்லாம் உருகி ஓட அவள் கைகளைப் பிடித்துக் கொண்டான். அப்போது அவள் கையிலிருந்த ரணங்களில் வலி ஏற்பட்டாலும் அந்த அன்பு ஸ்பரிசத்தில் வேதனைகளை மறந்து விட்டாள். அசோகனிடம் அந்த அன்பைக் கண்டு, உள்ளத்தில் அடக்கி வைத்திருந்த துக்கத்தையெல்லாம் கொட்டி விம்மியழ விரும்பினாள். சிறிது நேரம் கழித்து, "யுவராஜா, இந்த இருட்டு நேரத்தில் என்னிடம் ஏன் வந்தீர்கள்?"என்றாள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

"காரூவகி! அந்தக் கொலைகாரன் யார்? உண்மையைச் சொல்ல மாட்டாயா?" என்றான் அசோகன் மெல்ல.

"யுவராஜா! அந்தக் கொலைகாரன் யார் என்று தெரியாது. தெரிந்திருந்தால் நீங்கள் சாட்டையால் அடிப்பதற்குமுன் கூடாரத்தில் அன்பாய்க் கேட்டீர்களே, அப்போதே சொல்லியிருக்க மாட்டேனா?" என்றாள் காரூவகி பரிதாபமாக. அப்போது அசோகன் கையிலிருந்த மான் தோல் சாட்டை அவளுடைய ரணந்தோய்ந்த கைகளில் தவறிப்பட்டு வலியை உண்டாக்கியது.

அவள் பதறிப் போனாள்.

"யுவராஜா! சாட்டையால் அடிக்காதீர்கள். தாங்க முடியாது. நிறைய சாட்டையடி பெற்றுவிட்டேன். தயவு செய்து அடிக்காதீர்கள், அன்போடு, ஆதரவோடு, ஒரு வார்த்தை சொல்லுங்கள். அதற்குப் பதில் இரண்டு சாட்டையடிகள் வீதம் கொடுங்கள். எவ்வளவு வேண்டுமானாலும் பெற்றுக் கொள்ளுகிறேன். உங்களிடம் ஓர் அன்பான வார்த்தையை எதிர்பார்த்து எப்படித் தவிக்கிறேன் தெரியுமா?" என்றாள் காரூவகி விம்மி விம்மி அழுதுகொண்டே.

அசோகன் அவள் கண்களிலிருந்து வழியும் நீரைத் துடைத்து, "காரூவகி, நான் அவ்வளவு கொடிய மிருகமல்ல! இனியும் உன்னைச் சாட்டையால் அடிப்பேன் என்றா நினைக்கிறாய்?" என்றான் குரல் தழதழக்க.

"யுவராஜா! மன்னித்துவிடுங்கள். நீங்கள் இனி என்னைச் சாட்டையால் அடிக்கமாட்டீர்கள் என்றுதான் நினைத்தேன். ஆனால் உங்கள் கையில் இந்தச் சிறு சாட்டையைப் பார்த்ததும் மனம் பதறிப் போனேன்."

"காரூவகி! சுசீமன் பலவந்தமாகத் தூண்டியதால் நான் உன்னை அடித்தேனே அந்தச் சுறாமீன் முள் சாட்டையல்ல இது. தன்னிச்சையாக நேற்றிரவு உன்னைக் கூடாரத்தில் ஒரு தடவை அடித்தேனே அந்த மெல்லிய மான் தோல் சாட்டை இது! இதை ஏன் கொண்டு வந்தேன் தெரியுமா? இந்தச் சாட்டையை வாங்கி உன் பலம் கொண்டமட்டும் என்னைத் திருப்பி அடித்துவிடு. வெந்து கொண்டிருக்கும் என் மனம் ஆறுதலடையும்!" என்றான் அசோகன் உணர்ச்சிவசத்தால்.

"யுவராஜா! எனக்கு அன்பு செய்யத் தெரியுமே தவிர அடிக்கத் தெரியாது. அன்பு கொடுத்து அன்பு வாங்கத் தெரியுமே தவிர ஹிம்சையைக் கொடுத்து ஹிம்சையைப் பெருக்கி வாங்கத் தெரியாது!" என்றாள் காரூவகி.

"பாவி நான்! நான் அடித்த ஒவ்வொரு பலமான சாட்டை அடியையும் இந்த மெல்லிய உடலால் எப்படித் தாங்கினாயோ?"

"யுவராஜா! நீங்கள் அடித்த ஒவ்வொரு பலமான சாட்டையடியையும் எப்படித் தாங்கினேன் தெரியுமா? ஒவ்வொரு பலமான அடிக்குப் பிறகும், நீங்கள் மகதத்தின் மகாராஜா ஆவீர்கள் என்ற எண்ணத்தால்தான்" என்றாள் காரூவகி உருக்கமாக.

"காரூவகி! சுசீமனைப் போல நானும் கொடூரமானவன்தானே? நான்தான் மகதத்தின் மன்னனாக வேண்டுமென்று ஏன் எதிர்பார்த்தாய்? நான் மக்களை அன்பாய் அரசாட்சி செய்வேன் என்று எப்படி நம்பினாய்?"

"யுவராஜா! நீங்கள் சுசீமனைப் போல் கொடூரமானவர் என்றாலும் உங்களிடம் குயுக்தி கிடையாது; அன்பைப் புறக்கணிக்கும் கொடிய உள்ளம் கிடையாது என்பது எனக்குத் தெரியும். என்றாவது ஒருநாள் உங்கள் கண்களை மறைத்திருக்கும் ஹிம்ஸைத் திரை விலகி மனம் திருந்தி மக்களை அன்பாய் ஆளுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு!" என்று காரூவகி ஆனந்தமும் துக்கமும் தாங்காமல் விம்மினாள்.

அசோகன் ஆர்வத்தோடு அவள் கூந்தலைத் தடவிக் கொடுத்தான். அப்படியே அவன் தன் முகத்தை கட்டிக் கொண்டு தாயைப் போல தன்னை மார்போடு அணைத்துக்கொள்ள மாட்டானா என்று அவள் தவித்தாள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

அப்போது மரக்கிளையில் "கீக்கீ" என்று கத்திக் கொண்டிருந்த பச்சைக் கிளி பறந்து வந்து அவள் கூந்தலில் உட்கார்ந்து, "கீக்கீ" என்று பரிதாபமாகக் கத்தியது. அவள் முகத்தருகிலும் நெஞ்சருகிலும் படபடவென்று இறக்கைகளை அடித்துக்கொண்டு சுற்றி சுற்றிப் பறந்தது.

"யுவராஜா! நான் உங்களை ஒன்று கெஞ்சிக் கேட்கிறேன்; செய்கிறீர்களா?" என்றாள் காரூவகி, கருவிழிகளால் அசோகனைக் கெஞ்சிய வண்ணம்.

"என்ன சொல்லு, காரூவகி! எது வேண்டுமானாலும் செய்கிறேன்!"

"யுவராஜா! இந்தக் கிளியை நான் ஓயாமல் மார்போடணைத்து அதன் தலையில் மெல்ல முத்தமிடுவது வழக்கம். பாபம். நான் அப்படிச் செய்ய மாட்டேனா என்று இந்தக் கிளி தவிக்கின்றது. என் கைகள் கட்டப்பட்டிருக்கின்றன. எனக்காக இந்தக் கிளியை எடுத்து உங்கள் மார்போடு மெல்ல வைத்தணைத்து அதன் தலையில் ஆசையோடு முத்தமிடுங்கள். அதன் நெஞ்சுத் தவிப்பு தணியும்?" என்று காரூவகி கேட்டாள்.

அசோகன் கண்களில் நீர் தாரை தாரையாக வடிந்தது. அந்தக் கிளியைப் பிடித்துத் தன் மார்போடு வைத்தணைத்து, அதன் தலையில் மிருதுவாக முத்தமிட்டான். அந்தக் கிளி தாயின் நெற்றி முத்தத்தைப் பெற்ற பச்சைக் குழந்தைபோல "கீ! கீ!" என்று மழலை மொழியால் ஆனந்தமாகக் கத்தியது.

"பாபம், நான் வேதனைப்படுவதைப் பார்த்துவிட்டு இன்று பூரா அது ஓர் ஆகாரமும் புசிக்காமல் சோர்ந்துபோயிருக்கிறது!" என்றாள் காரூவகி.

"காரூவகி, இந்த அற்பக் கிளிக்கு இருக்கும் இதயங்கூட எனக்கு இல்லாமல் போய்விட்டது!" என்றான் அசோகன் மனம் வீங்கிய குரலில்.

"யுவராஜா! இப்போது நான் சொன்னது உங்களுக்குப் புரிகிறதா? இந்தக் கிளியில் இருக்கும் ஜீவனும் என்னுள் இருக்கும் ஜீவனும் ஒன்றுதான். உருவத்திலும் ஐம்புலன் சக்திகளிலும் வித்தியாசம் இருந்தாலும் அன்பையும், சுக துக்கங்களையும் அநுபவிப்பதில் எல்லா ஜீவன்களும் ஒன்றுதான். இதைத்தான் புத்த பிரான் சொல்லுகிறார்! யுவராஜா! இந்தக் கிளியை இப்போது உங்கள் கையால் கழுத்தை முறித்துக் கொல்ல உங்களுக்கு மனசு வருமா?" என்று காரூவகி கேட்டாள்.

"அதைவிட நான் என்னையே சித்திரவதை செய்து கொள்வேன்!" என்றான் அசோகன்.

"ஆனால் உங்கள் அரண்மனையிலும் உங்கள் நாட்டிலும் எத்தனை வாயில்லா ஜீவன்களைக் கொல்லுகிறார்கள் தெரியுமா? அதை நினைத்தால் என் மனம் நடுங்குகிறது..."

அசோகன் பேசாமல் அவள் சர்வாங்கத்தையும் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

"யுவராஜா! என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்?"

"ஒன்றுமில்லை, பாவம்! உன் உடல் முழுதும் கன்றிப் போயிருக்கிறது. ஒவ்வொரு பலமான சாட்டையடி விழும் போதும் வேதனையால் எப்படித் துடித்தாயோ?"

"வேதனையால் நான் துடித்ததுமட்டுமா உங்கள் கண்களுக்குத் தெரிந்தது? உங்களது ருசியான இறைச்சி உணவிற்காக உங்கள் அரண்மனையில் புறாக்களின் கழுத்தை நெறிக்கும் போது அவைகளின் நெஞ்சு எப்படித் துடித்திருக்கும், தெரியுமா? தண்ணீரில் ஆனந்தமாக நீந்தி விளையாடும் மீன்களை உங்கள் செம்படவர்கள் தூண்டில் முள் போட்டு இழுக்கும்போது, அவற்றின் இருதயம் எப்படித் துடிக்கும் தெரியுமா? நீங்கள் பொழுது போக்கிற்காக வேட்டையாடும் போது உங்கள் வேட்டை நாய்களின் வாயில் இருக்கும் முயல்கள் எப்படித் துடிக்கும் தெரியுமா? உங்கள் விஷம் தோய்ந்த வேல் முனைபட்டு ரத்தம் சிந்திக் கொண்டே ஓடும் மான் எப்படித் துடிக்கும் தெரியுமா? ஹிம்சையின் வேதனைகள் எல்லாவற்றுக்கும் ஒன்றுதான், யுவராஜா! எல்லா ஜீவன்களையும் சமமாகப் பாவித்தால், புத்தர் போதிக்கும் ஜீவகாருண்யம் உண்டாகும், யுவராஜா!" என்ற காரூவகியின் நா உலர்ந்து பேச முடியாமல் தடுமாறியது.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

"காரூவகி! உனக்குத் தாகமெடுக்கிறதா, தண்ணீர் வேண்டுமா?"

"இல்லை; சுசீமன் கட்டளையை மறந்து விட்டீர்களே? எனக்கு நாவில் தண்ணீர்த் தாகம் இல்லை. இருதயத்தில்தான் தாகம் இருந்தது. அது உங்கள் அன்பால் தீர்ந்துவிட்டது."

"காரூவகி, பாவம், உன்னை நாளைக் காலை உயிரோடு தீ வைத்து கொளுத்தி விடுவார்கள் பாவிகள். நீ இப்போது இந்த இடத்தைவிட்டுத் தப்பித்து ஓடிவிடுகிறாயா? நான் அங்கே நிற்கும் இரண்டு காவலாளிகளையும் குத்திக் கொன்று விடுகிறேன். ஒருவருக்கும் தெரியாமல் உன் கைகளைக் கட்டி இருக்கும் கயிறுகளை அறுத்து விடுகிறேன். நீ தப்பித்து ஓடிவிடு. வழியில் ஒருவரும் உன்னைப் பிடிக்காமல் ஏற்பாடு செய்கிறேன்."

"இல்லை, யுவராஜா, வேண்டாம் அது! என் ஓர் உயிரைக் காப்பாற்றுவதற்காக, அந்தக் காவலாளிகளின் இரு உயிர்கள் மாய்வதா? நான் தப்பித்து ஓடிவிட்டால் அதனால் எத்தனை போர் வீரர்கள் கொல்லப் படுவார்கள்? எவ்வளவு பேர் ஹிம்சைக்கு ஆளாவார்கள்? உங்களுக்கும் எவ்வளவு அவமானங்கள் உண்டாகி மனம் புண்படும்? நீங்கள் நாடு கடத்தப்படுவீர்கள். மகதத்தின் அரசியல், அன்பால் ஆளப்போகும் உங்கள் கையிலிருந்து கொடூரமான சுசீமன் கையில் விழும். அதனால் மக்கள் எவ்வளவு ஹிம்சைகளை அநுபவிப்பார்கள்? வேண்டாம், யுவராஜா, இவ்வளவு பேர்களையும் ஹிம்சைக்கு உள்ளாக்கி நான் தப்பித்தோடி ஆனந்தமாய் வாழ்வதைவிட இவ்வளவு பேரின் ஆனந்தத்திற்காக நான் ஒருத்தி ஹிம்சைப் பட்டு உயிர் விடுவதில் எவ்வளவோ அதிகமான ஆனந்தம் இருக்கிறது. பிறருக்காக நாம் கஷ்டப்படுவதில் எவ்வளவு சுகமிருக்கிறது தெரியுமா? அதை வார்த்தைகளால் எனக்குச் சொல்லத் தெரியவில்லை, யுவராஜா!"

"ஆம்; காரூவகி, அதை மனதினால்தான் உணரமுடியும்; அதன் சுகத்தை விளக்க எந்தப் பாஷையிலும் நூல்கள் இல்லை! காரூவகி, உனக்காக உன் சுகத்திற்காக, நான் ஏதோ ஒரு பெருங் கஷ்டத்தை அனுபவிக்க வேண்டும், அதனால் எனக்கேற்படும் இன்னதென்று விவரிக்க முடியாத ஆனந்தத்தை அனுபவிக்க வேண்டுமென்று எப்படித் துடிக்கிறேன் தெரியுமா? காரூவகி, முன்பு பிறரை ஹிம்சைப்படுத்தி அடையும் ஆனந்தந்தான் உண்மையான சுகமென்று நினைத்தேன். ஆனால் இப்போது பிறருக்காகக் கஷ்டப்படுவதில்தான் உண்மையான சுகம் இருக்கிறது என்று நம்புகிறேன்!"

"ஆம், யுவராஜா! அதுதான் புத்தர் போதிக்கும் ஜீவகாருண்யம்! தமிழ் நாட்டில் சேரர்களும், சோழர்களும், பாண்டியர்களும் வாழும் அன்புச் சமுதாயம்!"

"நான் தமிழ் நாட்டைப் பார்த்ததே இல்லை. அது அவ்வளவு உயர்ந்த நாடா?"

"ஆம், யுவராஜா! அங்கே பெண்களைச் சாட்டையாலடிக்கும் சித்திரவதைகளும், ஜீவன்களை வதைக்கும் இப்படிப்பட்ட விநோதமான ஹிம்சைக் கருவிகளும் இல்லை! அங்கே வீரம், காதல் என்ற இரு ஜீவாதார உணர்ச்சிகளைத் தவிர, இங்கே வட நாட்டிலுள்ள மதவெறியும் கொடிய மூர்க்கத்தனமும் அங்கில்லை. அங்கே, தமிழ் நாட்டில், அனுதாப உணர்ச்சி அதிகம் உண்டு. அதனால்தான் யாரும் அன்பாலன்றிக் கத்தியால் அணுக முடியாத வீர நாடாகவும், எந்த நாட்டாரும் கண்டு பொறாமைப் படக்கூடிய அமைதி வாய்ந்த அற்புத நாடாகவும் அது இருக்கிறது. அதனால் தான் இங்கே வடக்கில் பெரிய சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்த ஆதி சந்திரகுப்த மகாராஜாகூட தம் அந்திம காலத்தில் சூழ்ச்சிகளின் குத்துவாள்களிலிருந்து ஒதுங்கி அமைதியாக வாழத் தமிழ் நாட்டுக்குச் சென்று அங்கே உயிர் துறந்தார்" என்றாள் காரூவகி.

"காரூவகி! நீ அந்தப்புரத்தில் என் பத்தினியாக இருந்தால் என் இதயத்திற்கு இதமாய் இருப்பதோடு நாளை நான் வகிக்கப் போகும் ராஜ்யபாரத்திற்கு எவ்வளவோ உதவியாய் இருப்பாய்!" என்றான் அசோகன் குரலையடக்கி.

"யுவராஜா, விளையாட்டாகப் பேசுகிறீர்களா? நாடோடிப் பெண்ணாய் வந்து நடுச் சந்தியில் நிறுத்திக் குற்றவாளியெனச் சாட்டையால் அடிக்கப்பட்ட நான் உங்கள் ராணியாக ஆவதா? உங்கள் அந்தப்புரத்தில்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

இருக்கும் ராஜகுமாரிகளும் உங்கள் பட்டமகிஷியும்; என்னையும் உங்களையும் சுட்டிக் காட்டிச் சிரிக்க மாட்டார்களா?"

"காரூவகி, அந்தஸ்தளிப்பவன் நான்! அந்தஸ்தளிப்பது மனிதனின் வீரக்களையே அன்றி அவன் பிறப்பல்ல! நீ என் அந்தப்புரப் பத்தினிகளனைவரிலும் உயர்ந்தவளாய் திகழ்வாய்! காரூவகி நான் உன்னைக் காதலிக்கிறேன்."

"யுவராஜா! நிஜமாகவே நீங்கள்தான் பேசுகிறீர்களா? இந்த அன்பான ஒரு சொல்லிற்காக நான் எத்தனை வருஷங்கள் ஏங்கிக் கொண்டிருந்தேன் தெரியுமா? யுவராஜா!"

"காரூவகி..." என்று அசோகன் உணர்வு தடுமாறினான்.

"யுவராஜா! என்னால் ஸ்தம்பத்திலிருந்து அசைய முடியவில்லை. இல்லையென்றால் அப்படியே உங்கள் மார்பில் புதைந்தும் மனமாரத் தேம்பித்தேம்பியழுவேன், அப்படியே என்னை அணைத்துக் கொள்ளுங்கள்; தாயை இழந்த நான் தாயின் மதுர அணைப்பை உங்களிடம் அடைந்து உள்ளம் மகிழ்ந்து போவேன். அதற்குப் பிறகு நான் தீயில் எரியும்போது இந்த அணைப்பை நினைத்துக் கொண்டு உற்சாகமாய் உயிர் நீப்பேன்" என்றாள் காரூவகி உணர்ச்சியில் மெய்மறந்தவளாய். அசோகன் அப்படியே தாயின் கனிவோடு அவளை வாரி அணைத்துக் கொண்டான்; அதனால் ஏற்பட்ட ரண உடலின் வலிகளும் காரூவகிக்குத் தோன்றவில்லை. அந்தப் பரஸ்பர அன்பு வெள்ளமான அணைப்பில் இருவரும் வெகுநேரம் மெய்மறந்து இருந்தார்கள், சுற்றியிருக்கும் ஹிம்சை உலகத்தை மறந்து!

"யுவராஜா! நான் வாழ்விலே எத்தனையோ விதமான பிரியங்களை, அன்பு வகைகளைக் கண்டிருக்கிறேன்! ஆனால் உங்கள் மீது கொண்ட அன்பு இன்னதென்று விவரிக்க இயலாத நூதன அன்பாய்த் தோன்றுகிறது, அதை வார்த்தைகளால் என்னால் சொல்ல முடியவில்லை. எப்பொருளையும் தாண்டி என் எண்ணம் முழுவதும் நீங்களே நிறைந்திருக்கிறீர்கள். அன்றி கூடாரத்தில் உங்களிடம் சொல்லாததை இப்போது சாகப் போவதற்கு முன்னால் உங்களிடம் சொல்லுகிறேன். உங்களைப் பார்ப்பதற்கு முன்பே உங்களை நான் மானசீகமாகக் காதலித்து வந்தேன். நீங்கள் என்னைச் சாட்டையால் அடித்தாலும், உயிரோடு எரித்தாலும், ஹிம்சைகள் புரிந்தாலும் அதன் வேதனைகள் நடுவே இன்னதென்று சொல்ல முடியாத ஓர் ஆனந்தச் சுவை எனக்கு உண்டாகும். யுவராஜா! நான் ஏதோ பிதற்றுகிறேன் என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் என் மனசிலுள்ளதை யெல்லாம் எப்படி உங்களிடம் சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை. என்னுடைய மனத் தவிப்பையெல்லாம் சாவதற்கு முன்னால் உங்களிடம் சொல்ல சந்தர்ப்பம் கிடைக்காதா என்று ஏங்கிக் கொண்டேயிருந்தேன். ஆனால் என் ஆர்வம் உண்மையாக இருந்ததால் இந்தத் தனித்த சந்திப்பு வாய்த்துவிட்டது. அதுவே போதும்!" என்றாள் காரூவகி, அசோகன் மார்பில் முகத்தைப் புதைத்த வண்ணம்.

"காரூவகி! நிஜமாக நீ என்னைக் காதலித்தாயா?"

"ஆம்; யுவராஜா! நான் ஆசையோடு வளர்த்த அந்தக் கிளிக்கு என்ன பெயர் வைத்தேன் தெரியுமா? அசோகன் என்று. அதை அசோகாவென்று கூப்பிட்டு அது என்னை நோக்கி, "அக்கா அக்கா!" என்று வாஞ்சையோடு கூப்பிடும்போதெல்லாம் நான் உள்ளம் மகிழ்ந்து போவேன். அந்த என் உள்ளத் தவிப்பு, என் மானசீகக் காதல், நிறைவேறிவிட்டது. அது ஒரு க்ஷண நேரத்தது என்றாலும், அது போதும். நான் நிம்மதியாக உயிர் விடுவேன்."

"பாவிகள் இந்த அன்பு மயமான இருதயம் படைத்த உன் மெல்லிய உடலைத் தீயிட்டுப் பொசுக்கப் போகிறார்கள். அதுவும் என் கையாலேயே நடக்கப் போகிறது!"

"யுவராஜா, அதை நினைத்துக் கலங்காதீர்கள், இந்த ஒரு செய்கையின் மூலம், இந்த என் ஓர் உயிர்த்தியாகத்தின் மூலம் என்றென்றும் நான் நீங்கள் மறக்க முடியாதவளாகி விடுவேன்... எத்தனை இரவுகளில் எத்தனையோ பெண்கள் உங்கள் வாழ்வில் வந்து மறைந்திருப்பார்கள். ஆனால்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

அவர்களுக்கெல்லாம் தலைவியாய் நான் ஒருத்தியே உங்கள் இருதயத்தில் நிறைந்திருப்பேன். பெயரளவில் உங்களுக்கு ஒரு பட்டமகிஷி இருந்தாலும் நான் ஒருத்திதான் உங்கள் நினைவில் உண்மைப் பட்டமகிஷியாய் விளங்குவேன். உள்ளம் முழுவதும் வியாபித்து இருப்பவள்தான் உண்மையான பட்டமகிஷி யுவராஜா!

நாளை நான் உயிர்விடப் போகிறேன் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். அப்படி நான் உயிர் விடுவதன் மூலம் உங்கள் நினைவில் என்றென்றும் உயிர் வாழ்வேன். உங்கள் கையால் என்னை எரித்துக் கொன்றீர்கள் என்ற நினைவு தோன்றும் போதெல்லாம் உங்கள் இருதயத்தில் கொடூரமான எண்ணம் ஏதாவது இருந்தால், அது உடனே அன்பாய் மாறி மக்களை அன்பாய் ஆளுவீர்கள். என் துக்க நினைவால், என் ஒரு ஜீவனுக்கு நீங்கள் காட்டப்போகும் அன்பைச் சகல ஜீவசமுதாயத்தின் மீதும் காட்டுவீர்கள். அதன் மூலம் மரித்த பிறகும் புத்தர் பிரானின் அன்புக் கொள்கைகளைப் பரப்பும் பிக்ஷுணியாக மாறி விடுவேன். யுவராஜா! பலாத்காரத்தின் ஹிம்சை முறைகளை வெல்ல, "புத்தர் போதித்த அறவழி இதுதான்! இதுதான் எங்கள் தன்ம யாத்திரை."

"போதும், காரூவகி! நீ நெருப்பில் நிற்பதற்கு முன்னால், நீ சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் என்னையே நெருப்பில் நிற்க வைத்து எரிக்கிறது. உன் சாவையும் என் அரசியலையும் தவிர இந்தச் சமயத்தில் ஏதாவது அன்பாய்ச் சொல்லு. விடிவதற்கு இன்னும் சில நாழிகைகள்தான் இருக்கின்றன!"

"யுவராஜா! நாளை நான் தீச்சிதையில் இருக்கும்போது நீங்கள் என்னை முத்தமிட முடியாது. இப்போதே என் நெற்றியில் முத்தமிட்டுவிட்டுப் போங்கள். இதுதான் என் கடைசிக் கோரிக்கை" என்றாள் காரூவகி, அந்த வேதனைகளின் நடுவேயும் தன் முகத்தில் நாணம் மருவ.

அசோகன் அப்படியே அவள் முகத்தைத் தன் இரு கையாலும் நிமிர்த்தி, குழந்தையைத் தாய் அணைப்பதுபோல் நெஞ்சோடு அணைத்துக்கொண்டு, அவள் நெற்றியில் முத்தமிட்டான்.

அவளுடைய அன்பையும் பரிவையும் எழுப்பும் கபடமற்ற முகத்தைப் பார்த்துப் பார்த்து, அவள் நெற்றியிலும், ரத்த ரணங்கள் விழுந்த கன்னக் கதுப்புகளிலும், தாகத்தால் உலர்ந்த உதடுகளிலும் மாறி மாறி முத்தமிட்டுக்கொண்டே இருந்தான். சாகப் போகிறவளுக்கு இதமாக அந்த இருதய முத்திரைகள் மூலம் அன்பையும் பரிவையும் தூவிக்கொண்டேயிருந்தான்.

அப்போது சற்றுத் தொலைவில் யாரோ போர் வீரர்கள் தீப் பந்தங்களை எடுத்து வரும் அரவமும், விறகுத் துண்டுகள் விழும் ஓசைகளும் கேட்டன.

"யுவராஜா! யாரோ சுசீமனின் போர்வீரர்களோ, எனக்குச் சிதை தயாரிக்கும் ஆட்களோ வரும் அரவம் கேட்கிறது. யாரும் பார்ப்பதற்கு முன்னால் போய்விடுங்கள். போங்கள் யுவராஜா!"

அசோகன் அவளை விட்டுப் பிரிந்துபோக முடியாமல் தவித்தான்.

அப்போது தீப்பந்தங்கள் நெருங்கி வரவே, அசோகன் காரூவகியின் முகத்தைக் கடைசியாக வெகு நேரம்வரை பார்த்துவிட்டு, அவள் கைகளை எடுத்து முத்தமிட்டு, கறுப்புப் போர்வையைப் போர்த்திக்கொண்டு, அந்த இடத்தைவிட்டு விரைந்து போய், புலர்ந்து வரும் இருண்ட வானவெளியில் மறைந்தான்.

அப்போது அந்த இருளில் "புத்தம் சரணம் கச்சாமி" என்ற அன்பு மயமான காற்றின் ஓலம் அகண்ட அந்தப் பயங்கர மயான பூமியெங்கும் நிறைந்தது.

அத்தியாயம் 5

## பிராண நேசம்

**"இந்த நான்கு நபர்களை உண்மையான இருதயம் படைத்த நண்பர்கள் என நீ கருதவேண்டும்: உனக்கு உதவும் சிநேகிதன்; நல்ல காலத்திலும் கெட்ட காலத்திலும் நிலை மாறாதவன்; உனக்கு நன்மையானது எது என்பதை எடுத்துச் சொல்பவன்; உன் மீது வாஞ்சை கொள்பவன்."**

—தீர்க்க நிகாயம் 111

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?



கிழக்கு வானம் வெளுக்கத் தொடங்கியது. முதல் இரவில் கணவனை ஸ்பரிசித்து, பொழுது விடிந்ததும் கணவனைப் பறிகொடுத்த இளம் விதவையின் முகம்போல், கிழக்கு வானம் நன்றாக வெளுத்துவிட்டது.

ஆனால் கோழிகள் ஏதும் கூவவில்லை. அந்த வறண்ட மைதானத்தில் கூடாரமடித்துத் தங்கியிருந்த காருண்ய அதிகாரிகள், கோழிகளையெல்லாம் பிடித்துச் சாப்பிட்டு விட்டார்கள்!

சாமக்கால மணிகாரன் அதிகாரிகளின் கூடாரங்கள் முன் பூம் பூம் என்று விடியற்சாமச் சங்கை ஊதிச் சென்றான். கூடாரங்களில் பரபரப்பு ஏற்பட்டது. ரஜ்ஜுகர், பிரவேதிகர் முதலான அதிகாரிகள் அவசரமாக எழுந்து தங்கள் ராஜ சின்னங்களையும் சரியாக அணியாமல் குற்ற ஸ்தலத்தை நோக்கி ஓடினார்கள். மெய்ஞ்ஞான பண்டித சிகாமணிகள் தங்கள் கன்னங்களில் விழுந்து கிடக்கும் குமரிகளின் செவ்விதழ்ச் சின்னங்களையும் துடைக்க மறந்து குற்ற ஸ்தலத்தை நோக்கி ஓடினார்கள். கருணை மிகுந்த நீதித் தலைவர்கள் தங்களுடைய கூர்மையான கட்டாரிகளையும், மார்புக் கவசங்களையுங்கூட எடுத்துக் கொள்ளாமல் ஓடினார்கள். அந்தணப் புரோகிதர்கள் காலை சந்தியாவந்தனம் செய்வதையும் மறந்து குற்ற ஸ்தலத்தை நோக்கி ஓடினார்கள்.

அப்படிக் குற்ற ஸ்தலத்தில் என்ன அதிசயம் நிகழப்போகிறது? புரட்சிக்காரக் குடும்பம் என்று கூண்டோடு நெருப்பில் வைத்துக் கைலாசத்திற்கு அனுப்பப் போகிறார்களா? புத்த பிக்ஷு வேஷத்தில் வேவு பார்த்தானென்று எவனாவது ஓர் அப்பாவியைப் பிடித்து நாக்கை அறுக்கப் போகிறார்களா? மகத அதிகாரி எவனையாவது உதாசீனம் செய்தாளென்று எவளாவது ஓர் இளம் பெண்ணை தீ ஸ்தம்பத்தைத் தழுவச் செய்யப் போகிறார்களா? விளைச்சல் இல்லாததால் வரி கட்டவில்லை என்று ராகம் பாடும் ஓர் ஏழைக் கிழவனைப் பிடித்து அவன் வாயில் இரும்பையும் ஈயத்தையும் காய்ச்சி ஊற்றப் போகிறார்களா? அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்தான் என்று எவனாவது ஒரு வணிகனைப் பிடித்து அவனுக்கும் பட்டம் வழங்கப் போகிறார்களா? வரி கொடுக்காமல் வருமானத்தை மறைத்துவிட்டாள் என்று எவளாவது ஒரு தாசியைப் பிடித்து அலங்கோலமாய் ஜனங்கள் முன் நிறுத்தப் போகிறார்களா? இந்து மதத்தின் வேள்விச் சடங்குகளை எதிர்ப்பதோடல்லாமல் ராஜதந்திரி சாணக்கிய முனிவரையும், மதக் காவலன் மகதச் சக்கரவர்த்தியையும் தூஷித்தான் என்று பிற மதத்தினன் எவனையாவது பிடித்து வந்து நாவையறுத்து, கண்ணைப் பிடுங்கி அவனோடு சம்வாதம் புரியப்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

போகிறார்களா? ஆனால் அவைகளெல்லாம் அந்தக் குற்ற ஸ்தலத்தில் சர்வ சாதாரணக் காட்சிகள், அவற்றைவிட என்ன அதிசயம் நடக்கப் போகிறது?

அங்கே காரூவகி என்ற அழகிய அபலைப் பெண்ணை விறகுக் குவியல்களின் நடுவே கம்பத்தில் கட்டி வைத்து உயிரோடு கொளுத்தப் போகிறார்கள். அதுவும் மகத சாம்ராஜ்யத்தின் இளைய ராஜகுமாரன் அசோகன் தன் பொற்கவசங்கள் அணிந்த கையால் தீப்பந்தத்தைப் பிடித்து அவளுக்குத் தீ வைக்கப் போகிறான். அப்படிப்பட்ட அற்புதமான காட்சியை இனி எந்த ராஜ வம்ச சரித்திரத்திலும் பார்க்க முடியாது. அதனால் ஜனங்கள், அதிகாரிகள் அனைவரும் குற்ற ஸ்தலத்தில் திரண்டிருந்தார்கள்.

புஷ்பக விமானத்தில் ஜீவாத்மாக்களைப் பரமாத்மாக்களிடம் அனுப்பி வைக்கும் புரோகிதர்கள் முதற்கொண்டு சாதி சமயமற்ற நீதித் தலைவர்கள் வரை எல்லோரும் தங்கள் தங்கள் சமயத்தின் சின்னங்களை தங்கள் நெற்றியில் துலக்கமாகத் தெரியும்படி நன்றாகத் தரித்திருந்தார்கள். அங்கே சாம்ராஜ்ய அதிகாரிகளின் சூத்திரக் கயிறாகவும் சாத்திர விற்பன்னராகவும் சாணக்கிய ஞானி பிரசன்னமாயிருக்கிறாரல்லவா?

குற்ற மேடைக்குச் சற்றுத் தள்ளி ஐந்து யானைகளின் சுற்றளவு அரைப் பனைமரம் உயரம் விறகுக் கட்டைகளை அடுக்கி ஒரு பிரமாண்டமான விறகுக் குவியல் இருந்தது. அந்தக் குவியலின் நடுவே, அசைத்தால் குத்தும் முள் ஆணிக்கம்பம் ஒன்று நடப்பட்டிருந்தது. அந்தக் குவியலைச் சுற்றிப் பயங்கரமான யவன முரடர்கள் தயாராய்க் கையில் தீப்பந்தங்களோடு நின்று கொண்டிருந்தார்கள்.

இரண்டு யானை பலமுள்ள முரட்டுக் காவலாளிகள் இருவர், பூப்போன்ற மெல்லிய காரூவகியை இழுத்து வந்து விறகுக் குவியலின் அருகே சாணக்கியர், அசோகன், சுசீமன், ரஜ்ஜுகர்கள் முதலான நீதி பரிபாலன உத்தமர்கள் அமர்ந்திருக்கும் நியாய மேடைக்கு முன் நிறுத்தினார்கள்.

காரூவகி வாடிய பூப்போல் துவண்டு நின்று கொண்டிருந்தாள். ஆனால் அவள் தலை குனிந்து நிற்கவில்லை. கெஞ்சும் கண்களோடு பரிதாபமாக எவரையும் அவள் திரும்பிப் பார்க்கவில்லை. ஆனால் அசோகனையே குறு குறுவென்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். முன்னாளிரவு அசோகன் பேசிய அன்பு மயமான வார்த்தைகளை எண்ணி எண்ணி ஏக்கத்தோடு அவனையே ஊடுருவிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அசோகன் முகத்தைத் திருப்பிக் கொண்டான். அவன் கண்கள் கலங்கி நீர் ஆறாக வடியத் தொடங்கியது. ஆனந்தம் வந்தாலும் நீர் சுரக்காத கொடூர சித்தனான அசோகனின் கண்களிலா இவ்வளவு துக்கத்தின் கண்ணீர் மடை? அதுதான் காரூவகி காட்டிய காதலின் ஸ்பரிசம்! யாரும் பார்க்காதபடி தன் உத்தரீயத்தால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டான். அவன் ராஜ்யத்தை ஆளப்போகிறவனல்லவா? எவ்வளவு சஞ்சலமான கட்டத்திலும் முகத்தில் சலனத்தைக் காட்டக்கூடாது என்பதை ராஜதந்திரி சாணக்கியர் போதித்தாரல்லவா?

ராஜதந்திரி சாணக்கியர் முகத்திலோ ஒருவிதச் சலனமும் இல்லை. அன்பே சிவம் என்ற சித்தாந்தமுள்ள விபூதிச் சின்னம் அவர் நெற்றியில் ஒளிர்வதுகூட அவர் உள்ளத்தில் உறைக்கவில்லை. மகத அரசியல் சொக்கட்டானில் அசோகன், சுசீமன் என்ற காய்களில் எந்தக் காயை உருட்டி விளையாடலாம், தன் அறிவு தீக்ஷண்யத்தை எப்படிப் பதம் பிடித்து மகிழலாம் என்று அவர் ஏகாக்கிர சிந்தையாய்ச் சிந்தித்துக் கொண்டிருந்தார்.

வானம் வெளுத்துவிட்டதே ஒழியச் சூரியன் இன்னும் நன்றாக உதயமாகவில்லை. சூரியன் உதயமானதும் காரூவகியை அசோகன் தீயில் வைத்து எரிக்கவேண்டும்!

தீயில் எரியப்போகும் காரூவகியைப்பற்றி அங்கே கூடியிருந்த கும்பல் பலவாறாகப் பேசிக்கொண்டது. அவள் ஒரு விலையுயர்ந்த தாசி என்றும், அவள் தினசரி பசும் பாலில்தான் குளிப்பாளென்றும், அவளைத் தான் பார்த்திருப்பதாகவும், அவளது இடது தோளில் ஓர் அழகான மச்சம் இருப்பதாகவும், அவள் ஆயிரம்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

பொன்னுக்குக் குறைந்து எந்த அதிகாரியின் கூடாரத்திற்கும் வரமாட்டாளென்றும், ஆனால் தனக்கு மட்டும் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது பொன் வாங்கிக்கொண்டு தன் கூடாரத்திற்கு வந்தாளென்றும் ஒரு கிழ அதிகாரி கயிறு திரித்தான். ஜனங்களோ, "இல்லை, இல்லை. அவள் குல ஸ்திரீ. புத்தன் நாமத்தை ஜபிக்கிறாள். இவளைத் தீயில் இட்டால் தக்ஷசீலம் அழிந்து மகத சாம்ராஜ்யம் வீழ்ந்துபோகும்!" என்றார்கள். கொடூர மகத அதிகாரிகளோ, "அந்த வேவுகாரியை தீயில் பொசுக்கியதும், அவள் எலும்புக் கூட்டைத் துண்டுதுண்டாக வெட்டி நம் கூடாரமெங்கும் தோரணமாகத் தொங்கவிட வேண்டும்!" என்று தூரத்திலுள்ள சாணக்கியர் காதில் விழும்படி குசுகுசுவென்று பேசிக் கொண்டிருந்தார்கள்.

அவளைத் தீயில் பொசுக்கும்போது சிவந்த மேனியின் வாடை யவன தேசத்தின் சிறந்த மதுவின் வாடையைவிட ரம்யமாயிருக்கும் என்றார்கள், ரசஞான பண்டிதர்கள். "அந்த அழகான மேனியைத் தீயில் எரிக்கப் போகிறார்களே, அவளுடைய அந்த அழகிய மிருதுவான தோல் கிடைத்தால் அரசர்களுக்கு மான் தோல் செருப்பைவிட அழகான மிதியடிகள் செய்து கொடுக்கலாமே" என்று வருந்தினார்கள் சிலர். ஒரு புறமாய் ஒதுங்கி நின்ற புராதன ஹிந்து தர்க்க சாஸ்திரிகளோ, அவளை எரித்த பிறகு அவளுடைய அஸ்தியைக் கங்கையில் கரைப்பதா அல்லது சுதர்சன ஏரியில் கரைப்பதா என்று கருணையோடு தர்க்கித்துக் கொண்டிருந்தார்கள்.

ஜனங்கள் அவளைப் பார்த்துப் பாவம் என்றார்கள். அதிகாரிகள் அவளைப் பழிவாங்க வேண்டுமென்று சீறினார்கள். ஆனால் எல்லோரும் காரூவகியையும் கீழ்த்திசை வானத்தையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

மூத்த ராஜகுமாரனான சுசீமனோ, சூழ்ச்சிக் கண்களால் சாணக்கியரையும் அசோகனையும் காரூவகியையும் மாறி மாறிப் பார்த்துவிட்டு, கிழக்கு வானத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

கிழக்கு வானத்தில்...........? சூரியன் உதயமாகத் தொடங்கியது.

சுசீமன் குரூரமாகச் சிரித்துக்கொண்டே அசோகனை நோக்கி எழுந்து வந்து அவன் மார்பைத் தட்டி, "அசோகா! சூரியோதயமாகப் போகிறது! உம், ஆகட்டும்! காரூவகியை உன் கையால் தூக்கிக்கொண்டு போய் விறகுக் குவியலின் நடுவேயுள்ள கம்பத்தில் கட்டு!" என்றான், அதிகாரத்தோடு. அசோகன் மனதில் கறுவிக்கொண்டான். "கொடிய சகோதரனைக் கொன்று சுசீமனின் குருதி வெள்ளத்தில் குளிக்கிறேனா இல்லையா, பார்" என்பதுபோல் இருந்தது அசோகனின் இரத்தம் வெளுத்த முகம். ஆனால் சாணக்கியரைத் திரும்பிப் பார்த்துவிட்டுப் பேசாமல் ஆத்திரத்தோடு நின்றான்.

சுசீமன் வஞ்சனையோடு கலகலவென்று சிரித்து, "அசோகா, ஏன் தயங்குகிறாய்? மிருதுவான ஒரு பூவைத் தூக்கி விறகுக் குவியலில் கொண்டுபோய்ப் போடச் சக்தியில்லாதவனா பின்னால் மகத சாம்ராஜ்யத்தை சுமக்க நினைக்கிறாய்? உம், காரூவகியை விறகுக் குவியலுக்குத் தூக்கிச் செல்."

"நானா? என் கைகளாலா?" என்று கத்தினான் அசோகன்.

"ஏன் உன் கைகளால் அவளைத் தூக்கமாட்டாயா? இந்நேரம் இது இரவாயிருந்தால் பஞ்சைவிட மிருதுவாயிருக்கும் அவளை உன் பஞ்சணைக்குத் தூக்கிப் போவாயா இல்லையா?" என்றான் சுசீமன் கேலியாக.

"ஏ சுசீமா! ஏ சூழ்ச்சி மிருகமே! வாயை மூடு! மகதத்தின் ஒப்பற்ற மா மந்திரி சாணக்கியரின் அங்கீகாரம் பெற்ற ராஜ ஆக்ஞை என்பதனால் இந்தக் காரியத்தைச் செய்யப் போகிறேன். இல்லையென்றால் தூர்த்த மிருகமான உன்னையே தீயில் வைத்துக் கொளுத்தியிருப்பேன்!"

"அசோகா! இது போர்க்களமல்ல. வீர ஆவேசப் பேச்சிற்கு இங்கு இடமில்லை. இது புறக்கணிக்க முடியாத ராஜ கடமை. சூரியன் அடிவானக் கோட்டையை விட்டுக் கிளம்புவதற்குள்ளாக நீ அவளை எரித்தாக வேண்டும்... உம், போய் காரூவகியைத் தூக்கு" என்று சுசீமன் உறுமினான். அசோகன் அடியுண்ட மிருகம்போல் சுசீமனை எரித்து விடுவதுபோல் ஒரு முறை பார்த்து விட்டுச் சடசடவென்று நியாய மேடையின் படியை

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

விட்டிறங்கி காரூவகியின் அருகில் ஓடி, அவள் தோள்களின் மீது கை வைத்தான். அந்த ஸ்பரிசம் பட்டதும் காரூவகி அளவற்ற துக்கத்தை ஆற்ற மாட்டாதவளாய் கண்களைக் கசக்கிய வண்ணம் தேம்பித் தேம்பி அழுதாள்.

அசோகன் அவள் முகத்தையே ஊடுருவிப் பார்த்துக் கண் கலங்கி நின்றான். ஒருவரை விட்டு ஒருவர் இனி என்றென்றும் சந்திக்க முடியாதபடி பிரியப் போகிறோமே என்ற எண்ணந்தான் இருவர் நெஞ்சிலும் நிறைந்து துக்க வெள்ளத்தை மடை திறந்து ஓட விட்டது.

அசோகனுக்குப் பின்னால், முகத்தில் எந்தவிதச் சலனமும் இல்லாமல், இதயத்தின் பாஷையும் தெரியாத காவலாளிகள் மரண தூதுவர்கள் போல் நின்று கொண்டிருந்தார்கள். அந்தக் காட்சியைக் கண்டும் சிறிதும் இரக்கமில்லாமல் சுசீமன் நியாய மேடையில் இருந்து கேலியாகச் சிரித்தான்.

"அசோகா, கண்ணீரைக் கண்டு கலங்கி நிற்கிறாயா? கண்ணீரைக் கண்டு கலங்குபவன் மகத சாம்ராஜ்யத்தைக் கட்டியாள முடியாது. பிற நாட்டைக் கவர நமக்கு உதவும் வீரர்கள் ரத்தம் சிந்துவதைவிடக் காதலிகளின் கண்ணீர் பெரிதல்ல. அசோகா!" என்றான் சுசீமன்.

காரூவகி அசோகனை ஏறிட்டுப் பார்த்தாள். அசோகன் அவள் முகத்தைப் பார்க்கவே மனங் கூசியவனாய் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டு, மெல்லிய பூவைத் தூக்குவதுபோல் மிருதுவாக காரூவகியைத் தன் இரு கைகளாலும் தூக்கினான். அந்த ஸ்பரிச வெள்ளத்தில், அன்பின் சுனைநீர் பெருக்குகளில் தன்னை மறந்தவளாய்க் காரூவகி தன் கண் இமைகளை மூடிக் கொண்டாள்.

அசோகன் அவளைத் தூக்கிச் சென்று, தன் காதலியை மிருத்துயு தேவதையின் கைகளில் தானே கொண்டு போய்க் கொடுப்பதுபோல, விறகுக் குவியலின் மீதேறி அவளைக் கொண்டு போய் முள் கம்பத்தின் மீது நிறுத்தினான். இரண்டு யவன வீரர்கள் அவளைக் கம்பத்தோடு பிணைத்து ஒரு கயிற்றால் அவளை அங்கும் இங்கும் நெளியாதபடி இறுகக் கட்டிவிட்டுக் கீழே இறங்கினார்கள்.

சுசீமன் ஒரு தீப்பந்தத்தைக் கொளுத்திக் கொண்டுவந்து விறகுக் குவியலின் கீழ் நின்றவாறு தீப்பந்தத்தைத் தூக்கி அசோகனிடம் கொடுத்தான். அசோகன் அளவற்ற துக்கத்தால் இதயம் மரமரத்துப் போனவனாகக் கண் இமைகளை மூடிக்கொண்டு காரூவகியின் காலடியில் இருந்த ஒரு சிறு விறகுக் கட்டையில் தீயைப் பற்ற வைத்தான். மறுகணம் சுற்றிலும், தயாராய் தீப்பந்தங்களைப் பிடித்துக் கொண்டிருந்த வீரர்கள் எல்லோரும் புற்றீசல்கள் போல உற்சாகமாய்க் கூவிக்கொண்டு விறகுக் குவியலுக்குள் தீப்பந்தங்களை விட்டெறிந்தார்கள். விறகுக் குவியலைச் சுற்றிலும் தீ புகையைக் கக்கிக்கொண்டு கபகபவென்று பற்றி எரியத் தொடங்கியது. சுற்றிலும் நின்ற கும்பல் மருண்டு நாலா பக்கமும் சிதறி விலகியது. ஆனால் அசோகன் விறகுக் குவியலை விட்டு இறங்கவில்லை. காரூவகியின் அருகிலேயே கண்களில் தாரையாக நீர் வடிய அவன் அவள் முகத்தை ஊடுருவிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

காரூவகியும் அசோகனை ஆசையோடு பார்த்த வண்ணம் மெல்லிய குரலில், "யுவராஜா! தீ பற்றிக் கொண்டு விட்டது. கீழே இறங்கிப் போங்கள். நான்தான் கொலைகாரனைத் தெரியாது என்று சொன்ன குற்றத்திற்காக இத்தண்டனையை அநுபவிக்கிறேன். நீங்களுமா என்னோடு தீயில் எரியவேண்டும்; கீழே இறங்கிப் போங்கள்!" என்றாள்.

அசோகன் தழதழக்கும் ஈனஸ்தாயியில், "காரூவகி! இந்த ஆசை முகத்தை விட்டு எங்கே போவேன்? உன் நினைவோடு நான் எப்படி அரண்மனை உப்பரிகைகளிலும், அந்தப்புர நந்தவனங்களிலும் உலாவுவேன்? என் கைகளாலேயே உன்னை உயிரோடு தீயில் வைத்துக் கொளுத்திய இந்தக் கோர நிகழ்ச்சி என் வாழ்நாள் முழுதும் என் உள்ளத்தைச் சுட்டெரித்துக் கொண்டிருக்குமே? வாழ்வு பூரா என் உள்ளம் தீயில் வெந்து கொண்டிருப்பதைவிட இந்தக் கணமே உன்னோடு நான் தீயில் வெந்து போவது எவ்வளவோ மேல்," என்றான்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

"யுவராஜா! நாளை நீங்கள் மகத சாம்ராஜ்யத்தின் இணையற்ற ராஜ முடியைத் தரிக்கப்போகும் அந்த அற்புத தினத்தை நினைத்துப் பாருங்கள்! சாதிச் சமயச் சார்பற்ற ஜீவகாருண்யத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு ராஜ்யம் உண்டாக்க வேண்டும் என்ற என் கனவை நீங்கள்தானே நிறைவேற்ற வேண்டும்? என்மீது உங்களுக்கு உண்மையான அன்பிருந்தால் தீ நம் இருவரையும் சூழுமுன் நீங்கள் கீழே இறங்கிப் போங்கள்" என்றாள் காரூவகி.

அசோகன் தேகம் முழுவதும், முள் சுள்ளிகளோடு கரைபுரண்டு வரும் ஆற்று வெள்ளம் ஓடுவது போல் இருந்தது.

காரூவகி அசோகனுடைய கைகளை எடுத்துத் தன் கண்களில் வைத்து ஒத்திக்கொண்டு, "எனக்குத் தீ மூட்டிய இந்தக் கைகள் புது அரசியல் தத்துவத்தை உலகிற்குக் காண்பிக்கப் போகின்றன" என்று மெல்லச் சிரித்தாள். இப்பொழுது அவள் முகத்தில் கலக்கமில்லை; சலனமில்லை. கண்ணீர் இல்லை. தெளிவு இருந்தது. திடமிருந்தது. வாஞ்சையின் தேக்கம் இருந்தது. அன்பின் அற்புத சக்தி இருந்தது.

கபகபவென்று தீப்பற்றி எரியும் விறகுக் குவியலில் இருந்து அசோகன் கீழே இறங்கி வந்தான்.

அதைப் பார்த்துச் சுசீமன் சூழ்ச்சிப் புன்னகையோடு, "அசோகா! நீ கீழே இறங்கி வந்துவிட்டாயா? பாவம், அந்தச் சதிகாரியின் மேல் உள்ள ஆசையால் நீயும் அந்தத் தீயில் எரியப் போகிறாயோ என்று நினைத்தேன்!" என்றான்.

"சுசீமா! அவ்வளவு சுலபத்தில் மகத சிம்மாசனப் போட்டி தீர்ந்துவிடும் என்று நினைக்காதே! நாளை நம் வயோதிகத் தந்தையின் அஸ்தமனத்தில் நடக்கப்போகும் சிம்மாசனப் போரில் உன் ரத்தத்தைச் சிந்தி அந்தக் குருதி வெள்ளத்தில் நான் நீந்தி விளையாடும் வரை இந்த அசோகன் உயிர்விட மாட்டான்!"

"அவ்வளவு ஆத்திரமா?"

"ஏ சுசீமா! மகதத்தின் மணிமுடிக்கு அடுத்தபடியாக என் வாழ்வின் சிகரமாகக் கருதிய அந்தக் காரூவகியை என் கையாலேயே தீயில் வைத்துப் பொசுக்கும்படி சூழ்ச்சி செய்தாய். இதை நான் என்றும் மறக்கமாட்டேன். சிம்மாசனப் போரின் முடிவில் உன்னையும் உன் அந்தப்புர ஸ்திரீகளையும் கைதிகளாகப் பிடித்து, கூண்டில் அடைத்து, தீயில் வைத்துக் கொளுத்திப் பழிவாங்காமல் விடமாட்டேன். சுசீமா! இந்த அசோகனின் இருதயத்தை நீ அறியவில்லை. முன்னால் ஆயிர வருஷங்களும், பின்னால் ஆயிரம் வருஷங்களும் கடந்து, எதிர்காலச் சரித்திரங்களை ஊடுருவிப் பார்க்கும் சக்தி வாய்ந்த சாணக்கிய சிரேஷ்டர் அறிவார்."

"என் வாழ்வின் ஜீவநாடியாகக் கருதியவை இரண்டே இரண்டுதான். ஒன்று மகத சாம்ராஜ்யத்தின் மணிமுடி! மற்றொன்று என் மனதின் மகாதேவதை காரூவகி! மணிமுடியை அடையச் சிம்மாசனப் போருக்கு உன்னைப்போல் ரத, கஜ, துரக, பதாதி சைன்யங்களின் உதவி தேவையென்று நான் கருதவில்லை. நீ மகத சாம்ராஜ்யத்தின் சகல படைகளையும் உன் பக்கம் சேர்த்துக்கொள். ஆனால் மாமந்திரி சாணக்கியர் ஒருவரின் மதி யூகம் ஒன்று மட்டும் எனக்குப் போதும்; நான் வென்றுவிடுவேன். மகதத்தின் மணிமகுடம் என் காலடியில் வந்து கிடக்கும். அந்த ஒப்பற்ற ஒரு சாணக்கியரின் உதவி கிடைக்கவேண்டுமென்பதற்காக என் மற்றொரு ஜீவநாடியான என் காரூவகியை இன்று நான் இழந்துவிட்டேன். சாணக்கியரின் உதவி எனக்குக் கிடைத்து விட்டது, அதுபோதும்!" என்றான் அசோகன் கம்பீரமாக.

அங்கிருந்த அனைவரும் கற்பதுமைகளாகச் சமைந்து விட்டார்கள். சாணக்கியரோ முகத்தில் எந்தவிதமான சலனத்தையும் காட்டாமல் மனதிற்குள் புன்னகை செய்து கொண்டார்.

காரூவகியைச் சுற்றி விறகுக் குவியலில், தீப் பிழம்புகள் வானை நோக்கிக் கிளம்பின, புகை மண்டலம் காரூவகியைச் சுற்றி மறைத்துக் கொண்டது.

"புத்தம் சரணம் கச்சாமி! புத்தம் சரணம் கச்சாமி!" என்று காரூவகி இடைவிடாமல் ஜபித்துக்கொண்டே இருந்தாள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

அப்போது கீழ்த்திசை வானத்தில், "புத்தம் சரணம் கச்சாமி" என்று அகண்டகாரமாய் ஒரு நாத வெள்ளம் எதிரொலித்தது! எல்லோரும் ஆவலோடு கீழ்த்திசை வானத்தை நோக்கித் திரும்பிப் பார்த்தார்கள். அங்கே சூரியோதயச் சுடருக்குப் பின்னால், சூரிய கிரணங்களின் ஜோதியைவிட தேஜஸ் மிகுந்த நெடிய ஆகிருதியும் காவி உடையும் தரித்த ஒரு பௌத்த பிக்ஷு புன்னகை ததும்பியமுகத்துடன் வந்து கொண்டிருந்தார். இராஜாக்களுக்குரிய கம்பீரமான இராஜகளை அவர் முகத்தில் வீசியது.

அந்த புத்த பிக்ஷு யார்?

அத்தியாயம் 6

## துறவியின் தானம்

**"மதத் துறவிகளில் சிலர் வாதம் செய்வதற்குரிய வல்லமை பெற முயல்கிறார்கள். அவர்களின் மனம் சிறுமையானவை. இவர்களை நான் பாராட்டுவதில்லை."**

—தம்மபதம்

குங்குமத் திலகமிட்ட இளம் விதவையின் நெற்றியைப் போல, கீழ்த்திசை வானம் நன்றாகப் பிரகாசித்தது.

சூரியோதயத்தின் செஞ்சுடர்த் திசையிலிருந்து வந்த புத்த பிக்ஷு வேறு யாருமல்ல. நாடெல்லாம் மகான் என்று போற்றும் பௌத்த மதத் தலைவர் உபகுப்தர்தான்!



உபகுப்தர், குற்ற ஸ்தலத்தை நோக்கி நெருங்கி வந்தார். அங்கே கூடியிருந்த கும்பல் தலைவணங்கி விலகி அவருக்கு வழிவிட்டது.

தீப்பிடித்து எரியும் விறகுக் குவியலின் நடுவே அபலை காரூவகி வாடிய குரலில், "புத்தம் சரணம் கச்சாமி" "தர்மம் சரணம் கச்சாமி!" என்று ஸ்மரித்துக் கொண்டிருந்தாள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

உபகுப்தரும் வானவெளிகளெல்லாம் தாண்டிச் செல்லும் கம்பீரமான குரலில் "புத்தம் சரணம் கச்சாமி" என்று உச்சரித்துவிட்டு சுற்றிலும் இருந்த கும்பலைப் பார்த்தார். அங்கிருந்த ஜனங்கள் தங்களையும் மறந்து, "புத்தம் சரணம் கச்சாமி" என்று உற்சாகத்தோடு கூவினார்கள். அங்கிருந்த அதிகாரிகளும் "புத்தம் சரணம் கச்சாமி" என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டார்கள். ஆனால் வாய்விட்டுச் சொல்ல அவர்களுக்கு மனம் துணியவில்லை. சநாதன மதத்தின் பிரதிநிதியாய் மாமந்திரி சாணக்கியர் அமர்ந்திருக்கிறார் அல்லவா? வைதிக மதத்தின் வேத நெறிகளையும் வேள்விச் சடங்குகளையும் எதிர்க்கும் புத்த பிக்ஷுகளைப் பின்பற்றி அதிகாரிகள் வாய்விட்டுக் கோஷமிட முடியுமா?

உபகுப்தர் தம் சக்தியால் காரூவகியைக் காப்பாற்றுவாரா என்று அசோகன் அவர் முகத்தையே ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டு நின்றான். அவர் மட்டும் அவளைக் காப்பாற்றினால், புத்த மதக் கொள்கைகளையும் ஆதரிப்பதாக உள்ளூர உறுதி பூண்டான்.

உபகுப்தர், நியாய மேடையை நோக்கிச் சென்று மேடையின் மேலே பொன்னாசனத்தில் அமர்ந்திருக்கும் சாணக்கியர் முன்வந்து ஒரு மோகனப் புன்முறுவலோடு தரையில் நின்றார்.

எந்த நெருக்கடியான சமயத்திலும் முகத்தில் சலனத்தைக் காட்டாத சாணக்கியருக்குக்கூட ஒரு கணம் முகம் சலனம் அடைந்துவிட்டது.

மகான் உபகுப்தரைப் பார்த்ததும் ஆசனத்தில் இருக்கை கொள்ளாமல் சாணக்கியர் அங்கும் இங்கும் அசைந்தார். எழுந்து உபகுப்தருக்கு ஆசனம் கொடுக்க வேண்டுமென்று சாணக்கியருக்குத் தோன்றியது. ஆனால் அவர் அவ்விதம் செய்யவில்லை. தம்முடைய கொள்கைகளையும் வைதிக மதத்தின் சநாதனச் சடங்குகளையும் எதிர்க்கும் ஒரு புத்த பிக்ஷுவிற்குத் தம்மோடு சரிசமானமாக ஆசனம் கொடுக்க சாணக்கியரின் தர்க்க அறிவு இடங்கொடுக்கவில்லை.

உபகுப்தர் இலேசாகச் சிரித்தார். "சாணக்கியா! நீ எனக்கு ஆசனம் தரவேண்டாம். தீயில் ஒரு ஜீவன் பரிதவிக்கும்போது நான் உட்கார உன்னிடம் ஓர் ஆசனத்தைக் கேட்க வரவில்லை. அப்படிப்பட்ட கடின வைராக்கிய இருதயத்தை எனக்கு எந்தச் சாஸ்திரமும் கற்பிக்கவில்லை. உன்னுடைய சாஸ்திரங்களையும் நியாய பாஷ்யத்தையும் கொடிய தண்டனை முறைகளையும் நான் கருத்தூன்றிப் படித்ததில்லை. அதனால் அந்தக் கழிவிரக்கமற்ற கடின இருதயம் எனக்குக் கிடைக்க வில்லை!" என்றார் உபகுப்தர் கம்பீரமாக.

முன்கோபியான சாணக்கியருக்கு உபகுப்தரின் அபவார்த்தைகள் ஆத்திரத்தை மூட்டின. "உபகுப்தரே! நீர் இங்கு நிற்பதைக்கூட நான் விரும்பவில்லையே!" என்றார் சாணக்கியர் வேறு புறம் முகத்தைத் திருப்பிக்கொண்டு.

"சாணக்கியா! ஏன் நான் பாபாத்மா என்று கருதுகிறாயா? ஆனால் பாபாத்மாவோ, ஜீவாத்மாவோ எந்த ஆத்மாவையும் நம்பாதவர்கள் நாங்கள்!"

"பரமாத்மாவைக் கூடத்தானே நீங்கள் நம்பாதவர்கள்!" என்றார் சாணக்கியர் ஏளனத்தோடு.

"பரமாத்மாவின் பாதாரவிந்தங்களைச் சரணடைவது ஜீவாத்மா என்றும், உரு உடையதாயும், உரு அற்றதாயும், இருப்பதாயும், இல்லாததாயும், மெய்யில் மெய்யனாயும், பொய்யில் பொய்யனாயும் உள்ளவன் பரமாத்மாவென்றும் அழகான ஓசை மிகுந்த சொற்களை அடுக்கிப் பாமர மக்களின் சிந்தையைப் பிரமிக்க வைத்துக் கொண்டிருப்பதை விட, எல்லோரும் ஓர் அன்புச் சமுதாயமாய் ஜீவகாருண்ய சிந்தையோடு அமைதியாக வாழும் வழியை மக்களுக்குப் போதிப்பதால் அதிகப் பயனுண்டு என்று நம்புகிறவர்கள் நாங்கள்!"

"உபகுப்தரே, நீங்களெல்லாம் கடவுளைச் சிந்திக்காத நாஸ்திகர்கள்!"

"சாணக்கியா, உன் நெஞ்சைக் கேட்டுப் பார்! உன் அறிவு விசாலத்தை ஒரு கணம் மறந்து உன் இருதயத்தைக் கேட்டுப் பார். எவனுக்கு அறிவு அளவு மீறி மிகுந்திருக்கிறதோ, எவன் கடவுள் தத்துவங்களைப்பற்றி ஆராய்ச்சி அறிவுடன் அதிக தர்க்கம் புரிகின்றானோ, அவன்தான் உண்மையில்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

நாஸ்திகனாய் இருக்கிறான். சாணக்கியா! உன்னைப்போல் அறிவின் விசாலமும், குயுக்திப் புத்தி நுட்பங்களும் சாஸ்திர ஆராய்ச்சியும் படைத்தவன் இனி எந்த யுகத்திலும் பிறக்கமாட்டான் என்று பிரசித்தமடைந்திருக்கிறாய். உன் அறிவைக் கண்டு சகலரும் தலை வணங்குகிறார்கள். சாம்ராஜ்யங்கள் நடு நடுங்குகின்றன. சாஸ்திர பண்டிதர்கள் கௌரவிக்கிறார்கள். ஆனால் சாமானிய மக்கள் அறிவாளியான உன்னைவிட என்னைப்போன்ற பௌத்த பிக்ஷுக்களைத்தான் நம்புவார்கள். எனக்குத்தான் மக்களிடம் செல்வாக்குண்டு. ஒரு தத்துவத்தைப் புத்தி சாதுர்யத்தாலும், சாஸ்திர பாண்டியத்தியத்தாலும், எவ்வளவோ மெருகு கொடுத்து விளக்கிச் சொல்ல முடிகிற ஓர் அறிவாளியின் சொல்லுக்கு மக்களிடையே உண்மையான வேகம் கிடையாது. ஜீவன்களிடம் பரிதாப உணர்ச்சி கொண்டு அன்பால் பிணைக்கும் மகான்களின் வார்த்தைகளுக்குத்தான், அவை சாதாரணமான வார்த்தையாக இருந்தாலும், உண்மையான வேகமும் பக்தியும் உண்டு!"

"உபகுப்தரே! நீர் என் ஜன்ம சத்ரு!"

"ஓ, சாணக்கியா! எனக்குச் சத்ரு எவரும் இல்லை. அறிவுதான் சத்ருக்களைச் சிருஷ்டிக்கிறது. அன்பு நண்பர்களைத்தான் உண்டாக்கும். எவன் வாழ்க்கையில் குயுக்தி முறைகளைக் கையாள்கிறானோ, எவன் ஓயாமல் அறிவைச் சொக்கட்டான் காய்களாக உருட்டிக் கொண்டிருக்கிறானோ, அவனுக்குத்தான் சத்ருக்கள் அதிகம் முளைக்கிறார்கள்! அறிவை அளவுமீறிப் பிரயோகிக்காமல் அன்பின் அடிப்படையில் பிரகாசிக்கும் மகானுக்குச் சத்ருவே ஏற்படுவதில்லை. கொள்கையளவில் விரோதிகளாக விளங்குபவர்கள் கூட அந்தரங்கத்தில் அந்த மகான்களிடம் அளவற்ற அன்பு வைத்திருப்பார்கள்! சாணக்கியா, எதனால் என்னைச் சத்ரு என்று கருதுகிறாய்!"

"நீர் என் சநாதன மதத்தின் வேத நெறிகளையும், வேள்விச் சடங்குகளையும் எதிர்க்கும் கொள்கைகளை என் மகத சாம்ராஜ்யத்தில் பரப்ப முயலுகிறீர்!"

"சாணக்கியா! நாங்கள் மட்டும் உன் சநாதன மதத்தின் வேள்விச் சடங்குகளை எதிர்க்கவில்லை; உங்கள் உபநிஷத்துக்களே அவைகளைப் பயனற்றவை என்று கூறுகின்றன. சாணக்கியா, உன் சாஸ்திரக் கொள்கையை விட, எங்கள் கொள்கைதான் அதிகம் ஆக்க சக்தி வாய்ந்தது; மக்களை எளிதில் கவரக் கூடியது! சாணக்கியா, நீ வாழ்வது அறிவுலகம். நான் வாழ்வது அன்புலகம். நீ சிருஷ்டிக்க முயல்வது, சாஸ்திர விதிகளால் மக்களுள் பல சமூகத் தொகுதி உழைத்துப் பாடுபடவும், ஒரு தொகுதி உண்டு உறங்கவும், ஒரு தொகுதி அறிவை ஆராய்ந்து திரியவும், ஒரு தொகுதி அறியாமையில் சிக்கி உழலவும், ஒரு தொகுதி ஆளவும், ஒரு தொகுதி ஆளப்படவும் அமைக்கும் பல சமுதாயங்களைக் கொண்ட உலகம். ஆனால் நான் கனவு காண்பதோ, சகல ஜீவன்களும் சாதி சமயச் சார்பற்று, சகோதர வாஞ்சையோடு வாழும் சமதர்ம உலகம். அறிவுலகத்தில் அமைதி இராது. அன்புலகத்தில் தான் அமைதியும் நிம்மதியும் இருக்கும்!"

"உபகுப்தரே, இங்கு நீர் என்னோடு தர்க்கம் புரியவா வந்தீர்?"

"சாணக்கியா, ஒரு ஜீவன் அங்கே தீயில் எரியும்போது உன்னோடு நான் தர்க்கம் செய்து என் அறிவின் ஜ்வலிப்பைக் காட்ட வரவில்லை. நர்மதா நதி தீரத்தில் உள்ள உன் ஓலைக் குடிசையில் உன் மனைவி கௌதமி உன் குழந்தைக்கு பால் இல்லை என்று கண்ணீர் உகுக்கிறாள். அவளிடம் போய்ப் பரமாத்மாக்களையும் ஜீவாத்மாக்களையும் பற்றித் தர்க்கம் செய். மகத அரண்மனையின் இருண்ட மூலையில் பிந்துசார மன்னர் மரணப் படுக்கையில் கிடக்கிறார். அவரிடம் போய்ப் பரிசுத்த ஆத்மா ஸ்வர்க்கத்திற்கும் பாபாத்மா நரகத்திற்கும் போகிறதென்று தர்க்கம் செய். சாணக்கியா, வெறும் தர்க்க அறிவால் பயனே இல்லை!"

"உபகுப்தரே! என்னிடம் எதற்காக வந்தீர்?"

"ஒரு ஜீவனைக் காப்பாற்ற!"

"உபகுப்தரே, இந்தக் குற்ற ஸ்தலத்தில் யாரும் கிளிகளைப் பிடித்துக் கூண்டில் அடைக்கவில்லை. எவரும் மான், குருவி, நரிகளை வேட்டையாடவில்லை. உம்முடைய ஜீவகாருண்யத்தைக் காண்பிக்க இங்கு

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?




**Click Here to join our Telegram Group**

**For free eBooks, join us on Telegram**

**https://t.me/tamilbooksworld**

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

உமக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லையே என்று வருந்துகிறேன்!" என்றார் சாணக்கியர் ஏளனமாக.

"சாணக்கியா! கிளிகளையும் நரிகளையும் அற்ப ஜந்துக்கள் என்றுதானே கேவலமாக நினைக்கிறாய்? அவை அற்ப ஜந்துக்களல்ல! சில சக்திகளில் மனிதனையும் மிஞ்சிவிடுகின்றன அவை! சாணக்கியா, குயுக்தியில் சிறந்தவன் என்று உலகம் உன்னைப் புகழ்கிறது. ஆனால் ஒரு குள்ளநரி குயுக்தியில் நூறு சாணக்கியருக்குச் சமானமாய் விளங்குகிறது. அற்புதமாகக் கருதப்படும் காக்கைகள் தமிழ்நாட்டின் சமதர்மவாதிகளைவிட அதிகக் கூட்டுறவுணர்ச்சி படைத்தவைகளாய் இருக்கின்றன. ஒரு பண்டிதன் குழந்தையைவிட, ஒரு பசுங்கிளி பேசும் பாஷையை எளிதில் கற்றுக் கொள்கிறது. நூறு பொன் வாங்கும் சேவகனைவிட ஒரு நாய் நன்றியுள்ளதாய் இருக்கிறது. சாணக்கியா, உன்னைப்போல் ஜீவன்களின் தராதரங்களைப் பிரித்துப் பார்ப்பதில்லை நாங்கள்! உருவங்களையோ அந்தஸ்துகளையோ கொண்டு சுகானுபவங்களுக்கு நாங்கள் எடை போடுவதில்லை. சகல ஜீவன்களையும் நாங்கள் சமமென்று கருதுகிறோம். அதனால்தான் அஹிம்சை மயமான ஜீவகாருண்ய அடிப்படையில் பௌத்த சத்சங்கம் உருவாகி மக்களைக் கவர்ந்து வருகிறது. இந்த ஜீவகாருண்யத்தையும், அஹிம்சையையும் உன் வைதீக மதம் தழுவிக்கொண்டால்தான் அது அழியாமல் இருக்கும். இல்லை யென்றால் அந்த வைதிக மதம் எவ்வளவு பலமான சாஸ்திரச் சுவர்களை எழுப்பினாலும் அந்தச் சுவர்களுக்குள்ளே அது அழுகி நசிந்துவிடும். அதை மறந்துவிடாதே!"

சாணக்கியர் சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்துவிட்டு, "உபகுப்தரே! என்னிடம் எதற்காக வந்தீர், சொல்லும்!" என்று கேட்டார்.

உபகுப்தர் சிரித்துக்கொண்டே தம்முடைய பிக்ஷைப் பாத்திரத்தைச் சாணக்கியர் முன் நீட்டினார்.

"உபகுப்தரே! பிக்ஷை கேட்பதைக் கேவலம் என்று கருதுபவன் நான். தத்துவ சாஸ்திரிகள் என்று சொல்லிக்கொள்ளும் புத்த பிக்ஷுக்கள் ஒரு பிடி அன்னத்திற்காக திருவோடை எடுத்துக்கொண்டு தெருத் தெருவாய் அலைவது பைத்தியக்காரச் செய்கையாய் எனக்குத் தோன்றுகிறது!"

"சாணக்கியா! பிக்ஷை கொடுக்கும் பிரபுக்களிடம் அநுதாப உணர்ச்சியை எழுப்பும் சக்தி வாய்ந்தவன்தான் பிக்ஷை எடுத்து உயிர் வாழ முடியும். மக்களிடம் அநுதாப உணர்ச்சியையும் ஜீவகாருண்ய சிந்தையையும் உண்டாக்கும் சக்தி புத்த பிக்ஷுக்களுக்கு ஏற்பட வேண்டுமென்பதற்காகத்தான் பிக்ஷுக்கள் பிச்சை எடுத்து ஜீவிக்க வேண்டுமென்று எங்கள் சத்ஸங்கம் வற்புறுத்துகிறது."

சாணக்கியர் தம் சிகையிலிருந்த சிக்கலை ஒரு விரலால் எடுத்தவண்ணம் யோசனையில் ஆழ்ந்தார்.

உபகுப்தர் தம் பிக்ஷைப் பாத்திரத்தை சாணக்கியரின் முன் நீட்டி, "கௌடில்ய சிரேஷ்டா! எனக்குப் பிக்ஷை கொடு! நான் என்ன பிக்ஷை கேட்பேன் என்று உனக்குத் தெரியும்!" என்றார் சிரித்துக்கொண்டே.

சாணக்கியர் சிரித்தார்: "உபகுப்தரே! அந்தப் பிச்சை ஓட்டில் உண்பதற்கு ஒரு பிடி அன்னங்கூடக் கேட்கவில்லை. நீர் ஒரு ராஜ முடியைக் கேட்கவில்லை. ஒரு நாட்டின் விடுதலையைக் கேட்கவில்லை. நீர் படுத்துறங்குவதற்கு ஒரு ஆறடி நிலங்கூடக் கேட்கவில்லை. ஆனால் காரூவகியின் உயிரைக் கேட்கிறீர்!"

"ஆம்; அழியும் உடலோடு கூடிய காரூவகியின் அழியாத ஜீவனைத்தான் கேட்கிறேன்!"

"உபகுப்தரே, அரசர்கள்தான் தானம் கொடுப் பார்கள். கோதானம், பூதானம், புஷ்பதானம், ஸ்வர்ணதானம் என்று. தானம் வாங்கும் உதிரத்தில் பிறந்தவன் தானம் கொடுப்பானா? எங்காவது தானம் வாங்குபவனே தானம் கொடுப்பதுண்டா?"

"சாணக்கியா, ஏன் தர்க்கத்தின் அலங்காரமான வார்த்தைகளால் உன் உண்மை சொரூபத்தைத் திரையிட்டு மறைக்கிறாய்? நந்தர்களிடமிருந்து மகத சாம்ராஜ்யத்தைப் பிடுங்கிச் சந்திரகுப்த மௌரியனுக்குத் தானம் கொடுத்தாய். யவன, சிரியா நாடுகளுக்கு எல்லாம் வணிகர்களை அனுப்பித் தனலட்சுமியைக் கப்பலில்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

ஏற்றி வந்து மகதத்தின் ராஜலட்சுமிக்குத் தானம் கொடுத்தாய். நான் கேட்கும் அந்த உயிரை நீ எனக்குப் பிச்சை கொடுக்கக் கூடாதா?"

"உபகுப்தரே! நீர் பிச்சை கேட்கும் அந்தக் காரூவகி எவ்வளவு பெரிய ராஜத் துரோகம் புரிந்தவள் தெரியுமா? என் அபிமானத்திற்கு உரிய தேவசேனனைக் கொன்றவனுக்கு உடந்தையாக இருந்ததோடல்லாது, அந்தக் கொலைகாரன் யாரென்று சொல்லாமலும் சாதிக்கிறாள். அவள் தண்டனையை அநுபவிக்க வேண்டாமா?"

"சாணக்கியா, அவள் செய்ததாக நீங்கள் கூறும் இக் கொலை உடந்தைக் குற்றத்திற்கு அவள் இவ்வளவு பெரிய தண்டனையை அநுபவிக்க வேண்டு மென்றால், சந்திரகுப்தனுக்கு மகத சாம்ராஜ்யத்தைப் பறித்துக் கொடுப்பதற்காக, அவிழ்ந்த உன் சிகையை முடிப்பதற்காக, நவநந்த மன்னர்களின் பல்லாயிரக்கணக்கான வீரர்களைக் கொன்று கடைசி நந்த மன்னனின் கைக் குழந்தை வரை கருவறுத்தாயே, அந்தக் கொலை பாதகச் செயலுக்கு எவ்வளவு பெரிய தண்டனையை அநுபவிக்க வேண்டும்? மகத மௌரிய வம்சத்தின் அதிகாரங்களைப் பெருக்குவதற்காக, பதினாறு மண்டலத் தலைவர்களைக் கொன்று குவித்தாயே, அதற்கு உனக்குத் தண்டனை வேண்டாமா?"

"பாமர மக்கள்தான் பிறரைக் கொல்ல இரும்பாலும், எஃகாலும் செய்த ஆயுதத்தை உபயோகிக்கிறார்கள்! அறிவாளிகள் அவற்றைவிடக் கொடியதான சூழ்ச்சி என்ற ஆயுதத்தை உபயோகப் படுத்துகிறார்கள். ஆயுதம் இரும்பு வடிவாய் இருந்தால் என்ன, அறிவு வடிவாய் இருந்தாலென்ன? இரண்டும் ஒன்றுதான்! சாணக்கியா, இன்று ஒரு நாளாவது உன் தந்திர உபாயங்களை மறந்து, நான் கேட்கும் பிச்சையை மனமிரங்கிக் கொடு.

"உபகுப்தரே! நீர் கேட்ட பிச்சையைத் தந்துவிட்டேன்!" என்று சாணக்கியர் சிரித்தார்.

"சாணக்கியா! நிஜமாக நீதான் சொல்லுகிறாயா, அல்லது எனக்குப் பிச்சை கொடுப்பதுபோல் காரூவகியை என்னிடம் கொடுத்துவிட்டுப் பின்னர் உன் தந்திர உபாயங்களால் ரகசியமாக அவள் உயிரை அழித்து விடுவாயா? ஒருவேளை இதுவும் உன் தந்திர உபாயங்களில் ஒன்றா?"

"உபகுப்தரே! நான் குயுக்தி முறைகளையும், தந்திர உபாயங்களையும் உபயோகிப்பவன்தான்! ஆனால், அரண்மனை அந்தப்புரங்களில், அரசர்கள் சபைகளில்! அதிகாரிகளின் சின்னங்களில்! ஆனால் என்னைப் போன்ற தத்துவ சாஸ்திரியாகிய உம்மிடமல்ல! உபகுப்தரே, இந்தச் சாணக்கியனின் குயுக்தியின் பகடைகளை அரசியல் சொக்கட்டானில்தான் உருட்டுவான்! ஓயாமல் சூழ்ச்சியின் சிக்கல்களைப் பின்னும் அரசியல் சமூக வட்டாரங்களில்தான் இந்தச் சாணக்கியன் பொய்யைச் சத்தியம்போல் திருத்திக் காட்டுவான். ஆனால் எந்த ஆசையும் இல்லாமல் திரியும் பரோபகார பிக்ஷுவான உம்மிடம் சத்தியத்தைத்தான் பேச விரும்புவான் சாணக்கியன்! உபகுப்தரே! காரூவகியை, உமக்குப் பிச்சை கொடுத்துவிட்டேன். அவள் உயிருக்கு என்னாலோ என் சம்பந்தப்பட்ட அதிகாரிகளாலோ, என் சம்பந்தப்பட்ட எவராலும், எந்தவிதமான ஆபத்தும் நேரிடாது. அந்த அபலை காரூவகியை அக்கினி பகவானுக்குத் தானம் கொடுப்பதை விட உமக்கு தானம் கொடுத்தால் உலகம் என்னைப் போற்றும்! பிச்சையை வாங்கிக் கொள்ளும்!"

"சாணக்கியா, மற்றும் ஒரு கோரிக்கை. எந்த அசோகன் அவளைத் தூக்கிக் கொண்டு போய்க் கம்பத்தில் கட்டித் தீ வைத்தானோ, அந்த அசோகனே அவளை விடுவித்துக் கொண்டு வந்து என்னிடம் கொடுக்க வேண்டும்!" என்று புன்னகை பூத்தார் உபகுப்தர். சாணக்கியரும் புன்னகை செய்தார்.

அசோகனின் முகம் ஆனந்தத்தால் பிரகாசித்தது. ஆவலோடு காரூவகியை விடுவிக்க எரியும் தீக்குவியற்குள் பாய்ந்தோடி புகை மண்டலத்திற்குள் மறைந்தான்.

அங்கிருந்த அதிகாரிகள், ஜனங்கள் அனைவரும் கற்சிலைகளாகச் சமைந்து விட்டார்கள். ஆனால் சுசீமனோ தீயை மிதித்தவன்போல் துள்ளி ஆவேசத்தோடு எழுந்தான்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

"பயங்கர ராஜத் துரோகியான காரூவகியை விடுவிப்பது, கூடவே கூடாது! ரத்து செய்ய முடியாத ராஜாங்கக் கட்டளை என்ன ஆவது? அசோகா! நில்!! இல்லையெனில் வீரர்களின் அம்புக்கு இரையாவாய்" என்று கத்திவிட்டுச் சாணக்கியரை நோக்கி ஆத்திரத்தோடு ஓடி வந்தான் சுசீமன்.

அத்தியாயம் 7

## அறிவின் வழி

**"கற்றுத் தேர்ந்த, அறிவாளி ஒருவன், தன் கருத்து முயற்சியினால் சோம்பேறித்தனத்தின் பிரமைகளை விரட்டித் தள்ளிவிட்டு, அறிவு எனும் கோபுரத்தின் உச்சிமீது ஏறி நிற்கும் போது கீழே உள்ள முட்டாள்களைப் பார்க்கிறான். கீழே சமவெளியில் ஆறாக் கவலைகளுடன் பாடுபட்டுக் கொண்டிருக்கும் ஜனக் கும்பலை மலை உச்சிமீது ஏறி நிற்பவன் அமைதியாகப் பார்ப்பது போலவே அவன் மற்றவர்களைப் பார்க்கிறான்."**

—தம்ம பதம் 28

சாணக்கியர் புருவத்தை நெறித்தார்.

சுசீமனின் குரல் கரகரத்தது.

"கௌடில்ய சிரேஷ்டரே! பூஜ்யரே! அந்தப் பௌத்த துறவி கேட்டாரென்று, ஒரு சதிகாரியைத் தானம் கொடுத்து விட்டீர்களே? அது எவ்வளவு பெரிய அரசியல் விவகாரத்தைக் கிளப்பக்கூடிய சிக்கல் தெரியுமா? பிக்ஷுவின் பிச்சைப் பாத்திரத்தில் விட்டெறியக்கூடிய பொருளா அந்தச் சதிகாரி?" என்று கேட்டான் மூத்த ராஜகுமாரன் சுசீமன்.

"சுசீமா! அந்தப் புத்த பிக்ஷு, நான் பல நாட்களாகக் கனவு கண்டு வளர்த்து வந்த உங்கள் மௌரிய சாம்ராஜ்யத்தின் முடியைக் கேட்டால்கூட அந்தப் பிக்ஷைப் பாத்திரத்தில் விட்டெறிந்திருப்பேன். மகதத்தின் தலைநகரான அழகிய பாடலிபுரத்தைக் கேட்டாலும் அந்தப் பிக்ஷைப் பாத்திரத்தில் செல்லா நாணயம்போல் வீசியெறிந்திருப்பேன்!" என்று கம்பீரமாகச் சிரித்தார் சாணக்கியர்.

"கேவலம் அந்த புத்த துறவிக்கா?"

"சுசீமா, உன்னைப் போல் ஒரு ராஜகுமாரனோ, உன் தந்தையைப்போல் ஒரு ராஜாதிராஜனோ, அந்த பிக்ஷைப் பாத்திரத்தை என்முன் நீட்டியிருந்தால், அவர்களை உதாசீனம் செய்திருப்பேன். ஆனால் என் எதிரே நிற்பவர் யார் தெரியுமா? என்னைப் போன்ற சூழ்ச்சித் திறம் படைத்தவர்களின் அரசியல் பகடைகளால் ராஜாக்களாகக் கொலுவீற்றிருக்கும் உங்களைப் போன்ற ராஜவம்சத்தவரல்ல! என்னைப் போன்ற முற்றும் துறந்த தத்துவ சாஸ்திரி!"

"பூஜ்யரே! தத்துவ சாஸ்திரி அவ்வளவு விலைமதிப்பற்ற சிரேஷ்டரா?"

"ஆம் சுசீமா! நீ சிறுவன்! உனக்குத் தெரியாது. உன் தந்தை பிந்துசார மன்னரைப் போய்க் கேட்டுப்பார். யவனர் தேறலும், கிரேக்க அத்திப் பழமும், ஒரு தத்துவ சாஸ்திரியும் இம் மூன்றும் என்ன விலையானாலும் வாங்கியனுப்பும்படி உன் தந்தை பிந்துசார மன்னன் சிரியா மன்னனுக்கு ஒருமுறை —கிதம் எழுதினான். அதற்குச் சிரியா மன்னன், யவனர் தேறல், கிரேக்க அத்திப்பழம் இரண்டை மட்டும் வாங்கி அனுப்பிவிட்டு,

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

தத்துவ சாஸ்திரிகளை விலைக்கு வாங்கும் வழக்கம் எங்கள் நாட்டிலில்லை என்று பதில் எழுதினான். தத்துவ சாஸ்திரிகள் இல்லாத அரசியல் ஏகச்சக்ர வண்டிபோல் ஒழுங்காக ஓடாது!"

"கௌடில்ய சிரேஷ்ட! காரூவகிக்கு இடப்பட்ட மரண தண்டனை எவராலும் ரத்து செய்ய முடியாத ராஜ ஆக்ஞைப் பத்திரத்தில் எழுதப் பெற்றதாகும்!"

"சுசீமா! இந்தச் சாணக்கியனாலும் ரத்துசெய்ய முடியாத ஒரு ராஜ ஆக்ஞைப் பத்திரம் இப் புவியில் உண்டா? அறிவற்ற சிறுவனே! ராஜாக்கள் என்பவர் யார்? இந்தச் சாணக்கியனின் சூழ்ச்சி சூத்திரக் கயிற்றிலாடும் அரசியல் பொம்மைகள். சுசீமா, உனக்கு மௌரிய ராஜ வம்ச சரித்திரம் தெரியாது. மரணப் படுக்கையில் கிடக்கும் உன் தந்தையைப் போய்க் கேட்டுப்பார். சந்திரகிரியிலுள்ள சவக் குழியைத் தோண்டி, புதையுண்டு கிடக்கும் முதல் மௌரிய மன்னன் சந்திரகுப்தனின் எலும்புக் கூட்டைக் கேட்டுப் பார்! அவர்கள் சொல்லுவார்கள் சாணக்கியன் யார் என்று! கடைசி நந்த மன்னர்களைக் கொன்று, எங்கோ இடையனாய் ஆடு, மாடுகள் மேய்த்துக் கொண்டிருந்த சந்திரகுப்தனை அழைத்து வந்து மகதத்தின் சிம்மாசனத்தில் ஏற்றி முடிசூட்டி மன்னனாக்கியவன் சாணக்கியன்! நாடுகளை விஸ்தரித்துச் சந்திரகுப்தனையும் ஏக ராஜ்ய சக்கரவர்த்தியாக்கியவன் சாணக்கியன்.

பதினாறு மண்டலத் தலைவர்களின் சக்தியை அழித்து, மௌரிய மன்னரின் அதிகாரங்களைப் பெருக்கியவன் சாணக்கியன். அர்த்தசாஸ்திரம் எழுதி அரசியல் நீதிகளை வகுத்துப் பார்வைக்கு ஜனநாயகம் என்ற பட்டுத் திரையாகக் காட்டி, ஜனங்களுக்காக ஜனங்களால் ஆளப்படும் ராஜ்யம்தான் என்று சொல்லிக்கொண்டே, நுணுக்கமான அம்சங்களில் முடியரசின் யதேச்சாதிகாரத்தைப் பெருக்கும் அரசியல் திட்டத்தைத் தயாரித்துக் கொடுத்தவன் சாணக்கியன்! என்னிடம் வந்து எவராலும் ரத்து செய்ய முடியாத ராஜாக்ஞை என்றா பேசுகிறாய்? நீ சிறுவன். சிந்திக்கச் சக்தியற்றவன்! உன் மௌரிய ராஜ வம்ச சரித்திரத்தை எடுத்துப் பார். உன் தந்தையும், உன் பாட்டனும், உன் முப்பாட்டனும், ராஜாதி ராஜர்களாய் அலங்காரமான ஆடைகள் புனைந்து கொலு வீற்றிருப்பார்கள். ஆனால் அவர்களுக்குப் பின்னால் சூத்திரக் கயிறாயிருந்து ஆட்டிக் கொண்டிருந்தவன் இந்தச் சாணக்கியன்! சுசீமா! அறிவுத் திறனால் சாணக்கியன் ஆட்டிய பொம்மலாட்டந் தான் உங்கள் மௌரிய வம்சத்தின் அதிகாரச் சரித்திரம்."

"பூஜ்யரே! ராஜாவின் ஆக்ஞையை ரத்துச் செய்ய உங்களுக்கு உரிமை இல்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால் நீதியால் கொடுக்கப்பட்ட ஒரு தண்டனையை ரத்து செய்வதற்கு முன்னால் நீதி சபையைக் கூட்ட வேண்டும், ராஜ அங்கீகாரத்தோடு கூடிய பொது ஜன ஆதரவைத் தேட முயல வேண்டும் என்ற நீதியைத்தான் தங்களுக்கு நினைவூட்டினேன்."

"சுசீமா! அர்த்த சாஸ்திரமும், நியாய பாஷ்யமும் எழுதிய சாணக்கியனிடமா நீதியை எடுத்துச் சொல்கிறாய்? சாணக்கியன் அரசியல் விவகாரத்தில் ஒரு காரியத்தைச் செய்கிறான் என்றால் அதற்கு நீதியின் விதி இருக்கிறதா என்று எவரும் நியாய சாஸ்திரங்களைப் புரட்டிப் பார்க்கமாட்டார்கள். சாணக்கியன் நாக்குத்தான் நீதி சாஸ்திரம்! சாணக்கியன் வாக்குத்தான் அரசியல் வேதம்!"

"பூஜ்யரே! நம் தக்ஷசீல அதிகாரி தேவசேனனைக் கொலை செய்தவனுக்கு உதவிய அந்தச் சதிகாரியை விடுவித்தால் போர் வீரர்களும் அதிகாரிகளும் சீறமாட்டார்களா? படைப் பலத்தில் குழப்பம் நேரிட்டால் என்ன செய்வது?"

"சுசீமா! மகத சாம்ராஜ்யத்தின் பலம், ரத, கஜ, துரக, பதாதி சைன்யங்களிலா இருக்கிறதென்று நினைக்கிறாய்? வியூக்தி வெற்றி படைப் பலத்திலில்லை. புத்தி பலத்தில் இருக்கிறது. பிரும்மாண்டமான யுக்த சேனைகள் உள்ள அலெக்சாந்தரும் நெருங்க அஞ்சிய மகதத்தின் நந்த மன்னர்களை முறியடித்து, இடையனாகத் திரிந்த உன் பாட்டன் சந்திரகுப்தனுக்கு முடிசூட்டினேனே. அது எதனால் என்று நினைக்கிறாய்? ஆயுதங்களினாலா? சேனாதிபதியாகச் சதுரங்க சேனைகளை நடத்திச் சென்றா? இல்லை; சாணக்கியனுடைய இந்த மதியூகம்! உன் தந்தை உல்லாசமாக ஏறிப் பவனி செல்கிறாரே முத்துச் சிவிகை, அது எவ்வளவு பெரிய

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

படையும் புகமுடியாத தமிழ்ப் பாண்டி நாட்டில் இருந்து வந்த விலைமதிப்பற்ற கபாட முத்துக்களால் செய்யப்பட்ட முத்துச் சிவிகை; அச்சிவிகை உங்கள் வம்சத்திற்கு எப்படிக் கிடைத்தது. தெரியுமா?

என் மதியூகத்தால்! வடநாட்டோடு வணிகக் கலாச்சாரத் தொடர்பு கொள்ளுங்கள் என்று சொல்லி, பாண்டி நாட்டு முத்துக்களைக் கொண்டுவந்து, முத்துச்சிவிகையை உங்களுக்குச் செய்து கொடுத்தேன். இல்லையென்றால், தமிழ் நாட்டிலிருந்து ஒரு முத்தைப்பெற ஓராயிரம் மகத வீரர்கள் வீதம் நீங்கள் பலி கொடுக்க நேர்ந்திருக்கும்! மிலேச்ச நாட்டான் செலூக்கஸ் பெரும் படையுடன் வந்து என் சந்திரகுப்தனிடமிருந்து உங்கள் மௌரிய சாம்ராஜ்யத்தைக் கவர நினைத்தானே, அதை எவ்விதம் சமாளித்தேன்? சதுரங்கப் படைகளை நடத்திப் போர் தொடுத்தல்ல! என் மதியூகத்தால்! யுத்தத்திற்குப் பிரயோசனமில்லாமல் மகதத்தின் கொட்டிலில் அடைபட்டுக் கிடந்த ஐந்நூறு மெலிந்த யானைகளைப் பரிசாகக் கொடுத்து செலூக்கஸின் மகளைச் சந்திரகுப்தனுக்கு மண முடித்தேன். அதோடு எந்த இந்திய மன்னருக்கும் கிடைக்காத ஆப்கானிஸ்தானம் பலுசிஸ்தானம் இரண்டையும் சீதனமாக வாங்கி மௌரிய சாம்ராஜ்யத்தை விஸ்தரித்தேன். இவ்வளவும் எதற்காகச் செய்தேன்? சிறுவன், நீ எனக்கு ராஜ ஆக்ஞையை எடுத்துச் சொல்லவும் என் எண்ணத்திற்கு மாறாகவும் நிற்கவா? சுசீமா? சாணக்கியனோடு வாக்குவாதம் செய்ய எந்த மாபண்டிதனும் அஞ்சுவான். சாணக்கியன் எதிரே நின்று பேச உலகத்தைக் கட்டியாளும் எந்த மகா வீரனும் நடுநடுங்குவான். அரசியல் தொட்டிலில் குடிமக்களைக் குழந்தைகளாக்கித் தாலாட்டித் தூங்க வைக்கும் ராஜதந்திரிகளும் சாணக்கியன் முன் ராஜ்ய விவகாரம் பேசக் கூசுவார்கள்!

சிறுவன் நீ....தொட்டிலில் தோழிகள் தாலாட்டித் தூங்கவைக்கும் சிறுவன் நீ! என் முன் நின்று ராஜ்ஜிய விவகாரம் பேசுகிறாய்! அடே சுசீமா, சரித்திரத்தில் இணையற்ற சாம்ராஜ்யாதிபதியாக விளங்கிய உன் முன்னோன் சந்திரகுப்தனும் சாணக்கியன் எதிரே நின்று எந்த விஷயத்தையும் பேசியதில்லையடா! சாணக்கியன் பாதங்களைத் தொட்டு நமஸ்கரித்துவிட்டே எந்த ராஜ்ய விஷயத்தையும் தயங்கித் தயங்கிச் சொல்வான். நீயோ......? நான் உண்டு உமிழ்ந்த அதிகார எச்சிலை அள்ளி விழுங்கக் காத்திருக்கும் ராஜவம்ச நாய் நீ! என் முன் நின்று சிறிதும் கூசாமல் தர்க்கம் புரிகிறாய்!" என்று உறுமினார் சாணக்கியர்.

"இல்லை, இல்லை, பூஜ்யரே! இருந்தாலும் ..........இருந்தாலும்......" என்று இழுத்தான் சுசீமன் நடுங்கிக்கொண்டே.

"அடே சுசீமா! என் கதை உனக்குத் தெரியாது. எவருக்குமே தெரியாது. என் புத்திக் கூர்மையைக் கண்டு இந்த வடநாடு மட்டுமல்ல, சிரியா கிரேக்கம் முதலான மிலேச்ச நாடுகளும் வியக்கிறதே; இந்தச் சாணக்கியன் எங்கே பிறந்தான் தெரியுமா? ஆட்டு மந்தைகள்போல் ஒருவன் காட்டிய வழியிலே ஓடும் இந்த வட மகத நாட்டிலல்ல! புத்திக் கூர்மைகளுக்கு பிறப்பிடமான தென்னாட்டு மண்ணில்! சுசீமா, நான் தென்னாட்டவன். கேரளத்தில் பிறந்தேன். தந்தையிருந்தும் தாயோடு அனாதையாக அலைந்தேன். பிழைப்பதற்காக மாந்திரிகங்களைக் கற்றேன். பிறவியிலே அளவு மீறிய அறிவோடு பிறந்தேன். அறிவுக்கு எவ்வளவு சக்தி உண்டு என்று காண ஆசைப்பட்டேன். குயுக்தியைப் பெருக்கும் சாஸ்திரத்தைப் படித்தேன். ஆனால் சூழ்ச்சியை நம்புவதோ, சூழ்ச்சிக்கு இடங்கொடுப்பதோ தென்னாடல்ல; அது குயுக்தி முறைகளை வெறுத்து, நேர்மைக்கு இடங்கொடுக்கும் நாடு என்று தெரிந்ததும், என் சூழ்ச்சிப்பகடைகளை உருட்டி விளையாடி என் புத்தி கூர்மையைப் பரீக்ஷிக்க இந்நாடு வந்தேன்.

சூழ்ச்சிகளையும் தந்திரங்களையும் சொக்கட்டானாக ஆடுவதில் கைதேர்ந்த நாடு என்ற வடதிசை மகதத்தை ஒரு கை பார்க்கலாம் என்ற ஆசையால்! ஒருநாளே அன்ன சத்திரத்திலே தங்கியிருந்தேன். ஆண்டியாக! அந்தணச் சின்னங்களையும் அறிவு தேஜைசையும் தவிரப் பிக்ஷாண்டியாக! அப்போது சந்திரகுப்தன் அன்ன சத்திரத்தில் அரசர்கள் தங்கும் ஆசனத்தை நான் இளைப்பாறத் தந்தான். அது கண்டு பொறுக்காத மகத மன்னன் தனநந்தன் என் சிகையைப் பிடித்து இழுத்துக் கீழே தள்ளினான். அவமரியாதை செய்தான். ஆத்திரமுண்டேன். எந்தச் சாணக்கியத் தந்திரமென்ற சொக்கட்டானை ஆடவேண்டுமென்று ஆசையோடு வந்தேனோ, அந்தச் சொக்கட்டானை மகதத்தின் அரசியல் மேடையிலேயே விளையாடத் தீர்மானித்து விட்டேன்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

அன்று மகத மன்னன் அவிழ்த்த என் சிகையை, சந்திரகுப்தனுக்கு முடிசூட்டி நந்த வம்சத்தையே கருவறுக்கும் வரை முடிவதில்லை என்ற சபதம் கொண்டேன். அதன் விளைவாக உங்களுக்கு இந்தப் பெரிய மௌரிய சாம்ராஜ்யம் கிடைத்தது. மறுபடியும் என் சிகையை அவிழ்க்கட்டுமா? என் சிகை அவிழ்ந்தால் உங்கள் மௌரிய சாம்ராஜ்யம் சிதைந்து போகும்! அரசியல் சதுரங்கத்தில் நான் ஒரு காயை நகர்த்தினால் பதினைந்து காய்களும் ராஜாக்காயும் வெட்டுப்படும். சாணக்கியனின் விருப்பத்திற்குக் குறுக்கே எவர் நின்றாலும் அவர் வம்சமே நிர்மூலமாகிவிடும். ஒரு முறை இந்தச் சாணக்கியன் காலில் தரையிலிருந்த அற்பப் புல் தடுக்கியது. அந்தப் புல்லையே தரையைவிட்டுக் கெல்லி எறிந்தான் சாணக்கியன். அந்தக் கதையை நினைத்துப் பார்!"

"பூஜ்யரே! கௌடில்ய தேவா! மகா ஞானியே! நீங்கள் மகதத்தின் மாமந்திரி! சாம்ராஜ்யத்தின் மேன்மையைக் கருதுங்கள். ராஜ கௌரவம் உடைந்து போகாமல் பாதுகாத்திடுங்கள்!"

"சுசீமா! சாம்ராஜ்யங்கள் என்பவை அறிஞர்கள் உங்களுக்குச் செய்து போடும் களிமண் உருண்டைகள்! அரசியல் நீதிகள் என்பவை அறிஞர்கள் ஜனங்களுக்குச் செய்து கொடுக்கும் வர்ணக் கண்ணாடிகள்! இவைகளெல்லாம் என் போன்ற ஞான தாகம் உள்ளவர்களுக்கு வெறும் ஒரு பொழுதுபோக்கு விளையாட்டு, என்னைப் போன்ற துறவிகளுக்குத் தத்துவ விசாரம் ஒன்றிலேயே மனம் லயிக்கும். அதனால்தான் இந்தப் பிக்ஷுவை ராஜாக்களைவிட மேன்மையாகக் கருதுகிறேன். சுசீமா சொக்கட்டான் ஆடுபவன், காய்களை நகர்த்தி ஆட்டம் விளையாட ஆசைப்படுவானே தவிர, சொக்கட்டான் காய்கள் தனக்கே வேண்டுமென்று எடுத்துக் கொள்வதில்லை. ஆட்டம் ஆடி முடிந்ததும், அல்லது சிறிது அலுப்புத் தட்டிவிட்டாலும் சொக்கட்டானைத் தூக்கி எறிந்துவிட்டுப் போய்விடுவான்.

அதைப்போல்தான் என்னைப் போன்ற அறிவாளிகளுக்கு அரசியல் ஒரு சொக்கட்டான். அலுத்துப் போனால் எந்தக் கணத்திலும் அரசியல் மேடையை விட்டு மறைந்து விடுவேன். ஒன்றுமில்லாத அனாதைத் துறவியாக இந்த நாட்டிற்கு வந்தேன். ஒன்றுமில்லாத அனாதைத் துறவியாக இந்த நாட்டை விட்டுப் போனாலும் போய் விடுவேன். சுசீமா, இந்தச் சாணக்கியன் ஒன்றின் மீதும் பற்றில்லாத துறவியாக, பாதரக்ஷைகள் கம்பீரமாக ஒலிக்க ஏட்டுச் சுவடிகளை எடுத்துக் கொண்டு ராஜ முடிகளின்மீது நடந்து கொண்டே தன் ஓலைக் குடிசைக்குப் போய் ஒரு நாள் மறைந்துவிடப் போகிறான்!" என்று பெருமூச்செறிந்தார் சாணக்கியர்.

சுசீமன் முகத்தைத் தாழ்த்திப் புருவத்தை நெறித்துக் கொண்டான்.

பிறகு சுசீமன் மெல்ல அவரை நோக்கி, "இல்லை பூஜ்யரே! அந்தச் சதிகாரி உங்கள் அபிமானத்திற்குரிய தேவசேனன் கொலைக்கு உடந்தையாய் இருந்தவள், அவளையா விடுதலை செய்யப் போகிறீர்கள்? அவளை பிக்ஷு கேட்பவரோ உங்கள் சநாதன தர்மக் கொள்கைகள் சிலவற்றை எதிர்ப்பவர். அவருக்கா இவ்வளவு பெரிய பிக்ஷை கொடுக்கப் போகிறீர்கள்?"

"சுசீமா, வெறும் சோமநாதனாய்த் தெருக்களில் அநாதையாய்த் திரிந்துகொண்டிருந்த எனக்குக் கௌடில்ய சாணக்கியன் மல்லிநாதன் என்ற பட்டங்கள் கொடுத்தார்கள். அப்போதும் நான் மகிழ்ந்து போகவில்லை. அன்ன சத்திரத்திலுள்ள அரசர் ஆசனத்தில் அமரவும் அருகதையற்றவன் என்று கீழே தள்ளப்பட்ட என் பாதங்களை மௌரிய சக்ரவர்த்திகள் பூ மலரால் அர்ச்சித்து நமஸ்கரித்தார்கள். அப்போதும் நான் மகிழ்ந்து போகவில்லை! காற்றும் நெருப்பும் போல் கடல் கடந்து வந்த அலெக்ஸாண்டர் கூட என்னைப் பார்க்க ஆசைப்பட்டு அழைப்பு அனுப்பினான். அப்போதும் நான் மகிழ்ந்து விடவில்லை.

ஆனால் என்னைப் போல் எந்தவித ஆசைகளும் அற்ற துறவி, என்னோடு சமமாகத் தத்துவ தர்க்கம் செய்யும் ஞானம் படைத்த இந்தப் பௌத்த உபகுப்தர் என்னிடம் வந்து பிக்ஷை கேட்டார். நான் மகிழ்ந்து போனேன். சுசீமா, நான் இவ்வளவு பெரிய அதிகாரச் செல்வாக்கிலிருந்தும் அதிகாரங்களை என் சொந்த நலனுக்கு உபயோகப்படுத்த ஆசைப் பட்டதேயில்லை. நானும் என் குடும்பங்களும் எந்தவித ஆசையும்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

அற்றவர்களடா! அரசியலில் சூத்திரக் கயிறாயிருந்தும் நான் நருமதா நதி தீரத்திலுள்ள ஓர் ஓலைக் குடிசையை என் இருப்பிடமாகக் கொண்டேன்.

நான் ஆசைப்பட்டிருந்தால் சந்திரகுப்தனுடைய ராஜ சபையை என் பசுமாடு கட்டும் கொட்டடியாக உபயோகப்படுத்தியிருக்க முடியும். ஆனால் நான் ஆசைப்படவில்லை! நானும் என் மனைவியும் என் இரு குழந்தைகளும் வாழ ஓர் ஓலைக்குடிசையே போதும் என்று இருந்துவிட்டேன். மாமந்திரியாய் இருந்தும் அறுபது பொன் சம்பளம் போதுமென்று அதற்குள்ளேயே என் வாழ்க்கைச் செலவுகளை அடக்கிக்கொண்டேன். நான் ஆசைப்பட்டிருந்தால் சாம்ராஜ்யத்தின் பொக்கிஷத்தையே, என் ஓலைக் குடிசையைச் சுற்றி இறைத்திருக்கமுடியும்!

ராஜதந்திரியின் மனைவியாயிருந்தும் என் தர்மபத்தினி கௌதமி ஒருவேளை உணவு சமைப்பதற்கு மண்பாண்டங்களையே உபயோகப் படுத்தினாள். நான் ஆசைப்பட்டிருந்தால் சக்ரவர்த்திகளுடைய பட்டமகிஷிகளின் வைர ஹாரங்கள் அனைத்தையும் சமையல் பாத்திரங்களாக என் பத்தினிக்குச் செய்துகொடுத்திருக்க முடியும்! ஆனால் நான் ஆசைப்படவில்லை! என் மகள் ராஜராஜேஸ்வரியை ஓர் ஏழைச் சிறுவனுக்கு மணமுடித்து, ஓர் ஏழை வீட்டுக் கல்யாணம் போல் நடத்தினேன். நான் ஆசைப்பட்டு இருந்தால், இமயந்தொட்டுக் கன்னியாகுமாரிவரை எந்தச் சக்ரவர்த்திக்கும் நடக்காத கல்யாணம் போல் என் மகளின் கல்யாணத்தை நடத்தியிருக்க முடியும்! ஆனால் நான் ஆசைப்படவில்லை! இந்தச் சாணக்கியன் எதற்கும் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஆசைப்பட்டதேயில்லையடா. ஆனால் இந்த பிக்ஷு கேட்கும் காரூவகியின் உயிர்ப் பிச்சையைக் கொடுக்க ஆசைப்படுகிறேன்.

சுசீமா, சாணக்கியரின் அறிவை உலகம் முழுவதும் வியக்கிறது! ஆனால் அறிவால் பயனில்லை என்று சொன்னவர் இந்தப் புத்த பிக்ஷு ஒருவர்தான். அன்பிற்கு இருக்கும் அமைதியும் சக்தியும் புத்தி சாதுர்யத்திற்கு இல்லை என்று இவர் சொல்லிவிட்டார். ஓயாமல் அறிவுச் சதுரங்கத்தில் விளையாடி அலுத்துப் போன என் உள்ளத்தில் ஒளிந்து கிடக்கும் அந்த அன்புத் தாகத்தை இந்த உபகுப்தர் வெளிக் கொணர்ந்து விட்டார். இப்படிச் சாணக்கியன் மனம் திறந்து பேசும் காட்சியைச் சாணக்கியனின் சரித்திரத்திலேயே எவரும் பார்த்திருக்க மாட்டார்கள். அப்படிப்பட்ட சாதனையைப் புரிந்தார் இந்த மகான். உண்மையில் நான் எதற்காகவாவது ஆசைப்பட்டிருந்தால் இப்பிச்சை கொடுக்கும் இச்சந்தர்ப்பத்தில் தான்!" என்று உணர்ச்சி வசத்தில் கண்ணீர் மல்கப் பேசினார் சாணக்கியர்.

"சாஸ்திர ஞான பண்டிதரே! அந்தச் சதிகாரி காரூவகியை நம் அசோகன் உள்ளூரக் காதலிக்கிறான். புத்த மதக் கொள்கைகளைப் பின்பற்றும் அவளை நீங்கள் விடுவித்தால், அவள் மயக்கத்தில் இருக்கும் அசோகனின் மூலம் நம் மகத அரசியலில் பௌத்தக் கொள்கைகளுக்குச் செல்வாக்கு ஏற்படும். தங்களுக்குத் தெரியாதது எதுவுமில்லை!" என்று சுசீமன் தன் கடைசிச் சூழ்ச்சிக் காயை உருட்டினான்.

ஆனால் சாணக்கியரோ சுசீமனின் வார்த்தைகளைக் கவனிக்கவில்லை. அந்த ஞானியின் பார்வை முழுவதும் எதிரே எரியும் விறகுக் குவியல் மீதே படிந்திருந்தது.

எரியும் விறகுக் குவியலின் நடுவே, கம்பத்திலிருந்து காரூவகியைக் கட்டியிருக்கும் கயிறுகளை அவிழ்த்து, அசோகன் அவளை அப்படியே அன்போடு வாரியணைத்துக் கொண்டான்! காரூவகியும் அன்பணைப்பில் ஸ்மரணையற்று நின்றாள். சுற்றிலும் எரியும் தீயின் கொதிப்பு அவர்களுக்குத் தட்டுப்படவே இல்லை. காரூவகி அசோகனின் முகத்தோடு முகத்தை ஒட்டிக் கண்ணிமைகள் மூடி மெய்மறந்திருந்தாள். அந்த இரண்டு முகங்களும், சிவந்த தீ வெளிச்சத்தில் இரண்டு அழகிய செந்தாமரைகள் போல் தென்பட்டன.

சாணக்கியரின் கண்களில் நீர் துளித்தது. "சுசீமா, அதோ எரியும் விறகுக் குவியலில் பார், அசோகனும் காரூவகியும் ஒருவரையொருவர் அணைத்துக்கொண்டு மெய்மறந்து நிற்கும் நிலையை! அன்பில் ஸ்மரணையற்று நிற்கும் அவர்களுக்கு, சுற்றிலும் எரியும் தீயின் தகிப்பே தெரியவில்லை. சுற்றிலும் படைகளும் ராஜப் பிரதானிகளும் துறவிகளும் சூழ்ந்து நிற்கிறார்கள் என்ற நினைப்பே அவர்களுக்கு இல்லை. இத்தகைய அன்பின்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

காட்சியை உங்கள் அரண்மனை அந்தப்புரங்களில் என்றாவது நீ கண்டதுண்டா? இதுபோன்ற மெய்மறந்த அணைப்பை ஆடம்பரமான மலர் மஞ்சங்களிலும் அழகிய உப்பரிகைகளிலும் பார்த்தது உண்டா?

இப்போது அசோகனிடம் போய், காரூவகி வேண்டுமா, மகத சாம்ராஜ்ய முடி வேண்டுமா என்று கேள்! காரூவகிதான் வேண்டும் என்பான். நான் என் அறிவுத் திறனால் சிருஷ்டித்த இவ்வளவு பெரிய மகத சாம்ராஜ்ய முடியையும், காரூவகியின் காதல்முன், துரும்பாக மதித்துவிடுவான்! இத்தகைய அற்புதமான காதலை, காவியங்களில் படித்ததைத் தவிர, கண்முன்னால் நீ நிதர்சனமாய்க் கண்டதுண்டா? சுசீமா, என்னைப் பார்த்து நகைப்பாய்! நானும் ஒரு காலத்தில் காதலுணர்ச்சியைப் பார்த்து எள்ளி நகைத்தேன்.

ஆனால், வாழ்வுக் கரும்பின் நுனிக்கு வந்த பிறகு வாடிய இந்த முதுமையில் தள்ளாடும்போதுதான், காதல் எத்தகைய உன்னத உணர்ச்சி என்பதை உணர்கிறேன்.

சுசீமா, நான் கௌதமி என்ற அழகிய பெண்ணை மணந்தேன்! எந்தத் தேசத்து ராஜகுமாரிகளின் முகத்திலும் காணமுடியாத அற்புதமான களை என் கௌதமியின் முகத்தில் இருந்தது. அவள் அழகின் தேவதையாக என் குடிசைக்கு வந்தாள். ஆனால் அந்த அற்புதமான யௌவன வயதில், அவள் அழகை அள்ளிப் பருக எனக்கு அவகாசமில்லை! அறிவு, அரசியல் விவகாரம், சாஸ்திர ஞானம் என்ற சிந்தனைகளிலே ஓயாமல் மூழ்கியிருந்த எனக்கு என் சொந்த மனைவியின் அழகை ஒருகணம் உற்றுப் பார்த்து ரசிக்கவும் அவகாசமில்லாமல் போய்விட்டது.

என் கௌதமி அழகுப் பதுமையாய் அந்தரங்கம் பேச என் முன்னால் வந்து நிற்பாள். குழந்தைகளை எடுத்துக் கொண்டு கொஞ்சி விளையாட வருவாள். ஆனால் அப்போது என் சிந்தனை முழுவதும் ஓர் அரசியல் சிக்கலை அவிழ்ப்பதிலே முனைந்திருக்கும். என் அறிவே என் வாழ்வின் சுவைகளை அநுபவிக்க முடியாமல் செய்துவிட்டது. என் அறிவு என் இதயத்தின் உணர்ச்சிகளைத் தின்றுவிட்டது! இந்த அறிவால் நான் கண்ட பலன்தான் என்ன? வாழ்வின் ரசனையை இழந்தேன். இப்போது முதுமையால் வாடிய பூப்போல் நிற்கும் கௌதமியைப் பார்த்து உள்ளம் உருகுகிறேன்!...

"சுசீமா! சாணக்கியன் இதுவரை அரசியல் சதுரங்கத்தில் தன் இதயத்தை இழந்தது போதும்! உணர்ச்சிகளுக்குப் பிரதானம் கொடுக்கக்கூடாது என்று சொல்லிக் காதலுணர்ச்சியை எள்ளி நகையாடி, இரு உள்ளங்களைப் பிணைக்க வேண்டிய திருமண லக்ஷியங்களை இரு ராஜ்யங்களைப் பிணைக்கும் ராஜதந்திரக் கயிறாக உபயோகித்து விளையாடிய வியவகாரங்கள் போதும்! அசோகன்—காரூவகியின் காதலை நிறைவேற்றுவதெனத் தீர்மானித்துவிட்டேன்!" என்று அமர்ந்தார் சாணக்கியர்.

அப்போது விறகுக்குவியலின் புகை மண்டலத்திலிருந்து, அசோகன் காரூவகியைத் தூக்கிக் கொண்டு வந்து உபகுப்தர் முன் நிறுத்தினான். அசோகன் முகத்திலும், காரூவகியின் முகத்திலும் இன்னதென்று விவரிக்க முடியாத ஒரு குதூகல வெள்ளம் பொங்கித் ததும்பியது. உபகுப்தர் புன்னகை புரிந்தார். சாணக்கியரும் உள்ளம் நிறைந்த புன்னகை புரிந்தார்.

அசோகன், சாணக்கியரின் பாதங்களையும் உபகுப்தரின் பாதங்களையும் தொட்டு நமஸ்கரித்துவிட்டு உபகுப்தரை நெருங்கி, "பௌத்த சிரோன்மணியே! இந்தக் காரூவகி, என் காதலி, இந்த மூன்று தினங்களுக்குள் என் உள்ளத்திலும் உணர்விலும் வளர்ந்து என் எண்ணங்கள், லக்ஷியங்கள், கனவுகள் அனைத்திலும் பிரிக்க முடியாத காதலியாய் வியாபித்துவிட்டாள். இவளை மணந்து என் மகிஷியாக்கிக்கொள்ள விரும்புகிறேன். உபகுப்தரே, அனுமதியுங்கள்!" என்றான் அசோகன், வெட்கமும் ஆசையும் உணர்ச்சிக் கண்ணீரும் மருவ. உபகுப்தர் இலேசாகச் சிரித்துவிட்டு முடியாது என்பது போல் தலையை ஆட்டினார். "அசோகா, உன் வேகத்தை நான் அறிவேன். ஒரு சாம்ராஜ்ய ராணி மணம் புரியும்போது தன் ராஜ்யத்தைவிட விஸ்தாரமான ராஜ்யமுள்ள ஒரு ராஜகுமாரனையே மணம் புரிவாள்!" என்று உபகுப்தர் சிரித்தார்.

"உபகுப்தரே, எனக்கு ஒன்றும் புரியவில்லையே?" என்றான் தடுமாறிக்கொண்டே அசோகன்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

"அசோகா, இவள் புத்த சாம்ராஜ்யத்தைப் போன்ற விஸ்தாரமான மற்றோர் சாம்ராஜ்யப் பிரஜையை மணப்பதுதான் கௌரவம் என்று கருதுவாள். என்று நீ எந்தக் காலத்திலும் எந்த மன்னர்களும் அடைய முடியாத பரந்த சாம்ராஜ்யத்தை அடைகிறாயோ, என்று உன் வாக்கு தமிழ் நாட்டிலும் செல்லுகிறதோ, என்று உலகம் முழுவதும் உன் செங்கோலைக் கேட்டுத் தலை வணங்குகிறதோ, என்று நீ சரித்திரத்தில் எவரும் காணமுடியாத சக்கரவர்த்தி ஸ்தானத்தை அடைகிறாயோ, என்று கவிகள் மட்டுமல்லாமல், புவி மன்னர்களும் பாமர மக்களும், உனக்குப் புகழ் மாலைகளைச் சூட்டுகிறார்களோ, என்று நீ சாம்ராஜ்யாதிபதியாக ஆனபிறகு தனி ஒருவனாகக் காவலாளிகள் இன்றி நாட்டின் எந்த இருண்ட மூலையிலும் நீ செல்ல முடியுமோ, அன்றுதான் நீ காரூவகியை மணக்கலாம்! அப்போதுதான் காரூவகி உன் அந்தப்புரத்தை அலங்கரிப்பாள். அதுவரையில் நீ இக் காரூவகியை நெருங்கவும் கூடாது!"

"உபகுப்தரே, பச்சாதாபம் உள்ளவரே! என்ன சொல்கிறீர்கள்? எவ்வளவோ அரசியல் சிக்கல்கள் அறுபட்டு எத்தனை வருஷங்கள் அதற்காகக் காத்திருக்க வேண்டுமோ? இவ்வளவு பெரிய நிபந்தனைகளை விதிக்கிறீர்களே?"

"அசோகா, எளிதில் கிடைக்கும் பொருளில் அதிகம் மோகமிராது. பல சிரமங்களுக்குட்பட்டுப் பல சாகசங்கள் புரிந்து பல வருடங்கள் காத்திருந்து கிடைக்கும் பொருள்தான் விலை மதிப்பற்றதாக விளங்கும். வாஞ்சையைத் தவிர வேறு எதையும் அறியாத இக் காரூவகியை விலை மதிப்பற்ற பொருளாக்க விரும்புகிறேன்! அதனால்தான் இந்த நிபந்தனை! அசோகா. உன்னால் இந்தப் பாரத வருஷத்தில் ஒரு புதிய சரித்திரம் உதயமாகப் போகிறது. அதற்கு இக் காரூவகியை ஒரு தூண்டுகோலாக உபயோகிக்க விரும்புகின்றேன். இப்போது எதுவும் உனக்குப் புரியாது! சமயம் வரும்போது நான் சொன்ன லக்ஷணங்களுடன் மகா சக்கரவர்த்தியாக நீ விளங்கும்போது, நானே இவளை அழைத்துவந்து உன்னிடம் சமர்ப்பிப்பேன்" என்று காரூவகியை அழைத்துக்கொண்டு கீழ்த்திசை அடிவானத்தில் போய் மறைந்தார் உபகுப்தர்.

அசோகன் உணர்ச்சிக் கடலில் தத்தளித்தவனாய் அந்தத் திசையையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

## அத்தியாயம் 8

## உண்மையான வெற்றி!

**"இந்த மண் பூமியையும், எமனின் மரண பூமியையும் கடவுளரின் தேவ பூமியையும் வெற்றி கொள்பவன் யார்? பழக்கமுள்ள புத்திசாலி சரியான புஷ்பத்தைக் கண்டுபிடித்து விடுவதுபோல, தெளிவாகக் காட்டப்பட்டுள்ள அறவழியைக் கண்டுபிடிப்பவன் யார்?"**

—தம்ம பதம் 44

பிரசவிக்கும் கன்னியின் கண்ணோரக் கன்னத் கதுப்புகள் போல் மேற்றிசை வானம் வெளுத்துக் கருமை படர்ந்தது.

அது கி.மு. 261ல் ஒரு நாள் மாலை.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

இளைய ராஜகுமாரன் அசோகன் மகத சாம்ராஜ்யத்தின் மௌரிய சக்ரவர்த்தியாக முடிசூடி எட்டு வருடங்கள் ஓடிவிட்டன. தந்தை பிந்துசார மன்னர் மரணக் குகையில் மறைந்ததும், அவருடைய அஸ்தமனத்தில் மகத சிம்மாசனத்தைச் சுற்றி அஸ்தமன வானச் சிவப்புப்போல் இரத்த வெள்ளம் ஓடியது.

தந்தையின் பதினாறு பட்டமகிஷிகளின்மூலம் பிறந்த தொண்ணூற்று ஒன்பது சகோதரர்களையும் சிம்மாதனத்தையே நெருங்கவிடாமல் தந்திரமாக ஒதுக்கி, ஜன்ம சத்ருவான மூத்த சகோதரன் சுசீமனோடு நான்கு வருடம் ஓயாமல் போராடி, சுசீமனைக் கொன்ற குருதி வெள்ளத்தில் நீந்திச் சென்று அசோகன் மகத சிம்மாசனத்தில் ஏறினான்.

கிழ ராஜதந்திரி சாணக்கியரின் மதியூகம் அசோகனுக்குக் கிடைத்திருந்ததால், அசோகன் அவ்வளவு சுலபமாகச் சகல அரசியல் சிக்கல்களையும், போர் முடிச்சுகளையும் அறுத்தெறிந்து விட்டுச் சாம்ராஜ்யாதிபதியாகத் திகழ முடிந்தது.

முடி புனைந்த நாள் முதலாக அசோகனும், அவனுடைய மாமந்திரி சாணக்கியரும், ஏகசக்ராதிபத்ய சாம்ராஜ்யக் கனவு காண ஆரம்பித்துவிட்டனர்.

தான் மந்திரியாய் இருக்கும் அசோகனின் மௌரிய சாம்ராஜ்யத்தைப் போல் விஸ்தாரமான சாம்ராஜ்யம் உலக சரித்திரத்திலேயே வேறு எதுவும் இல்லை என்ற கீர்த்தி அடைய வேண்டும், பாரதவர்ஷம் முழுதும் ஒரு குடைக்குள் வர வேண்டும். அந்தக் குடையைச் சுற்றிவைக்கும் சூத்திரக் கயிறு சாணக்கியன் கையில் இருக்கவேண்டும் என்று ராஜதந்திரி சாணக்கியர் கனவு கண்டார்.

அசோகனோ எதையும் மிஞ்சும் விஸ்தாரமான சாம்ராஜ்யத்தின் எல்லையில் தன் கருத்திற்கு உயிரும் உருவமும் கொடுத்த காரூவகி கிடைப்பாள் என்று சாம்ராஜ்ய ஆசையை வளர்த்து வந்தான். அப்படி எட்டு வருஷங்கள் ஓடிவிட்டன.

வடநாட்டின் பெரும் பகுதிகள் அசோகன் ஆணைக்கு உட்பட்டு விட்டன. பிரம்மாண்டமாக வளர்ந்துவரும் மகத சாம்ராஜ்யத்தைக் கண்டு தலைவணங்கிவிட்டன. ஆனால் அருகில் உள்ள கலிங்க நாடு ஒன்றுதான் மகதத்திற்குத் தலை வணங்காமல் தலை நிமிர்ந்து நின்றது. கலிங்கமும் தன் பிடிக்குள் சிக்கிவிட்டால், வடநாடு முழுதும், தன் குடை நிழலுக்குள் வந்துவிடும்.

பிறகு தன் முன்னோர்கள் எவரும் நுழையவே அஞ்சிய தென் தமிழ் நாடுகள்மீதும் படையெடுத்து ஒரே சாம்ராஜ்யமாக்கிவிடலாம் என்று அசோகன் நினைத்தான். ராஜதந்திரி சாணக்கியரும் பலம் பொருந்திய தங்கள் மகதப் பேரரசுக்கு அருகாமையில் மற்றொரு பலம் பொருந்திய கலிங்க நாடு இருக்கக் கூடாது; கலிங்கத்தை மகதத்திற்கு அடிபணிய வைப்பதே அரசியல் தந்திரமாகும் என்று அபிப்பிராயப் பட்டார். உடனே கலிங்கப் போருக்கும் அசோகன் தயாராகிவிட்டான்.

மறுபடி கலிங்கம் என்றும் தலையெடுக்க முடியாதபடி அடியோடு முறியடித்து ஒடுக்க வேண்டுமென்ற ஆவேசத்தோடு அசோகன் தானே போர்க் கவசங்களை அணிந்து படைக்குத் தலைமை பூண்டு கலிங்க நாட்டின் மீது படையெடுத்துச் சென்றான்.

அம்பாரிகளில் யுத்த நிபுணர்களைச் சுமந்து கொண்டு மகதத்தில் இருந்து கலிங்கத்தை நோக்கி வரிசைவரிசையாக யானைகள் புறப்பட்டன. குமரிகள் போல் குமுறித் துடிக்கும் குதிரைகள் பதினாயிரம் கலிங்கத்திற்கு இரத்த குங்குமப் பாண்டி விளையாடப் புறப்பட்டன. கொலை மாதாவின் குமரர்கள் பல்லாயிரவர் கலிங்கத்துப் போர் மகளோடு கொஞ்சி விளையாடப் புறப்பட்டு விட்டனர். குவலயத்தை ஆளும் இராஜதந்திரிகள் பலர் கலிங்கத்து வீர மகளோடு கண்ணாம்பூச்சி விளையாடப் புறப்பட்டனர். அசோகனின் ரத கஜ துரக பதாதிகளான சேனைகளெல்லாம் பிரளய வெள்ளம் போல் கலிங்கத்தை நோக்கிப் புறப்பட்டன.

காற்றும் நெருப்பும்போல் அசோகன் படைகள்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

கலிங்கத்தில் புகுந்தன. கலிங்க மன்னனும் கலங்கவில்லை. ஏழுகடல்களையும் தன் கைகளால் தடுக்கவே முன்னின்றான்.

பயங்கரமான யுத்தம் ஆரம்பமாயிற்று.

கலிங்க நாடே அதிர்ந்தது. இரத்த வெள்ளம் பெருக்கெடுத்தோடியது. "இரத்தத்தைக் கொடுங்கள்" என்ற வீர ஓசை இருபக்கமும் வானளாவிக் கிளம்பிக் கொண்டேயிருந்தன.

எரி கடலோடு ஏழு கடல் எதிர்ப்பதுபோல், இரு படைகளும் எதிர்த்தன. மறி அலைகளோடு மாபெரும் அலைகள் மோதி விழுவதுபோல் இருபுறமும் சேனைகள் சுருண்டு இரத்தக் கடலில் விழுந்தன. முகிலோடு முகில் எரிப்பதுபோல் இரதமோடு இரதம் எதிர்த்தன. மலைகளோடு மலைகள் மோதி உடைவதுபோல் யானைகளோடு யானைகள் மோதித் துதிக்கையறுந்து விழுந்தன.

போர் நிற்கவில்லை!

இரத்த வெள்ளத்தில் மூழ்கிக்கொண்டே போரிட்டுக் கொண்டிருந்தார்கள். போர் மகள் இரு பக்கத்து வீரர்களின் தலைகளையும் பூப்பந்துபோல் வானத்தில் வீசி அம்மானை ஆடிக்கொண்டிருந்தாள். ஜயமகள் எவர் கையிலும் சிக்காமல் இரு பக்கமும் ஓடிக் கண்ணாம்பூச்சி ஆடிக்கொண்டிருந்தாள்.

கடைசியாகக் கலிங்கத்தின் கடைசி மூச்சு நின்றது! போர் ஓய்ந்தது!

அசோகனுக்குச் சரித்திரப் பிரசித்தி பெற்ற

கலிங்க வெற்றி கிடைத்தது.

அவ் வெற்றியின் கதையென்ன?

எழுந்தது சேனை, எழவும் இரிந்தது பாரின் முதுகு, பிளந்தது பசுந் தரை. விழுந்தன கானும் மலையும், வெறும் தரையாகின திசைகள்.........

அந்தக் கலிங்கப் போர் வெற்றியின் இறுதியில் நூறாயிரம் வீரர்கள் கொல்லப்பட்டார்கள். ஓர் நூற்று ஐம்பதாயிரம் கலிங்க வீரர்கள் சிறைப்படுத்தப் பட்டார்கள்.

போர் முடிந்த அன்று போர்க்களமெங்கும் இருள் தன் பாவாடையை விரித்தது. இருளில் அந்தப் போர்க்களம் பயங்கரமாகக் காட்சியளித்தது.

செம்மண் தரையில் ஓடைகளாக இரத்தம் பெருக்கெடுத்து ஓடியது. வரிசை வரிசையாக அறுந்து கிடக்கும் யானைகளின் துதிக்கைகள் அந்த இரத்த வெள்ளத்திற்குக் கரை சேர்ப்பது போலத் தோன்றின.

அந்த மயானக் கரையில் எங்கே பார்த்தாலும் பிணக்குவியல்!... கால், கைகளற்ற. குற்றுயிரும் கொலையுயிருமாய்க் கிடக்கும் உடல்கள்!... பிணந்தின்னிக் கழுகுகள் படபடவென்று சிறகடித்துக் கொள்ளும் சப்தமும் அந்த இருளில் பயங்கரமாக எதிரொலித்தது. இரத்தத் தேக்கத்தில், கடைசி மூச்சுக்காகத் திணறிக் கொண்டு இருக்கும் வீரர்களை நரிகள் கடித்துத் தின்று கொண்டிருந்தன.

இரத்த ஓடையில் மிதக்கும் மல்லிகை அரும்புகள் போல் குடல்களும் வெண்ணிறக் கொழுப்புகளும் உடைந்த மண்டையோடுகளின் மூளைகளும் மிதந்து கொண்டிருந்தன. கருநிறக் காக்கைகள் பறந்துவந்து மூளைகளைக் கொத்தித் தின்று மனிதரது வெண் கொழுப்புகளில் புரண்டு வெண்ணிறக் காக்கைகளாகப் பறந்து கொண்டிருந்தன.

அந்த மயானக்கரை முழுவதும், சாக்குருவிகளின் ஓலங்களையும், ஓநாய், குள்ளநரிகளின் ஊளைகளையும், உயிர் தேய்ந்த வீரர்களின் முனகலையும், இளம் மனைவிகள் தங்கள் வீரக் கணவர்களின் உடல்களைப் புரட்டிப் பார்க்கும் ஓசைகளையும், புதல்வர்களைப் பறிகொடுத்த தாய்களின் அலறல்களையும்,

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

புது மனைவிகளின் விம்மல்களையும், அப்பா அப்பாவென்று அலறும் மழலை அழுகை ஒலிகளையும் தவிர வேறு எவ்விதச் சப்தமும் இல்லை. வெகு தூரத்தில் "அசோக சாம்ராட்டுக்கு ஜே!" என்ற வீரர்களின் ஆரவாரங்கள் மட்டும் மெல்லக் கேட்டுக் கொண்டிருந்தன.

ஒரு பிணக்குவியலின் அருகே, ரத்தச் சகதிமயமான ஒரு பள்ளத்தில் போர்க் கவசங்களணிந்த ஒரு மகதச் சிப்பாய், அரைகுறையான பிரக்ஞையோடு கீழே விழுந்து கிடந்தான். "தண்ணீர் தண்ணீர்" என்று அவனுடைய உலர்ந்த உதடுகள் பரிதாபமாக முணுமுணுத்துக் கொண்டிருந்தன. ஆனால் அந்த மயானக் கரையில் யார் தண்ணீர் கொடுப்பார்?

அந்தச் சிப்பாய்க்குப் பிரக்ஞை தப்பியது.

அந்தச் சாதாரண சிப்பாய் வேறு யாருமல்ல.

அசோக மௌரிய சக்ரவர்த்திதான்!

நெருக்கடியான கட்டங்களில் போர்க் களத்தில் அசோகன் தன்னாடைகளில் தன்னைப் போல் வேறொருவனை உலாவவிட்டு விட்டு நேரடியாகப் போரின் போக்கை நிதானிப்பதற்காக ஒரு சாதாரண சிப்பாய்க் கோலத்தில் உலாவுவது வழக்கம். அப்படி உலாவும்போது யாரோ அசோகன் முதுகில் இரும்புக் கேடயத்தால் தாக்கித் தள்ளிவிட்டு ஓடிவிட்டார்கள்.

சில கணங்கள் கழிந்தன. அசோகன் நெற்றியில் குளிர்ச்சியாகப் பஞ்சு ஒற்றுவதுபோல் தண்ணென்ற உணர்ச்சி பரவியது. இருட்டில் அவனருகில் யாரோ ஒரு பெண், தோளில் தண்ணீர் குடுக்கை ஒன்று தொங்க உட்கார்ந்திருந்தாள். அசோகன் தாகமென்பதுபோல் கை காட்டினான். அவள் அசையாமல் மௌனமாய் அசோகனை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அசோகன் தன் சக்தி முழுவதையும் வரவழைத்துக் கொண்டு, "தண்ணீர்! தண்ணீர்! பெண்ணே, இந்தச் சமயத்தில் ஒரு குப்பி தண்ணீர் கொடுத்தால்.... சாம்ராஜ்யத்தையே கொடுப்பேன்" என்றான். அந்தப் பெண் சிரித்துக் கொண்டே, குடுக்கையை எடுத்து அசோகன் முகத்தை நோக்கிக் குனிந்து உலர்ந்த அவன் உதட்டில் தண்ணீரை ஊற்றினாள். தண்ணீரைக் குடித்துத் தாகம் தீர்ந்ததும் அசோகன் முகத்தில் சோகை நீங்கியது.

நீர் கொடுத்த அந்த அழகிய பெண்ணின் கைகளை முத்தமிட்டுவிட்டு ஒரு பெருமூச்செறிந்தான் அசோகன்.

முள் தரையில் படுத்திருக்கும் உணர்ச்சித் தட்டியதும், வேதனை பொறுக்காமல் அங்குமிங்கும் புரண்டு படுத்தான். அந்தப் பெண் பரிவோடு அவன் தலையைத் தூக்கி தன் மடியில் சாய்த்துக் கொண்டு அவன் முகத்தையே ஊடுருவிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இருட்டில் தன் முகத்தையே கூர்ந்து நோக்கிக் கொண்டிருக்கும் அவள் முகத்தை அசோகனும் ஊடுருவிப் பார்த்தான். ஒருவித ஏக்கம் கலந்த ஆவலோடு அவன் முகம் மலர்ந்தது.

"மகாராஜா! என்னைத் தெரிகிறதா?" என்றாள் அந்தப் பெண். கலீரென்று அவன் இதயத்தில் ஒரு ஸ்பரிச உணர்ச்சி!

"காரூவகியா? நிஜமாக என் காரூவகி நீதானா?" என்றான் அசோகன் ஆச்சரியத்தில் மூழ்கி. அந்தப் பயங்கரமான போர்க்களம் போக பூமியின் பூம்பஞ்சணையாக மாறுவது போலத் தோன்றியது அசோகனுக்கு?

"ஆம், மகாராஜா! நான்தான். உங்கள் கையால் பன்னிரண்டு வருஷங்களுக்குமுன் சாட்டையடி பட்டேனே. அந்தக் காரூவகிதான் நான்! என்னை நீங்கள் இன்னும் மறக்கவில்லையே?"

இந்தப் பன்னிரண்டு வருஷங்களாக உன்னை நினைத்து நான் தவித்த தவிப்பு யாருக்குத் தெரியும்? சாதாரண ஒரு நாடோடியாகப் பிறந்திருந்தாலும், இதயத்தின் தவிப்பையெல்லாம் சொல்லி மனம் நிம்மதியடைய

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

நண்பர்கள் கிடைத்திருப்பார்கள். ஆனால் அரசனாகப் பிறந்துவிட்டேன். அரசர்களுக்கு இதயத்தோடு இதயங் கலந்து பேசும் நண்பர்கள் கிடையாது!" என்று பெருமூச்செறிந்தான் அசோகன்.

"மகாராஜா! இந்தப் பன்னிரண்டு வருஷங்களும் என் நினைவால் தவித்தீர்களா? இந்தப் பன்னிரண்டு வருஷங்களும் என்ன செய்தீர்கள்? எப்படிக் கழித்தீர்கள்? எல்லாவற்றையும் சொல்லுங்கள்" என்றாள் காரூவகி; அவள் குரலில் மட்டற்ற ஆர்வத்தின் வேகம் தொனித்தது.

"காரூவகி! என்னுடைய இந்தப் பன்னிரண்டு வருஷக் கதையையும் சொல்லுகிறேன், கேள். எவரிடமாவது என் இதயத்தில் இத்தனை வருஷங்களாகப் பொருமிக் கொண்டிருந்த உணர்ச்சிகளைச் சொல்லாவிட்டால் என் இருதயம் வெடித்துவிடும் போலிருக்கிறது. கேள் என் கதையை;" என்றான் அசோகன். காரூவகியின் பூ மொக்குகள் போன்ற கரங்களில் புதைந்தவாறு. காரூவகியும் பரிவோடு அவன் கேசங்களைக் கோதியவாறு, அவன் உதடுகளையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"காரூவகி! உன் நினைவால் நான் ஓயாமல் வாடுகிறேன் என்பது தெரிந்ததும் என் மாமந்திரி சாணக்கியர், அதை இளமையின் பசி என்று நினைத்து, என் அந்தப்புரத்தை அழகிய பெண்களால் அலங்கரித்தார். ஆனால் உன் நினைவால் நான் தவிப்பது, உன் அழகாலா? உன் யௌவனத்தின் கவர்ச்சியாலா? இல்லவே இல்லை! அரசியல் சிக்கல்களை எளிதில் அவிழ்க்கும் ராஜதந்திரி சாணக்கியரின் தந்திர உபாயங்கள், என் இதயத்தின் சிக்கலுக்குச் சிறிதும் உபயோகப்படவில்லை. காரூவகி? அவர் ஒரு ராஜதந்திர காரியத்திற்காக தேவி என்ற ஒரு அழகிய பெண்ணை எனக்கு மணம் புரிவித்தார்...... அவளோடு ஆனந்தமாக வாழ்ந்தேன். உன் நினைவை மறக்கலாம் என்ற எண்ணத்தால்! ஆனால் முடியவில்லை. காரூவகி, அந்த என் பட்டமகிஷியிடம் உன் அழகின் கம்பீரம் இருந்ததே தவிர, உன் இருதயத்தின் சுகந்தம் அவளிடம் இல்லை. பிறகு பத்மாவதி என்ற வேறொரு பெண்ணையும் மணந்தேன். அவளுக்கு உன்னைப்போல் அழகிய உருவம் இருந்ததே தவிர, உன் உள்ளத்தின் சிலிர்ப்பை அவளிடம் நான் காணவே இல்லை!

பிறகு சந்திமித்திரா என்ற குணவதியென்று புகழப்படும் பெண்ணையும் மணந்து பார்த்தேன்! அவளுக்கு உன்னைப்போல வாஞ்சையான குணம் இருந்தது. ஆனால் உன்னைப்போல பஞ்சணையில் குழந்தைபோல் சிரித்து விளையாடும் சுபாவமும், மந்திரி போல ராஜீய விவகாரங்களில் யோசனை சொல்லும் புத்தி கூர்மையும், புதிய தத்துவ உலகங்களை எனக்குக் காட்டியும் என் தவறைக் கண்ட இடத்தில் நண்பனைப் போல் கண்டித்துத் திருத்தியும் பழகும் தோழமை உணர்ச்சியை, அவளிடம் நான் ஸ்பரிசிக்கவே முடியவில்லை!

காரூவகி, உன் ஸ்தானத்தை எந்தப் பெண்ணுமே பூர்த்தி செய்ய முடியாது. நீ இல்லாமல் என் இதயத்தைக் குளிர்விக்க எவளாலும் முடியாது என்பதை இந்தப் பன்னிரண்டு வருஷங்களில் கண்டு கொண்டேன். காரூவகி என் அந்தப்புரத்திலுள்ள பன்னீர்ப் பொய்கைக்கருகில் சீனத்துப் பட்டு விரித்த சிங்காரப் பஞ்சணையில் ஆயிரம் அழகிய அப்சரஸ்களின் நடுவில் புரளுவதைவிடப் பிணங்கள் அழுகிக் கிடக்கும் இந்தப் பயங்கரமான போர்க்களத்தில், நெருஞ்சி முட்கள் நிறைந்து கிடக்கும் இந்தப் பாழான மண் தரையில், உன்னருகில் உன்னோடு மெய்மறந்து பேசிக் கொண்டிருப்பது எனக்கு ஆனந்தம் தருகிறது. இப்படியே இந்தப் பிணக் குவியலின் மத்தியிலே, உன் மடியில் தலைவைத்து உன் வாஞ்சை ததும்பும் முகத்தைப் பார்த்துக்கொண்டு என் காலம் முழுவதையும் கழித்து விடவும் நான் தயார்!"

"மகாராஜா! என் மீது உங்களுக்கு இவ்வளவு காதல் இருக்கிறதா? நான் பாக்கியம் செய்தவள்தான்! எனக்கு மட்டும் இதயம் இல்லையென்று நினைக்கிறீர்களா? இந்தப் பன்னிரண்டு வருஷங்களும் உங்களையே எண்ணி எண்ணி நான் தவித்தேன். இந்தத் தவிப்பையெல்லாம் யாரிடமாவது போய்ச் சொல்ல வேண்டுமென்று என் இதயம் துடிக்கும். ஆனால் யாரிடம் போய்ச் சொல்ல முடியும்? விகாரங்களை நீத்த உபகுப்தரிடம் சொல்ல முடியுமா? இச்சைகளை அறுத்த பிக்ஷுணிகளிடம் போய்ச் சொல்லமுடியுமா? எனக்கு ஆறுதல் சொல்லக்கூட யாரும் இல்லை, மகாராஜா! நீங்கள் இல்லாமல் இந்த அகண்ட உலகில் நான் ஓர் அநாதை மகாராஜா!"

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

"காரூவகி! நீ இல்லாவிட்டால் அசோக சக்கரவர்த்தியும் இந்த அகண்ட சாம்ராஜ்யத்தில் ஓர் அநாதைதான்! காரூவகி, சில கணங்களுக்கு முன் கடைசி மூச்சுக்காக நான் திணறிக்கொண்டு இருக்கும் சமயம், சாணக்கியரின் மதியூகத்தால் அடைந்த மௌரிய சாம்ராஜ்யத்தின் நினைவுகூட எனக்கு வரவில்லை. உன் நினைவுதான் வந்தது. காரூவகி! உயிர் விடுவதற்கு முன்னால் உன்னை ஒருமுறை சந்திக்க வேண்டும், உன் முகத்தைப் பார்த்துக்கொண்டே என் கண்ணிமைகளை மூடவேண்டும் என்று நினைத்துக்கொண்டிருந்தேன். நம் காதல் உண்மையாயிருந்ததால், இந்த அநாதையான போர்க் களத்தில் எதிர்பார்க்க முடியாத உன்னை எதிர்பாராமல் சந்தித்து விட்டேன். இனி ஆனந்தமாக எந்தச் சமயத்திலும் உயிர்விடுவேன்!"

"மகாராஜா! உங்கள் உயிர் போகாது. உங்களால் ஒரு புதுயுகம் உதயமாகப் போகிறது! புத்தர் கொள்கைகளைப் பரப்பும் ராஜ ரிஷியாக விளங்குவீர்கள். அதுவரை உங்கள் உயிர் ஒரு நாளும் நீங்காது என்று உபகுப்தர் எனக்கு உறுதி சொல்லி வந்தார். அந்த உறுதி நிச்சயம் உண்மையாகி விடுமென்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை!"

அசோகன் முகத்தில் ஒருவிதச் சிந்தனையின் தெளிவும், கண்களில் ஒரு லட்சியக் கனவும், உதட்டில் ஒரு பழைய நினைவும் ஒரே சமயத்தில் தோன்றின.

காரூவகியின் கைகளை வாஞ்சையோடு பிடித்துக் கொண்டே, "காரூவகி! இப்போதாவது நீ சொல்ல மாட்டாயா? எங்கள் தக்ஷசீல அதிகாரி தேவசேனனைக் கொலை செய்த கொலைகாரன் யார்? உனக்குத் தெரியாதா?" என்று கேட்டான்.

காரூவகி சிரித்துக் கொண்டே, "அந்தக் கொலைகாரன் யார் என்று எனக்குத் தெரியும், மகாராஜா!" என்றாள்.

"யாரவன்? உன்னைச் சுறாமீன் முள் சாட்டையால் அடித்து தீயில் உன்னை உயிரோடு எரிக்கும்வரை அந்தக் கொலைகாரனைத் தெரியாது என்று சாதித்தாயே? அவன் உன் உயிரைவிட உயர்ந்தவனா?"

"ஆம், மகாராஜா! அன்று அந்த முட்புதரில் நானும் அந்தக் கொலைகாரனும் இரவைக் கழித்ததை நினைத்துக்கொண்டால் இப்போதும் இன்னதென்று விவரிக்க முடியாத ஓர் ஆனந்தம் எனக்கு உண்டாகிறது! அவன் பிரிந்து போகும்போது என் நெற்றியில் முத்தமிட்டுப் போன இடத்தை தொட்டுப் பார்த்தால், இப்போதும் தண்ணென்று குளிர்கிறது! அவன் என்னை விட்டுப் பிரிந்து செல்லும்போது, கைக்கெட்டிய காட்டுப் பூ வொன்றைப் பறித்து என் கைகளிலே வைத்து மூடிவிட்டுப் போனானே, அந்தப் பூவை, இன்னமும் வைத்திருக்கிறேன். இதோ பாருங்கள்......பூ உருவமற்ற சருகுகளின் பொடியாய் விட்டாலும் அதில் அவன் உருக்கிவிட்டுப் போன உள்ளத்தின் பாச உணர்ச்சி என்றும் அழியா ஜீவகளையுடன் இருக்கிறது! மகாராஜா! உங்களைவிட உலர்ந்த சருகான இந்தப் பூவை விலை மதிப்பற்றதாகக் கருதுகிறேன். ஏன் தெரியுமா? அந்தக் கொலைகாரனைத்தான் நான் உண்மையில் காதலித்தேன். அந்தக் கொலைகாரனை இனி நான் சந்திக்கமாட்டேன். ஆனால் அவனை என் வாழ்நாளில் என்றும் மறக்க முடியாது!" என்றாள் காரூவகி, உலர்ந்த பூச்சருகுகளை எடுத்து முத்தமிட்டு அசோகன் முன் நீட்டிக்கொண்டே!

"காரூவகி! சொல்லு, யார் அந்தக் கொலைகாரன்? அன்று சாட்டையால் அடிக்கும்போதுதான் தெரியாது என்று சொன்னாய்! இப்போதாவது சொல்லக்கூடாதா? சொல்லு, யாரவன் யாரவன்?" என்றான் அசோகன் அளப்பரும் ஆவலோடு. அவன் குரல் நடுங்கியது.

காரூவகி சிரித்துக்கொண்டே, "மகாராஜா! அந்தக் கொலைகாரன் யார் தெரியுமா? எவன் என் உள்ளத்திலும், உணர்விலும் ஓயாமல் வளர்ந்து என் உயிரைவிட விலை மதிப்பு அற்றவனாக ஆகிவிட்டானோ, அவன்! எவன் எனக்காக எவரும் இழக்க அஞ்சும் சாணக்கிய தந்திரியைக்கூட இழந்து மௌரிய சாம்ராஜ்ய முடியைப் புத்தருக்கு பிக்ஷையிடப் போகிறானோ, அவன்! எவன் புத்தரின் லட்சியத் தத்துவத்தை அரசியல் முறையில் நடத்திக் காட்டிப் புகழ் பெறப்போகிறானோ, அவன்! எவன் அன்று நான் முட்புதர் இருட்டில் கொடுத்த என் தமிழ்நாட்டு முத்து மோதிரத்தை என் காதலின் நினைவாக எந்நேரமும் தன் கைவிரலில்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

அணிந்திருக்கிறானோ, அவன்! எனக்காக எவன் இனி எந்தக் கொலையும் செய்யப் போவதில்லையோ அவன்தான் அந்தக் கொலைகாரன்! எவன் விரலில் என் முத்துமோதிரம் இருக்கும்வரை எந்தக் கொலையும் செய்யமாட்டான் என்று நான் நம்புகிறேனோ, அவன்தான் அந்தக் கொலைகாரன்!" என்றாள் காரூவகி வெட்கத்தோடு.

அசோகன் மெல்லத் தன் கை விரலை அவள் முன்பு நீட்டி அந்த விரலில் அவன் அணிந்திருந்த காரூவகியின் தமிழ் நாட்டு முத்து மோதிரத்தை அளப்பரும் ஆசையோடு காண்பித்தான்! காரூவகி வெட்கத்தோடு தலை குனிந்துகொண்டாள்.

இருவரும் கங்குகரையற்ற காதலின் உணர்ச்சி அலைகளில் வெகுநேரம் மெய்மறந்து இருந்தார்கள்.

"காரூவகி, இனிமேல் ஒன்று சேரலாம் அல்லவா? இவ்வளவு பயங்கரமான போரால் எனக்குக் கலிங்கம் கிடைத்துவிட்டது. வடநாடு பூராவும் எனக்கு கிடைத்துவிட்டது. இனித் தென் தமிழ் நாடுகளையும் அடிமைப்படுத்துவேன். என் முன்னோர்கள் எவருக்கும் கிடைக்காத சாம்ராஜ்யத்துக்கு நான் மன்னாதி மன்னனாவேன். அதற்குப் பிறகு உன் உபகுப்தரின் நிபந்தனைப்படி நான் உன்னை மணக்கலாம் அல்லவா?"

அளவிறந்த துக்கத்தில் காரூவகி சிரித்தாள்.

"மகாராஜா! உபகுப்தர் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை! நீங்கள் எவ்வளவு பெரிய சாம்ராஜ்யாதிபதியானாலும் உபகுப்தர் நிபந்தனைபடி நீங்கள் காவலாளிகள் இல்லாமல் தனி ஒருவராகக் கைகளில் எந்தவித ஆயுதமுமின்றி உங்கள் நாட்டின் எந்த மூலையிலும் நடந்து போக முடியுமா? எந்த மூலையில் எந்தச் சத்ரு உங்களைக் கத்தியால் குத்துவானோ என்று நடுங்கிக்கொண்டே போகமாட்டீர்களா? நீங்களும் உங்கள் சாம்ராஜ்ய தந்திரி சாணக்கியரும் போகும் போர் வெறி பிடித்த ஆதிக்கப் பாதை சத்துருக்களைச் சிருஷ்டிப்பது; மக்கள் குலத்தின் ரத்த ஓடையில் வீரர்களின் மண்டையோடுகளால் எழுப்பும் பிணமாளிகையா உண்மையான சாம்ராஜ்யம்? அதோ தூரத்தில் கலிங்கப் போர்க்களத்தைப் பாருங்கள்! எத்தனை ஆயிரக்கணக்கான வீரர்கள் கொலையுண்டு கிடக்கிறார்கள்! என்னைப் போன்ற எத்தனை இளம் பெண்கள் இறந்த காதலர்களின் சவங்கள்மீது விழுந்து புலம்புகிறார்கள்? எத்தனை தாய்மார்கள், எத்தனை குழந்தைகள் கதறுகிறார்கள், பாருங்கள்! உங்கள் ஒருவருடைய சாம்ராஜ்யப் பேராசையால் எவ்வளவு கொலைகள்! எத்தனை மக்களுக்கு எவ்வளவு துன்பம்?

இவ்வளவு துன்பங்களுக்கிடையில் சாம்ராஜ்யத்தைச் சிருஷ்டிக்கிறீர்களே, உங்களுக்காவது இன்பமுண்டா? உங்கள் பாட்டனார் சந்திரகுப்த மௌரியர் தொடர்ந்தாற்போல் இரண்டு நாள் ஒரே இடத்தில் தூங்கமாட்டாராம்! எவனாவது அரசியல் விரோதி குத்திக் கொன்றுவிடுவானோ என்ற பயத்தால்!...அதோ தூரத்தில் உங்கள் ஜயம் பெற்ற வீரர்கள் "அசோக சாம்ராட்டுக்கு ஜே!" என்று சொல்லிக்கொண்டே, கலிங்க நாட்டில் கொள்ளை அடித்து, கிழவர்கள் குழந்தைகளைக் கொன்று, குமரிகளின் கற்பைச் சூறையாடி, ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருக்கிறார்கள்! உங்கள் பெயர் எவ்வளவு கொடூரமாக மக்கள் இதயத்தில் பொறிக்கப்படுகிறது தெரியுமா? இதுவா வெற்றி? இதுவா கீர்த்தி? இப்படிப்பட்ட ஒரு கொடூர சாம்ராஜ்ய மன்னனின் காதலி என்ற பெயரை எடுப்பதைவிடக் கடற்கரையில் நிம்மதியாக வாழும் ஒரு செம்படவனின் மனைவியாக காலங்கழிப்பதை நான் விரும்புகிறேன், மகாராஜா! இப்போதாவது உணருங்கள், சாம்ராஜ்ய வெறியும் ஜீவ கொலையும் எவ்வளவு பயங்கரமானவை யென்று!" என்று காரூவகி சொல்லி நிறுத்தினாள்.

அசோகன் நெற்றியில் சிந்தனையின் சுருக்கங்கள் விழுந்தன.

மறுபடி காரூவகி உணர்ச்சிவசமாகப் பேச ஆரம்பித்தாள்:

"அசோக சக்கரவர்த்தியே! உங்களைப் போல் புத்தரும் ஒரு ராஜகுமாரனாகத்தான் பிறந்தார். ஆனால் அவர் ராஜ்யத்தை ஆளவில்லை. உங்களைப்போல் படுகொலைகள் புரிந்து சாம்ராஜ்யத்தைப் பெருக்கவில்லை. ராஜ்யத்தைவிட்டு வெளியேறினார். கடுந்தவம் புரிந்து நிர்வாண நிலை அடைந்து அஹிம்சையையும்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

ஜீவகாருண்யத்தையும் நாடெங்கும் போதித்து ஆண்டியைப் போலச் சுற்றினார். மக்கள் இன்பமே தன்னின்பமெனக் கொண்டார். ஆனால் அவரடைந்த புத்த சாம்ராஜ்யத்தைப்போல வேறு எந்த ராஜாவும் அடையவில்லை! நீங்களும் புத்தர் வழியைப் பின்பற்றுங்கள். புத்தமதக் கொள்கைகளைக் கருத்தூன்றிப் படியுங்கள். உங்கள் ஞானம் தெளிவடையும். உண்மையான சுகம் பரலோகத்தில்தான் இருக்கிறது என்று உங்களுக்கே தெரியும். அதன்பின் சாதி சமயச் சார்பற்ற சமதர்ம அரசியலை அமையுங்கள். அஹிம்சையையும் ஜீவகாருண்யத்தையும் ஒழுக்கத்தையும் புத்தர் போதனைகளையும் நாடெங்கும் பிரசாரம் செய்யுங்கள்! நாடெங்கும் கல்தூண்கள் நாட்டி அந்தப் போதனையைக் கல்வெட்டில் பொறியுங்கள். ஆயிரம் பிணக் குவியலின் நடுவில் நீங்கள் நாட்டும் வெற்றித் தூண்களைவிட நீங்கள் நடும் அந்தப் போதனைக் கல்தூண்கள் உலகம் உள்ளளவும் ஞானதீபமாகப் பிரகாசிக்கும்.

கால வெள்ளத்தாலும் அழியாமல் அவை உங்கள் புகழ் வெள்ளத்தைப் பரப்பிக்கொண்டிருக்கும். பிரசாரகர்களையும் தூதுவர்களையும் வெளிநாடுகளுக்கு எல்லாம் அனுப்புங்கள். உங்கள் தூதுவர்களைப் பல நாட்டவரும் தலைவணங்கி ஏற்றுக் கொள்வார்கள். பல வருஷங்களாகப் பல்லாயிரக் கணக்கான உயிர்களைப் பலி கொடுத்தும் அடைய முடியாத செல்வாக்கையும் புகழையும் வெகு சுலபத்தில் அடைந்து விடலாம். கொலை வழியை விட்டு அன்பு வழியில் உங்கள் சாம்ராஜ்யத்தை விஸ்தரியுங்கள். யதேச்சாதிகாரத் தன்மைகளைத் தவிர்த்துச் சகலரும் சமமாக, ஆனந்தமாக வாழும் ஒரு குடியரசுத் தத்துவத்தை முதன் முதலில் நீங்கள் பரீக்ஷித்து உலகத்துக்குக் காட்டுங்கள். உலக சரித்திரத்தில் "அசோக சாம்ராட்டுக்கு ஜே!" என்ற ஜயகோஷம் என்றுமே ஒலித்துக் கொண்டு இருக்கும்! நீங்கள்அப்படிப்பட்ட சாம்ராஜ்யாதிபதியாகும் போது நானே உங்களிடம் வருகிறேன். உங்களை மணந்து உங்கள் உள்ளத்தில் காதல் தீபத்தை ஏற்றுகிறேன்" என்றாள் காரூவகி கண்களில் கண்ணீரும் ஆசையும் உணர்ச்சிப் பிரவாகமாகப் பெருக.

அசோகன் முகத்தில் ஒரு புது ஞானவொளி வீசியது. அசோகன் காரூவகியின் கரங்களை விட்டுப் பிரிந்து எழுந்து நின்று ஏதோ ஓர் உணர்ச்சியால் தாக்கப்பட்டவன்போல, தன் உறையிலிருந்த உடைவாளை உருவித் தன் பலம் முழுவதையும் திரட்டி அந்த உடைவாளை இரண்டாகப் பிளந்தெறிந்தான். பிறகு காரூவகியை நோக்கி, "காரூவகி! ஜீவஹிம்சைப் பாதையில் வழிதவறிச் சென்று கொண்டிருந்த என் உள்ளத்தில் ஒரு புது ஞான தீபத்தை ஏற்றிவிட்டாய்! இனி என் ஜன்மத்தில் போர்வாளையே எடுக்க மாட்டேன். சாணக்கியர் எனக்குக் கொடுத்த மௌரிய முடி எந்நேரமும் அருவருப்பான ரத்த வாடை வீசிக்கொண்டிருக்கும் முடி. ஆனால் நீ எனக்குச் சூட்டும் முடி எப்போதும் அன்பில் ஆனந்த மலர்கள் உதிர்த்துக் கொண்டிருக்கும் ஞானமுடி! காரூவகி, இன்று நீ கண்ட அசோகன் ஜீவஹிம்சையால் அலங்கரிக்கப்பட்ட சாம்ராஜ்ய முடியணிந்திருக்கும் மௌரிய சக்ரவர்த்தி! நாளை முதல் உருவத்தில் அரசனாகவும் உள்ளத்தில் பிக்ஷா பாத்திரத்தை ஏந்திக்கொண்டிருக்கும் ஒரு புத்த பிக்ஷுவாகவும் அசோகனைக் காண்பாய்! நீ விரும்பும் அரச லட்சணங்களையும் புகழையும் அடையும்வரை நான் உன்னை ஸ்பர்சிக்கவும் மாட்டேன்; போய்வா!" என்று அசோகன் உணர்ச்சி வசத்தோடு கூறினான். அப்போது தூரத்தில் உபகுப்தரின் ஞானக் குரல் கேட்டது.

"மகாராஜா! நீங்கள் அஹிம்சை அரசியல் பிரகடனம் செய்யும்போது, மறுபடி நான் உங்களிடம் வருவேன். ஆனால் எத்தனை வருஷங்கள் கழித்து என்று தெரியாது! எந்த நிலையில் வருவேன் என்றும் தெரியாது! அப்போது என்னிடம் இந்த அழகு இருக்குமா என்பதும் தெரியாது! போய் வருகிறேன்!" என்றாள் காரூவகி.

பிறகு மெல்ல அவனைப் பிரிந்து அவனைப் பார்த்துக் கொண்டே மறைந்தாள் காரூவகி.

அத்தியாயம் 9

## பிரகாசமான வழி

**"சூரியன், பகலில் பிரகாசமாய் இருக்கிறான்! சந்திரன் இரவில் பிரகாசமாயிருக்கிறான்! போர்வீரன் தன் யுத்த கவசங்களில் பிரகாசமாய் இருக்கிறான்! அந்தணன் தன் தியானத்தில்**

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

**பிரகாசமாய் இருக்கிறான்! ஆனால் விழிப்புற்ற புத்தரோ இரவு பகல் எந்நேரமும் அற்புதமான பிரகாசத்துடனிருக்கிறார்"**

—தம்ம பதம் 387



அசோகன் தான் பெற்ற பிரம்மாண்டமான கலிங்க வெற்றியைக் கலிங்க நாட்டிலுள்ள கல் வெட்டுக்களில் பொறிக்கவும் தயங்கினான். கலிங்கப் போர் நடந்த பிறகு அசோகன் போரையே அடியோடு புறக்கணித்தான். திக்விஜயம் செய்வதைக் காட்டிலும் தன்ம விஜயம் செய்வதே உள்ளத்திற்கு அமைதி தருவது என்பதை உணர்ந்தான்.

கலிங்க வெற்றிக்குப் பிறகு அசோகன் புத்த மதத்தைப் பின்பற்றி புத்த உபாசகனானான். இரண்டாண்டுகள் உபாசகனாயிருந்து மூன்றாவது வருடத்தில் அசோகன் புத்த சங்கத்தில் சேர்ந்து காவியுடை தரித்துப் புத்தபிக்குக் கடிகையானான்.

அரசன், இராஜ்ய பாரம், இராஜ்ய தந்திரங்களை எல்லாம் வெறுத்து புத்த மதத்தைப் பின்பற்றத் தொடங்கியதும் கிழராஜ தந்திரி சாணக்கியர் அரசியலை விட்டு ஒதுங்கி ஓய்வு பெறத் தீர்மானித்தார்.

அடிவானத்தில் கிளம்பும் சூரியனின் ஒளிக் கதிர்களை இனி எந்தவித ராஜதந்திர உபாயங்களாலும் தடுக்க முடியாது என்பதை அவர் உணர்ந்துவிட்டார்; ஒரு நாள் அந்தக் கிழ ராஜதந்திரி சாணக்கியரை மகத சாம்ராஜ்யத்திலேயே காண முடியவில்லை. நர்மதா நதி தீரத்திலுள்ள தம் ஓலைக் குடிசையை விட்டுத் தம் குடும்பத்தோடு எங்கோ போய் விட்டார்! அவர் தம் அரசியல் பகடைகளையும் சாஸ்திரங்களையும் தூக்கியெறிந்துவிட்டு ஆண்டவன் அருள் தத்துவத்தை நோக்கித் தியானிக்க இமயமலைச் சாரலுக்குப் போய் விட்டதாகச் சிலர் சொல்லிக் கொண்டார்கள். சிலர் அவர் பிறந்த தென்னாட்டுக் கேரள ராஜ்யத்துக்குப் போய் விட்டதாகப் பேசிக் கொண்டார்கள். எப்படி அந்த ராஜதந்திரி நாடோடியாய் மகத அரசியல் மேடையில் நுழைந்தாரோ, அப்படியே நாடோடியாக மகதத்தை விட்டு வெளியேறி விட்டார்!

ஆனால் அவர் போகும்போது அசோகனைப் பற்றியோ, அசோகன் பின்பற்றும் புத்த மதத்தைப்பற்றியோ எந்தவிதக் குறையும் சொல்லவில்லையாம்!

அசோகன், தான் புத்த மதத்தைப் பின்பற்றப் போவதாகவும், அரசியலை மதச் சார்பற்ற சமதர்ம முறையில் நடத்தப்போவதாகவும் எல்லோருக்கும் மத சுதந்திரம் அளிக்கப் பிரகடனம் செய்யப் போவதாகவும் சொன்னதும் சாணக்கியர் சிரித்துக் கொண்டாரே தவிர, அவர் எந்தவித ஆட்சேபணையும் சொல்லவில்லையாம்! கடைசியாகச் சாணக்கியர் தம் ஓலைக் குடிசையை விட்டுப் புறப்படும் போதும் அங்கு காவல் புரிந்த

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

தோட்டியைக் கூப்பிட்டு அவனை வற்புறுத்தி அவனோடு சரிசமானமாக இருந்து ஒரே இலையில் பாலன்னம் அருந்திவிட்டுத் தாம் பிரியமாக வளர்த்த பசு மாட்டையும், தாம் வசித்து வந்த ஓலைக் குடிசையையும் தோட்டிக்குப் பரிசாகக் கொடுத்துவிட்டுப் போனாராம்!

ஆனால், "எந்த அரசியல் நிபுணரும், எந்த சாம்ராஜ்யாதிபதியும் மகத சாம்ராஜ்யத்தைவிட்டு ஒதுக்க முடியாத சாணக்கியனை ஒரு சாஸ்திரமுமறியாத, சாஸ்திரங்களால் பலஹீனமானவள் என்று பரிகசிக்கப் பட்ட ஒரு பெண் மௌரிய அரசியலை விட்டு விலகச் செய்துவிட்டாளே!" என்ற குறை சாணக்கியருக்கு இருந்திருக்கிறது என்பது ஒருவருக்கும் தெரியாது!

அவர் போகும்போது கடைசியாக அசோகனுக்கு ஓர் ஓலை நறுக்கு வைத்துவிட்டுப் போனாராம். அந்த ஓலையைப் பார்த்ததும் அசோகன் வெகுநேரம் மலைத்து நின்றுவிட்டானாம்! அந்த ஓலை நறுக்கில் கீழ்க்கண்ட விதத்தில் சாணக்கியரின் வாசகம் இருந்தது என்று சில நிபுணர்கள் யூகித்தார்கள்:

*"அசோகா!*

*சாஸ்திரப் பாண்டித்தியத்தாலும், குயுக்தி அறிவாலும் எனக்கு ஆத்ம சாந்தி கிடைக்கவில்லை. அதனால் ஆண்டவன் அருள் திசையை நாடி, உன் நாட்டைவிட்டுச் செல்கிறேன்.*

*நான், உன் ராஜ்யத்திலிருந்து ஒரு தூசியையும் கொண்டு போகவில்லை. நான் இதயமில்லாமல் அறிவு ஒன்றோடு மட்டும் இந்த ராஜ்யத்திற்குள் நுழைந்தேன். இப்போது இதயத்தோடு திரும்பிப் போகிறேன். இதன் மூலம் உன் மௌரிய சாம்ராஜ்யம் சாணக்கியனுக்குப் பிரதியுபகாரம் செய்துவிட்டது!*

*நீ புத்த மதத்தைத் தழுவிய பிறகு உன் குருவான என் முன் வரவே கூச்சப்பட்டாய்! எதற்குக் கூச்சம்? இதுவரை மௌரிய மன்னர்கள், சொந்த அரசியல் அபிலாஷைகளையும் சமுதாய லக்ஷியங்களையும் இராஜாங்க அமைப்பில் துணிந்து புகுத்த முடியாதபடி சாணக்கியனால் பலவீனமான பாத்திரங்களாக ஆக்கி வைக்கப்பட்டிருந்தார்கள்! நீயோ சாணக்கியனையும் கலந்தாலோசியாமல், அரசியல் அடிப்படையையே மாற்றியமைத்துவிட்டாய்! மதச் சார்பற்ற அரசியல் பிறப்பு பாகுபாடுகளற்ற ஒரே மனித சமுதாயம் இவை. இதுவரை எந்த அரசியல் சாஸ்திரியும் காணாத புதுமை! இவ்வளவு திறமைக்கும் திடத்துக்கும் முன் இனிச் சாணக்கியனின் இராஜதந்திரம் சோபிக்காது! நான் இதுவரை அரசியல் வட்டாரங்களில் இராஜதந்திர மேதையாக, சாணக்கியன் என்ற ஒரு பலமான பாத்திரத்தைச் சிருஷ்டித்துவிட்டேன். அந்தப் பாத்திரம் மெல்ல மெல்லப் பலவீனமாவதற்குள் நான் அரசியலை விட்டு நீங்கி விடுவதுதான் நல்லது....!*

*என்னைப்போல் ஓர் இராஜ தந்திரியை இழந்து விட்டோமே என்று கவலைப்படாதே. அடக்குமுறையால் மக்களை ஆளும் எதேச்சாதிகாரத் தன்மை வாய்ந்த அரசாங்கத்திற்கும், ஆதிக்க வெறி பிடித்த சாம்ராஜ்யங்களுக்குந்தான் என்னைப்போன்ற அதி மேதாவிகளான இராஜதந்திரிகள் தேவை! பொய்க் கலப்பின்றி, அன்பு, அஹிம்சை அடிப்படையில் அரசாளும் உன் ராஜ்யத்திற்கு இராஜதந்திரிகள் தேவையே இல்லை....!*

*இவ்வளவு பெரிய சாம்ராஜ்யத்தைச் சிருஷ்டித்துத் தந்த சாணக்கிய தந்திரியை அநாதையாய் விட்டு விட்டோமே, காடுகளிலும் மலைகளிலும் உண்ண வழியின்றி அலைவாரே என்று வருந்தாதே! என்னைப் போன்ற துறவிகள் வழியில் கிடைக்கும் புல், பூண்டு, கிழங்குகளைத் தின்று எந்தக் காட்டிலும், எந்த இடத்திலும் ஜீவிக்க முடியும்!*

*உன் மீதோ உன் ராஜ்யத்தின் மீதோ எனக்குக் கோபம் இல்லை. முன் கோபியான சாணக்கியன் இப்போது முற்றுந் துறந்த துறவியாகிவிட்டான்! அறிவைத் தீட்டிப் பதம் பார்க்கவேண்டுமென்ற ஒரே ஆசையோடு இந்த மகத அரசியல் மேடைக்கு வந்தேன். இப்போது ஒருவிதக் குறையுமில்லாமல் இந்த மகதத்தை விட்டுச் செல்லுகிறேன்.*

*நீ கலிங்கப் போருக்குப் பின், திடீரென்று மதம் மாறியதற்கும் புது அரசியல் லட்சியத்தை வகுத்ததற்கும், காரூவகியின் மீது உனக்கு இருந்த தீவிர ஆசைதான் காரணம் என்பது எனக்குத் தெரியும். ஆனால் ஒரு*

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

*கோரிக்கை! சாஸ்திரங்களில் பலஹீனமானவள் என்று கருதப்படும் ஒரு பெண், சாஸ்திர மேதாவியான சாணக்கியனை அரசியலை விட்டு ஒதுக்கக் காரணமா யிருந்தாள் என்பதை உன் சரித்திரத்தில் இடம் பெறாமல் மறைத்துவிடு! இதுதான் சாணக்கியன் கடைசியாக உபயோகிக்கும் இராஜதந்திரம்! மற்றும், நான் உனக்குக் கடைசியாக இடும் கட்டளை ஒன்று உண்டு. சாணக்கியனைக் குழம்பிய மனதினனாகக் காட்டும் இந்த லிகிதத்தை, ஹோமம் வளர்த்து எரித்துவிடு!*

சோமதேவன்."

இந்த ரீதியில்தான் சாணக்கியனது ஓலை நறுக்கில் எழுதியிருந்தது என்று அரண்மனையில் இராஜ்ய நிபுணர்கள் குசுகுசுவென்று பேசிக்கொண்டார்கள். ஆனால் அந்த ஓலை நறுக்கில் உண்மையில் என்ன எழுதப்பட்டிருந்தது என்பது, அசோகனைத் தவிர வேறு ஒருவருக்கும் தெரியாது. படித்த கணமே அசோகன் கண்கலங்கியவாறு அந்த நறுக்கைத் தீயில் வைத்து எரித்துவிட்டான். பிறகு தன் அரசியலைவிட்டு மறைந்த சாணக்கியனைத் தேடவும் அவன் முயலவில்லை!

சிலகாலம் சென்றது.

ஓயாமல் புத்தமதச் சிந்தனைகளிலும் புத்தர் போதனைகளிலும் ஆழ்ந்திருந்த அசோகனுக்கு அவற்றில் ஒரு தனி இன்பமும் ஆனந்த குதூகல வெள்ளமும் பெருகுவதுபோலத் தோன்றியது.

பிக்குகடிகையானதும் அசோகன் விகார யாத்திரை எனப்படும் இன்ப வழியில் காலங் கழிப்பதைவிட்டுத் தன்ம யாத்திரை புரியத் தொடங்கினான். அவனுடைய பத்தாம் வருஷ ஆட்சியில் "சம்பாதி" எனப்படும் புத்த கயைக்கு யாத்திரை செய்தான்.

இருபதாம் வருடத்தில் அசோகன் "கபிலவாஸ்து"வுக்கு யாத்திரை சென்றான். சாக்கிய முனி அவதரித்த லும்பினித் தோட்டம் என்ற புனித ஸ்தலத்தைத் தரிசித்து அங்கொரு கல்வெட்டுத் தூணை எழுப்பினான். தன் தலைநகரமான பாடலிபுரத்தில் புத்தசமய மகாநாடு ஒன்றைக் கூட்டினான்.

ஆனால் அவன் புத்த சமயத்தைப் பின்பற்றினாலும் மதத் துவேஷம் கூடாது என்றும், அரசியலுக்கும், மதத்திற்கும் சம்பந்தமில்லையென்றும் ஸ்பஷ்டமாகக் கூறி, மக்களுக்கு மதச் சுதந்திரம் அளித்து எல்லோரும் தம்தம் சமயங்களைப் பின்பற்றி ஒரே அன்பு சமுதாயமாய் வாழ வேண்டுமென்று மக்களுக்குத் தெரிவித்தான். முடி மன்னனாயிருந்தும் முடியரசின் எதேச்சாதிகாரத் தன்மைகளைத் தவிர்த்து, குடியரசுத் தத்துவம் அடங்கிய ஓர் அரசியல் திட்டத்தைத் தயாரித்து அதில் வெற்றியும் கண்டான்.

புத்தத் துறவியானதும் அசோகன், புத்தர் போதனைகளையும் மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கத்தையும், அதிகாரிகளின் கடமைகளையும், ஜீவ காருண்யத்தையும் வற்புறுத்தி நாடெங்கும் பிரசாரகர்களை அனுப்பினான். அவை அழிந்து போகாமல் கல்வெட்டுகளிலும் பொறித்து நாடெங்கும் நிறுத்தினான். அவைதான் இப்போது அசோக ஸ்தூபிகளாக தேசமெங்கும் வானோங்கி நிற்கின்றன!

அசோகன் பிரசாரம் செய்ததோடு நின்று விடவில்லை. அந்தக் கொள்கைகளைத் தானே கடைப்பிடித்து மக்களுக்குக் காட்டினான். அரண்மனையில் ருசியான சமையலுக்காகக் கொல்லப்பட்டு வந்த ஆடு, புறா முதலான பறவைகள், விலங்குகளின் ஜீவ வதையை அடியோடு நீக்கினான். வேட்டையாடிப் பொழுது போக்கும் வழக்கத்தையும் அசோகன் நிறுத்தினான். மேலும் தன் நாட்டில் மக்கள் ஒழுக்கத்தோடு கூடிய நல்வாழ்வு வாழ்ந்து ஆனந்தத்தை அநுபவிப்பதுபோல் பிறநாட்டு மன்னர்களும் மக்களும் நல்வாழ்வு வாழ்ந்து நலம் பெற்று உய்யவேண்டுமென்ற அளப்பரும் ஆவலோடு புத்த மதத் துறவிகளைப் பல நாட்டுக்கும் அனுப்பினான்.

சோழ, பாண்டிய, கேரள நாடுகளுக்கும், கிரேக்க நாடுகளான கொரியா, எகிப்து, கைரினி, மாஸிடோனியா, சைப்ரைஸ் முதலிய நாடுகளுக்கும் புத்தத் துறவிகளை அனுப்பி, புத்த சமயத்தைப் பரப்பினான். அசோகன் மகனான மகேந்திரனும் மகளான சங்கமித்திரையும் சத்சங்கத்தில் சேர்ந்து புத்தத் துறவிகளாகி


Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

அசோகன் ஆணையால் புத்த சமயத்தைப் பரப்ப இலங்கைக்குச் சென்றார்கள். பர்மாவுக்கும் சீனத்துக்குங்கூடப் புத்த துறவிகள் அசோகன் ஆணையைத் தாங்கிச் சென்றார்கள்.

எந்த நாட்டிற்குச் சென்றாலும் புகழும் செல்வாக்கும் கொடிகட்டிப் பறக்கும் விஸ்தாரமான சாம்ராஜ்யத்தை அடைந்தான் அசோகச் சக்கரவர்த்தி! எங்கே சென்றாலும் காவலாளிகளின்றி தனி ஒருவனாக நிர்ப்பயமாகத் தெருக்களில் உலாவினான் அசோகச் சக்கரவர்த்தி! மக்களின் நாவிலும், சரித்திரத்திலும், புகழிலும் எவரும் அடைய முடியாத ஸ்தானத்தை அடைந்துவிட்டான் அசோகச் சக்ரவர்த்தி! தேவனாம்பிரியன், பிரியதர்சனன்! என்றெல்லாம் உலகம் அவனைப் புகழ்ந்தது.

இவ்வாறு பல வருஷங்கள் சென்றன.



அத்தியாயம் 10

## சங்கமம்

**"நான் என்பது உடல் அல்ல."**

வினய பிடகம் 1,6

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?



பருவப் பெண்ணின் குறும்புக் கன்னங்களைப்போல் கிழக்கு வானம் சிவந்து வெளுத்தது.

அன்று ஆண்டுக்கொரு முறை அரசருக்கு நடக்கும் தைலக் காப்பு விழா. "அசோக சாம்ராட்டுக்கு ஜே! தேவானம்பிரியனுக்கு ஜே!" என்று மகதத்துத் தலைநகரான பாடலிபுரம் முழுவதுமே ஆனந்த உற்சாக வெள்ளத்தில் மூழ்கித் திளைத்திருந்தது. நகரிலுள்ள வணிகர்களும், மக்களும், இராஜப் பிரதானிகளும் அரசனுக்கு விலையுயர்ந்தபொருள்களைக் காணிக்கையாகக் கொடுத்து, உள்ளம் மகிழ்ந்து சென்று கொண்டிருந்தார்கள்.

மக்களும் அதிகாரிகளும் கொடுத்த விலையுயர்ந்த தமிழ்நாட்டுக் கபாட முத்துக்களும், கப்பல் சிப்பந்திகள் கொடுத்த சீனத்துப்பட்டு ஜரிகைகளும், பண்டிதர்களும் புத்த பிக்ஷுக்களும் கொடுத்த ஓலைச் சுவடிகளும் பொன்னாசை கூடாது என்று கூறும் மதத் தலைவர்கள் கொடுத்த பொன் செங்கோல்களும், கேரளச் சிற்பிகள் கொடுத்த தந்தப் பொம்மைகளும் அசோகச் சக்ரவர்த்தியைச் சுற்றிலும் சிதறிக் கிடந்தன.

அசோகனுக்குக் காணிக்கை கொடுக்கும் விழா முடியும் தருணம், பௌத்த மகான் உபகுப்தர் முக்காடிட்டு ஒரு பெண்ணை அழைத்துக்கொண்டு வந்து அசோகன் முன் நிறுத்தினார்.

"தேவானாம்பிரியா! இந்தப் பெண்ணை நீ என் காணிக்கையாக ஏற்றுக்கொள்ள வேண்டும். இவள் புத்தபிரானின் அருளுக்குப் பாத்திரமான விலையுயர்ந்த பொருள். இவளுக்கு முன் உன் சாம்ராஜ்யங்கூட ஈடாகாது என்று நினைப்பாய்!" என்றார் உபகுப்தர் சிரித்துக்கொண்டே.

அருகில் இருந்த தோழிகள் அந்தப் பெண்ணின் முக்காடை நீக்கினார்கள். அங்கே தங்க விக்ரகம் போல், கிழவியாய் காரூவகி நின்றுகொண்டிருந்தாள்.

காரூவகியின் முகத்தில் அழகு உறைந்து முதுமை தட்டியிருந்தது. அழகிய பருவக் கட்டுக்கோப்பு குலைந்து உடலில் தள்ளாமை நிறைந்திருந்தது. மிருதுவான உதடுகள் உலர்ந்து அவற்றில் சுருக்கங்கள் விழுந்து கிடந்தன. கன்னக் கதுப்புகள் வற்றி, வாடியிருந்தன. கண்ணோரங்களில் கருவளையங்கள் விழுந்து கிடந்தன. அவளிடம் இளமை மறைந்துவிட்டது! ஆனால் அழகு இருந்த சுவடுகள் மட்டும் தென்பட்டன.

காரூவகி கிழவியாய் நின்றாள்!

ஆனால் அவளுடைய முகத்தில் ஒரு புதுத் தேஜஸ் பரவியிருந்தது. முதுமையடைந்தாலும், அவளைச் சுற்றிலும் ஒருவிதக் கவர்ச்சியும், ஆத்ம ஆகர்ஷணமும், கண்களில் அதே குறும்புச் சிரிப்பும் இன்னும் அழியாமல் அப்படியே இருந்தன!

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

"காரூவகி, நீயா! எத்தனை வருஷங்களுக்குப் பிறகு இந்தச் சந்திப்பு?" என்று ஆவலோடு அசோகன் தன் கைகளை நீட்டினான்.

"தேவானாம்பிரியா! நான் சொன்னபடி நானே இவளை உன்னிடம் கொண்டுவந்து சேர்த்துவிட்டேன். உன்னுடைய பழைய காதல் இன்னும் தேயவில்லை யென்றால் அதே பழைய ஆசையோடு இவளை ஏற்றுக்கொள்!" என்று உபகுப்தர் சிரித்துக் கொண்டே அந்த இடத்தைவிட்டு ஒதுங்கிக் சென்றார். சுற்றிலும் நின்றவர்களும் சற்றுத் தள்ளி ஒதுங்கி நின்றார்கள்.

அசோகன் முதுமை ததும்பிய காரூவகியின் முகத்தையே ஊடுருவிப் பார்த்துக் கொண்டிருந்தான். காரூவகியும் அசோகன் முகத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். இருவரும் மெய்மறந்து ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இருவர் முகத்திலும் உணர்ச்சிப் பிரவாகம் பெருக்கெடுத்தோடியது.

தாங்கள் முதியவர்கள் என்பதையும் மறந்து இளம் உணர்ச்சிப் பெருக்கில் நின்றார்கள்!

அசோகன் உதடுகள் துடித்தன. காரூவகியின் உதடுகளும் துடித்தன.

"காரூவகி! நீ வந்துவிட்டாயா?" என்றான் ஆசையெல்லாம் பொங்க, கிழவன் அசோகன்.

"ஆம்! மகாராஜா! வந்துவிட்டேன்! ஆனால் பல வருஷங்களுக்கு முன் நீங்கள் கூடாரத்திலும், போர்க்களத்திலும் கண்ட இளமை என்னிடம் இப்போது இல்லை! சீனத்துப் பட்டுபோல ஸ்பரிசித்தால் ஸ்மரணையை மறக்கச் செய்யும் மிருதுவான மேனி இப்போது எனக்கு இல்லை.

கேரளத்துத் தந்தச் சிற்பிகளின் கலைவெட்டைப்போல கட்டுக்கோப்பான உடல் இப்போது என்னிடம் இல்லை. யவனர் தேறல்போல உண்டால் உணர்வைப் போதை கொள்ளச் செய்யும் சதைப் பிடிப்பான சிவந்த உதடுகள் இப்போது இல்லை. பாண்டி நாட்டுக் கயல் மீன்களைப்போல பருவப் பொய்கையில் துள்ளி விளையாடும் மையல் விழிகள் இல்லை.

பார்க்கப் பார்க்க குறும்புக் கவிதைகள் காணும் மோகனக் கண்கள் இல்லை. காஷ்மீரத்துப் பட்டு ரோஜாக் குவியல் போன்ற கன்னக் கதுப்புகள் இல்லை! குமரிகளின் பொங்கும் யௌவனம் என்னிடம் இப்போது இல்லை..........."


"ஆனால் காரூவகி! உன் உள்ளத்தில் குமரிகளிடம் பொங்கும் பாசக் கவர்ச்சியின் யௌவனம் இன்னும் அழியாமல் இருக்கிறது. வாஞ்சை என்னும் வற்றாத சுனை உன் இருதயத்தில் இன்னும் இருக்கிறது, காரூவகி!"

"மகாராஜா! நீங்கள் இத்தனை வருஷங்களாக ஆசைக் கனவு கண்டு வந்ததுபோல், நான் உங்களுக்குக் காணிக்கை கொடுக்க என்னிடம் ஒன்றுமே இல்லை! பருவப் பஞ்சணையில் பருவக் குமரி போல் உங்களோடு என்னால் சிரித்து விளையாட முடியாது. உங்கள் கோரிக்கைகளை என்னால் அலங்கரிக்க முடியாது. பன்னீர்ப் பொய்கைகளில் உங்களோடு கைகோர்த்து விளையாட முடியாது. ஆடிப் பாடி உங்கள் இதயத்தில் பரவச லாகிரியைக் கிளற முடியாது. தென்றலையும் நிலவையும் பார்த்துப் பெருமூச்சு விட முடியாது. என்னிடமிருந்த பசுமை போய்விட்டது மகாராஜா! இப்போது நான் கிழவி!"

"காரூவகி, நம் காதல், தென்றலிலும் நிலாவிலும் பிறக்கவில்லை! உன் அழகைக் கண்டோ, உன் இளமையைக் கண்டோ நான் உன்னைக் காதலிக்கவில்லை. உன் இருதயத்தையே இத்தனை வருஷங்களாகக் காதலித்தேன். உன் இருதயம் இன்னும் பசுமையாகத்தான் இருக்கிறது. இருதயத்துக்கு வயதில்லை. பருவம் இல்லை, முதுமை இல்லை! உன் இதயத்தில் வீசும் தென்றலையும் காயும் நிலாவையும் நான் வாழ்வு பூராவும் அநுபவித்துக் கொண்டு இருப்பேன். நாமிருவரும் இதயங்களால் ஒன்று கலந்தோம். கால முழுவதும், இதயங்களில் குமரனும் குமரியுமாகவே என்றும் இருப்போம்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?




Click Here to join our Telegram Group

For free eBooks, join us on Telegram

https://t.me/tamilbooksworld

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?

காரூவகி, சாணக்கிய தந்திரோபாயங்களில் வளர்ந்த மௌரிய சாம்ராஜ்ய சரித்திரத்தையே, நீ அஹிம்சை அரசியலாக மாற்றி அமைத்து விட்டாய்! உலகமுள்ளளவும், கல்லும் பூண்டும் உள்ளளவும், அசோகனைக் கீர்த்தி வடிவாய் ஆக்கிவிட்டாய்! உன் காதலால்தான் அசோகனின் தர்மச் சக்கரம் நாடெங்கும் சுழல்கிறது! உன் காதலால்தான் அசோக ஸ்தூபிகள் வானளாவி எழுந்து நிற்கின்றன! காரூவகி உன்னால் தேவானாம் பிரியன் என்று புகழ் பெற்ற இந்த அசோகன் இன்னும் ஒரே ஒரு ஸ்தூபிதான் எழுப்ப வேண்டியிருக்கிறது. அதில் உன் பெயரைப் பொறிக்கப் போகிறேன்! என் பட்டமகிஷிகள் எவருக்கும் கிடைக்காத ஸ்தானத்தை அசோகன் காதலியான உனக்கு அளிக்கப் போகிறேன்!" என்று ஆவலோடு தன் கைகளை நீட்டினான் அசோகன்.

அந்த முதுமையிலும் ஒரு மோகனப் புன்னகையை உதிர்த்துக் கொண்டு அப்படியே ஓடி அசோகனின் விரிந்த கரங்களில் புதைந்துகொண்டாள் காரூவகி.

அந்த அணைப்பு அங்கு நின்ற புத்த பிக்ஷுக்கள் எவருக்கும் விகாரமாகத் தோன்றவில்லை! தன்னை மறந்த அன்பின் லயிப்பாகவேதான், அது தோன்றியது. அங்கு நின்ற இதயமற்ற இரண்டொரு அரசியல் நிபுணர்கள் மட்டுந்தான் அது சிறிது விரசம் என்று பேசிக் கொண்டார்கள்!

இவ்வாறு காரூவகி அசோகன் காதலி ஆனாள்!

அசோகன் கடைசியாக ஒரு பிரும்மாண்டமான ஸ்தூபியை எழுப்பினான். அந்த ஸ்தூபியில், "அசோகனின் சமய தத்துவக் கொள்கைகளை வளர்த்து அசோகனின் தர்ம கைங்கரியங்களில் உதவியாயிருந்தாள் காரூவகி என்னும் காதலி...." என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது.

அசோகனின் காதலியான காரூவகியைப்பற்றிய அந்தச் செய்தியை இன்றும் வானளாவி நிற்கும் அசோகன் கல்வெட்டில் பார்க்கலாம்!

*முற்றிற்று*



Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books (Pdf)?


**பிரேமா பிரசுர வெளியீடுகள்**

ஸ்ரீ விநாயகர் புராணம், ஸ்ரீ கந்த புராணம், ஸ்ரீ தேவி பாகவதம், ஸ்ரீ சிவமஹா புராணம், ஸ்ரீ அறுபத்து மூவர் கதைகள், ஸ்ரீ விஷ்ணு புராணம், ஸ்ரீ கருட புராணம், ஸ்ரீ குருவாயூரப்பன், ஸ்ரீ வன்னிய புராணம், ஸ்ரீ வசவ புராணம், ஸ்ரீ பன்னிரு ஆழ்வார்கள் கதைகள், ஸ்ரீ ஆதிசங்கரர், ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ நாரதர் புராணம், ஸ்ரீ காஞ்சி காமகோடி புராணம், ஸ்ரீமத்பாண்டுரங்க பக்த விஜயம், திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் தேவாரம் (1 முதல் 6 திருமுறைகள் 6 தனிதனி புத்தகங்களில்), திருமந்திரம், திருவாசகம்(பெரிய எழுத்தில்) திருப்புகழ், கம்ப ராமாயணம், மகாபாரதம், ஸ்ரீ ரமண மகரிஷி, ஸ்ரீ நாலாயிர திவ்வியப் பிரபந்தம், திருஅருட்பிரகாசவள்ளலார் சரிதம், வள்ளலாரின் திருஅருட்பா 1 முதல் 6 திருமுறைகள், மற்றும் இதர புராண நூல்கள், கதைகள், பொன்மொழிகள், சிந்தனையாளர் நூல்கள், ஜோதிட நூல்கள், சமுக, சரித்திர, மர்ம நாவல்ளின் விவரங்கள் கொண்ட இலவச விலைப் பட்டியலுக்குத் தொடர்பு கொள்க.

**பிரேமா பிரசுரம்**

59, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம்,
சென்னை – 600 024.

✆: 044 24800325, 24833180, cell: 9486000325
e-mail : aruram@premapirasuram.com.


Click & Join - https://t.me/tamilbooksworld